www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

செப்.01-07,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 168

# இந்திய தலையீடு



## கலைஞரின் சாணக்கியம்



## ஒப்பரேசன் பூமாலை

## இளம் ஹீரோக்களும் மார்க்கெட் நிலவரமும்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## காரணம் யார்?

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

வெள்ளம்
தலைக்கு மேலே வந்த பின்னர்தான்
அணைகட்ட வேண்டும்
என்ற நினைப்பு என்று திரும்?

ஆபத்து-
வருமுன் காப்பது,
பிரச்சனை-
வளர முன் தடுப்பது,
என்ற ஆரோக்கிய அணுகுமுறைகள்
அரசியலில் முகம் காட்டக் காணோம்!

அகதிகள் பிரச்சனையிலும்
அதுதான் கதை!
கடல் தாண்ட ஆரம்பித்தபின்னரே
அகதிகள்மீது
கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

"தினமும் ஐம்பது லொறிகளில்
உணவு அனுப்பப்படும்,
லொறிகள் தினம் புறப்படும்"
என்றெல்லாம் அறிவிக்கப்படுகிறது!

காலம் கடந்துதான்-
ஞானம் பிறப்பது வழமையாகிவிட்டது.
காலம் கடந்து கண்திறப்பதால்
யாருக்கு என்ன பயன்?

வவுனியாவில்
அகதி முகாம்களை
திறந்துவைத்துக் காத்திருந்தனர்.

வன்னிக்கு உணவு அனுப்ப
தாமதம் செய்யப்பட்டது.

இந்த நடவடிக்கைக்கு
அர்த்தம் என்ன?

அங்கே உணவுக்குத் தட்டுப்பாடு
ஏற்பட்டால் அகதிகள் இங்கே
வருவார்கள் என்ற எதிர்பார்ப்புத்தானே!

தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க
அரசியல் தீர்வு என்பது மறைந்து,
அத்தியாவசியப் பொருட்கள்
கையிலெடுக்கப்பட்டுள்ளதா?

ஆனால், நினைத்தது ஒன்று
நடந்தது வேறொன்றாகிவிட்டது.
பிள்ளையார் பிடிக்கப்போய்
குரங்கான கதையாகியிருக்கிறது.

அகதிகள்-
கடல்தாண்டிப் போய்விட்டார்கள்.
"ஏன் வந்தீர்கள்?" என்று கேட்டால்
பட்டினிக் கொடுமையைப்
பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.
வெளியுலகம் கவனித்துக்
கொண்டிருக்கிறது.

இப்போது தான்-
விழித்துக்கொண்டு,
உடனே உணவு அனுப்ப
உத்தரவு என்று செய்தி வருகிறது.

தமிழகம்
அகதிகளை ஏற்காது என்று
எவராவது நினைத்திருக்கலாம்.

கருணையை மறந்து
கதவடைக்கும் அளவுக்கு
தமிழகம் கல் மனம் கொண்டதல்ல!

தமிழகம் செல்லும் அகதிகளை
புலிகள் தடுக்கவில்லை;
ஆனால், புலிகள்தான்
அகதிகளை கட்டாயப்படுத்தி
கடல் தாண்ட வைக்கிறார்கள்
என்பதும் உண்மையல்ல.

புலிகள்-
இடம் பெயரச் சொன்னபோதும்
அடம்பிடித்து, மறுத்து
யாழ் குடாநாட்டில்
மக்கள் தங்கியிருக்கின்றனர்.

புலிகள் சொல்வதற்காக
தம் சொத்தை இழந்து,
சொந்த பந்தங்களைத் துறந்து
அகதிகள் ஆயிரக்கணக்கில்
கடல் தாண்டிச் செல்வதாக
நினைப்பது தப்புக் கணக்கு!

அகதிகள் தமிழகம் செல்வதால்
புலிகளுக்கு இலாபம்தான்!
அந்த இலாபத்துக்குக் காரணம்
புலிகளல்ல என்பதே உண்மை!

அகதிகள் தமிழகம் செல்ல
ஆரம்பிக்க முன்னர்
வன்னியில் உணவுத்தட்டுப்பாடு
இல்லையென்று
புள்ளிவிபரங்கள் காட்டப்பட்டன!

அப்படியானால், இப்போது மட்டும்
எதற்கு தினம் ஐம்பது லொறிகளில்
உணவு அனுப்பப்படுகிறது?
நேர்மாறான செயற்பாடுகளும்
நிலமைக்கு மாறான செய்திகளுமே
நிலவரம் சீர்கெடக் காரணம்!

வெள்ளம் தலைக்குமேலே
வந்த பின்னர்
அணைகட்டும் அணுகுமுறை
என்று தான் முடிவுக்கு வருமோ?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## சாந்தகுணம்

இயேசுகிறிஸ்துவின் சாந்தகுணத்தைக் குறித்து பேதுரு அப்போஸ்தலன் சாட்சி கொடுக்கும் போது, "அவர் பாவஞ்செய்யவில்லை; அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய் தீர்ப்புச செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" என்று குறிப்பிடுகிறார். (1 பேதுரு 2:22,23)

சாந்தகுணம் என்பது கோபத்தின் கொடூரத்தையும் அமைதியாக்கும் அன்பின் மலர் என்றார் ஒரு கவிஞர். சாந்தகுணம் எத்தனையோ கோபங்களையும், வைராக்கியத்தையும் அடக்கிப்போட்டு விடுகிறது. சாந்தகுணம் சத்துருவையும் நண்பனாக்கிவிடுகிறது. சாந்தகுணம் குடும்பத்தில் அமைதியையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வருகிறது. இயேசு அன்போடு சொல்கிறார்: "நான் சாந்தகுணமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" (மத். 11:29) தேவபிள்ளையே, சாந்தகுணத்தை இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து கற்றுக்கொள்வாயா?

பி.தேவபாலன்-மட்டக்களப்பு.

## அல்லாஹ்வை மறப்பதேனோ?

நீங்கள் அல்லாஹ்வைப் பற்றி அறிந்திருந்தும் ஏனோ அவன் கட்டளைகளை நிறைவேற்றத் தவறி விடுகிறீர்கள்.

இறைவனையும் இறை தூதரையும் நேசிப்பதாக கூறுகின்றீர்கள். ஆனால் வள்ளல் நபியின் வழி முறைகளைப் பேணுவதில்லை.

அல்குர் ஆனை ஓதுகின்றீர்கள். அதன்படி அமல்கள் செய்வதில்லை.

அல்லாஹ் அவன் சிருஷ்டிக்கு உணவளிக்கின்றான். இருப்பினும் இதற்கு நீங்கள் நன்றி செலுத்துவதில்லை.

ஷைத்தான் உங்களின் பகைவன் என்று கூறுகின்றீர்கள். இருந்தும் இவனுக்கு வழிவிடுகிறீர்கள்.

இத்தனையும் இதயத்தில் கொண்டு அல்லாஹ்வை மறப்பதேனோ? அவன் அடியாள் படைத்தவனுக்கு பணியுங்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.165

## பரிசுக்குரிய கவிதை

### இறுக விடாதே!

கண்களை இறுக மூடிக்கொள்!
காண்பவை யாவும் கொடுமைகள்;
இளகிய நம்மின நெஞ்சங்கள்
இறுகிவிடாமல் பார்த்துக்கொள்!

பீ.எம்.எம்.அன்ஸார்- புதுத்தெரு, வெலிகம.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்**



### பார்க்காதே!

துப்பாக்கி ரவைகளுக்கு இரையான,
அப்பாவி ஆத்மாக்களின் சடலங்களை,
எப்போதும் பார்க்காதே! உன்னையும்
துப்பாக்கி கையில் தூக்க வைக்கும்!

ஏ.ஆர்.எம்.தமீம்- கிண்ணியா-04.

### கூடாதோ?

இரும்பாய் மனிதன் மாறிவிட்டான்;
இதயம் கல்லால் ஆக்கிக் கொண்டான்.
இளைய தலைமுறை இனி மண்ணில்
எதையும் காணக் கூடாதோ?

கனகசிங்கம் தர்ஷிக்கா- கல்லடி, மட்டக்களப்பு.

### போர்

காரணக்கண் கூசுதே,
கை எடுக்க நாணுதே- போரால்
பரந்தன் கிளிநொச்சி
பட்டிருக்கும் பாட்டைப் பார்!

பி.ஸ்ரனிஸ்லாஸ்- சுங்க வீதி, திருகோணமலை.

### "ஊர்" வலம்

வழிமுழுதும் மண்டையோடு;
பாயுதிங்கு குருதியாறு;
கால்முழுக்க சதைச்சேறு;
அழுவதெங்கள் வாழ்க்கைப் பாடு
ஆயுதத்தை தூரப்போடு!

சுபா வரன்- கண்டி.

### ஓட்டம்

கலங்காமல் கலங்குகிறோம்!
கண் விழிக்கத் தயங்குகிறோம்!
ஓயாத ஷெல் அடியால்
ஓடாமல் ஓடுகின்றோம்!

டி.ரூபசாந்தி- பூம்புகார் வீதி, கிரான்.

### கலங்காதீர்

வழி யேதும் புரியாமல்
விழி மூடி அழுவதனால்
வழி யேதும் பிறக்காது!
கரை காணவேண்டுமெனில்
கண்மணிகாள் கண்திறங்கள்!

எம்.எச்.எம்.தௌபீக்- புதிய காத்தான்குடி.

### விதி!!

கால் நடையாக நாம்
காத தூரம் போகுமுன்னே
'ஷெல்' வந்து நம் கண்ணில்
சில்லாகப் பாயுதடா!
இதுவன்றோ விதி நமக்கு!!

காரைதீவூர்-சிவம்- குருக்கள்மடம்.

### சமாதானம்

கண்ணைமூடி வந்தாலும்
காதினிலே கேட்கும் அவலக்குரல்
என்று தான் மாறுமோ
நாம் இன்பமுடன் விளையாட?


கே.லெட்சுமணன்- மெஜெஞ்சர் வீதி, கொழும்பு-12.

### திசையறியா வாழ்வு

இமை மூடி வாழ்வில்....
தலை நொந்து சோர்வில்.....
சுமை ஒன்று முதுகில்....
திசை இழந்து தெருவில்!

குறிஞ்சிக் கிழான்- பேராதனை வளாகம்.

# கவிதைப் போட்டி இல-168



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை **கவனியுங்கள்** வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி- 07.09.1996

—முகவரி—

கவிதைப் போட்டி இல.168 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### முடிவு எப்போது?

துணைவருவார் யாரும் இல்லை
துயரக் கண்ணீர் சொல்லியழ;
அகதிமுகாம் தஞ்சம் இனி
போர் முடியும் காலம் வரை!

ஏ.முஹாஜீரீன்- புல்மோட்டை-04.

### தவிப்பு

பூத்தகொடி எரிந்திடவே பூக்கள் அலைகின்றதே!
சேர்த்து அணைத்திடவே உறவினம் வெறுக்கின்றதே!
காத்துத் துணைநிற்க கடவுளும் மறுக்கின்றதே!
பார்த்து வழி நடக்க கண்ணீர் மறைக்கின்றதே!

சி.சிறீ கைலைநாதன்- வவுனியா.

# வாசக(ர்) சாலை

எல்லோர் மனங்களிலும் எழும் கேள்வியை "முரசம்" கொட்டியதற்கு நன்றி. ரசிகனின் இலக்கிய நயம் புலிகளின் தாக்குதல் போல் வித்தியாசமாக இருக்கிறது. "தொடரட்டும் உங்கள் பணி!" காட்டூன் எங்கே?

சுபா வரன், கண்டி.



'காதில பூ கந்தசாமி' பகுதியில் கவுண்டமணி-செந்தில அரசியல் 'டிஸ்கஷன்' எம்மை சிரிக்கவும்- சிந்திக்கவும் வைத்தது. குறிப்பாக அதில் வெளியான 'பாணையிருக்கும் தண்ணியிருக்கும்- பசும் பாலிருக்காது.' என்ற பாடல் தொடர் வெகு ஜோர்!!

பாடலை தனது தனிப்பட்ட பாணியில் சுவைபட அமைத்துத் தந்த 'காதில பூ கந்தசாமியை' பாராட்டாமல் இருக்க முடியவில்லை! தொடரட்டும் அவர் பணி! பாராட்டுவது நம் பணி!

செல்வன் கே. வின்சன்ட்-ஜெயா, மட்/சத்துருக்கொண்டான்.

என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர்! அதிலும் தேன்கிண்ணம் வர்ணிக்கமுடியாத ஒன்று. பூலானின் கதை படு சூப்பர். இதிலும் நான் விரும்பிப்படிக்கும் சிந்தியா பதில்கள் அசத்துகின்றன. சிந்தியா ஒவ்வொரு கேள்விக்கும் படு ஜோராக பதில் கூறுகிறார்.

எனவே, முரசே உனது பணி தொடர்ந்தும் இனிதே நடைபெற எங்களது வாழ்த்துக்கள்.

முரசே நீ வாழ்க! வாழ்க.

றோஹான் ராஜ், நர்மதா, தர்ஷினி, லின்டா, வாணி, அஷோக், பாலா, மேனகா, அகிலன், ராஜு- இரத்தினம் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

பேசலாம் பேசலாம் பேசிக் கொண்டே இருக்கலாம். அழகான யோசனை, காதிலை பூ. கந்தசாமியாரே!

பூலான் தேவியின் ஒவ்வொரு அங்கமும் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்துகிறது. ரசிகனுக்கு சபாஷ் போட வைக்கிறது.

பத்மா டெமிசி, சரவணேஸ் டெமிசி, இறம்பொடை.

அமுதினுமினிய தெவிட்டாத தேன் முரசுக்கு! வாரம் பிறக்கும் முன் உன் வரவை எதிர்பார்க்க வைக்கும் உனது அனைத்து ஆக்கங்களும் மிக மிக பிரமாதம். அதிலும் "தா" தொடர்கதையும் பூலான்தேவியின் தொடரும், அருமையிலும் அருமை.

கே. இராஜேந்திரன், வங்கி ஓயா எஸ்டேட், நானுஓயா.

என் அன்பிற்கினிய முரசே,

ரசிகனின் "கொள்ளை ராணி" பூலான் தேவியின் உண்மைச் சம்பவம் ஜோர்.

காதிலை பூ கந்தசாமி சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றது. அந்த நாள் ஞாபகம் புகைப்படம் சூப்பர். முரசுக்கு எனது கோடி வாழ்த்துக்கள்.

செல்வி ரா.ராதா, செங்கலடி.

முரசே!

வாரந்தோறும் நீ தரும் ஆக்கங்கங்கள் அனைத்தும் பிரமாதம். ஆசிரியர் கருத்து நடைமுறை நிகழ்வுகளை அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டுகின்றது. பூலான்தேவி தொடரில் சிறுவயதில் பூலானுக்கு நடந்த கொடுமையை படிக்கும்போது மிகவும் வேதனையாக உள்ளது. அத்துடன் பட்டுக் கோட்டை பிரபாகரின் 'தா'வில் அப்பாவி மதன் அடிபடுவதை பொறுக்க முடியவில்லை.

புனிதா வேலுப்பிள்ளை, வேவல்கந்துர, கலவான.

அன்பின் முரசே!

காதிலை பூ கந்தசாமி காலத்திற்கேற்ப பூ சுத்துகின்றார். அவரின் உரை நடை மிகவும் அபாரம். கடத்தல் மன்னன் கார்லோஸின் கதையைவிட பூலான் தேவியின் கதை உள்ளத்தை உருக்குகின்றது. தரும் முரசுக்கு நன்றி.

திருமதி முத்துலெட்சுமி, நிக்கலோய எஸ்டேட்.

மிஸ்டர் கிரைம் மன்னன் பிரபா, தனக்கே உரித்தான பாணியில் தா! தொடரை வாரந்தோறும் எமக்கு வழங்கி மகிழ்ச்சியின் எல்லைக்கே அழைத்து சென்று விட்டாரே? வாழ்க உமது புகழ், வளர்க முரசின் பணி.

ரவிஷங்கர், சுரேஷ், அலவத்துகொட.

தேனும் சிலவேளை ருசி அற்றுப் போகலாம்! நீ அப்படியல்ல தினமுரசே, வாரம் ஒரு முறை மலர்ந்தாலும் நான் தினமும் உன்னை ரசிக்கின்றேன். கொள்ளை ராணி பூலான் தேவி மன்னிக்கவும்- தற்போது இந்திய பாராளுமன்ற உறுப்பினரைப் பற்றி எம் நாட்டிற்கு மட்டுமல்ல இன்னும் பல நாட்டிற்கு எடுத்துக் காட்டுகின்றீரே! என் பாராட்டுக்கள். வளர்க உன் சேவை.

பாலமுனை வாஹிட்.

முரசின் தரத்தை மேம்படுத்தும் 'நாரதர்' 'அற்புதன்' 'இராஜதந்திரி' போன்றோர் தற்கால அரசியல் நிலையை தரும் கண்ணோட்டம் அபாரம். முகம் காட்டாது "பூலான் தேவி" "இலக்கிய நயம்" சுவையான ஆக்கம் தரும் ரசிகனே! உன் திருமுகம் காட்டுவது எப்போது? பட்டுக்கோட்டை பிரபாகரின் "தா" தொடர் தூளோ தூள்.

நினோஸா பைஸல், பேருவலை.


படிப்பகம்

www.padippakam.com

# பத்தாயிரம் அகதிகளைத் தமிழகம் அனுப்பத் திட்டம்

# விரும்பி வெளியேறுவோருக்கு புலிகள் உதவி!

## புலிகளைத் தடுக்க தமிழக அரசு நாடகம்

**வன்னியில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் தமிழகம் செல்ல விரும்பினால் புலிகள் அனுமதி வழங்குவர். குறைந்தது பத்தாயிரம் பேராவது தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்வதை புலிகள் விரும்புவதாக நம்பப்படுகிறது. தமிழகத்தில் மீண்டும் அனுதாப அலையை உருவாக்கவும், இந்திய அரசுக்கும், தமிழக மாநில அரசுக்கும் பிரச்சனையின் தீவிரத்தைப் புரியவைக்கவும் அகதிகள் பிரச்சனை உதவும் என்று புலிகள் நம்புகின்றனர்.**

வன்னியில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் தம்மீது அதிருப்தி கொள்ளாதவகையில் நிலமைகளைக் கையாளத் தொடங்கியுள்ளனர் புலிகள் இயக்கத்தினர்.

வன்னியில் உணவுத் தட்டுப்பாடு, மற்றும் மருத்துவ வசதியின்மைகள் காரணமாக அங்குள்ள மக்களில் ஒரு பகுதியினர் வெளியேற விரும்புவர். அது இயல்பானதாகும்.

அவ்வாறு வெளியேற விரும்பும் மக்கள் முன்பாக இரண்டு வழிகள் இருக்கின்றன.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ் குடாநாட்டுக்கு அல்லது வவுனியாவுக்கு தம்மைச் செல்ல அனுமதிக்குமாறு புலிகளிடம் கோருவது: அது ஒரு வழி.

தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் செல்வது இரண்டாவது வழி.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இயல்பான வாழ்க்கை நிலை இருந்தால்தான் அங்கு செல்லும் எண்ணம் ஏற்படும்.

அந்த எண்ணத்திற்கு ஆப்பு வைக்கும் வகையில் யாழ் குடாநாட்டில் கெரில்லா தாக்குதல்களை புலிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது தவிர முல்லைச் சமரின் பின்னர் யாழ் குடாநாட்டுக்கான கடல் போக்குவரத்தும் தடைப்பட்டுவிட்டது.

யாழில் நடந்த கரும்புலித் தாக்குதல், மற்றும் அங்கு தொடரும் மோதல்கள் போன்றவற்றால் யாழ் செல்ல விரும்பி தமது பெயர்களைப் பதிவு செய்த பலர் தயங்கிவிட்டனர்.

### வவுனியாவில்

இந்நிலையில் வவுனியா சென்று தங்கியிருப்பது பரவாயில்லை என்றும் ஒரு குறிப்பிட்டளவான அகதிகள் நினைத்திருந்தனர். அந்த எண்ணத்திற்கும் ஆப்பு வைக்கும் விதமாக வவுனியாவில் புலிகள் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்லவிரும்பும் மக்களை தாம் தடுக்கும் நிலை ஏற்படாமல், அங்கு செல்ல முடியாத நிலை இருப்பதை உணரவைப்பதுதான் புலிகளின் திட்டமாக இருக்கிறது.

வடக்கு-கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சகஜ நிலை நிலவமுடியாது என்பதை வெளிப்படுத்துவதே புலிகளின் திட்டமாக இருக்கிறது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சிறு ரக ஆயுதங்கள் மற்றும் கைக்குண்டுகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதும் புலிகளின் திட்டங்களில் ஒன்றாகும்.

மட்டக்களப்பு, திருமலை, வவுனியா போன்ற பகுதிகளில் அவ்வாறான தாக்குதல்கள் தொடரலாம் என்று கருதப்படுகிறது.

இவ்வாறன நிலையில் வன்னியில் உள்ள மக்களில் வேறு பகுதிகளுக்கு செல்ல விரும்புவோர் தமிழகத்துக்குச் சென்றால் மட்டுமே பத்திரமாக இருக்க முடியும் என்று கருதும் நிலை ஏற்படும்.

எனினும் பெருந்தொகையானோர் அவ்வாறு விரும்பமாட்டார்கள். பத்தாயிரம் பேர் வரை தமிழகம் செல்வதை அனுமதிக்கலாம் என்பதுதான் புலிகளின் எண்ணமாகும் என்று தெரிய வருகிறது. வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கிட்டத்தட்ட ஆறு இலட்சம் மக்கள் இருக்கின்றனர். அதில் பத்தாயிரம் பேர் வரை அகதிகளாகச் செல்வதால் பாதிப்பு இல்லை என்று புலிகள் நினைப்பதாகத் தெரிகிறது.

### இருவர் கைது

கடந்த 23.08.96 அன்று அகதிகள் தமிழகம் சென்று இறங்கியுள்ளனர். தமிழக சட்டசபையிலும் அகதிகள் பிரச்சனை பற்றி பேசப்பட்டுள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், இலங்கைத் தமிழ் அகதிகள் வருவதைத் தடுக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார்.

இம்முறை தி.மு.க. அரசு பதவிக்கு வந்தபின்னர் தமிழக சட்ட சபையில் முதன் முதலாக கலைஞர் கருணாநிதி ஜனாதிபதி சந்திரிக்காவின் பெயரைக் குறிப்பிட்டு பேசியுள்ளார். "சந்திரிக்கா அரசின் நடவடிக்கைகளால் தமிழர்கள் பலியாகின்றனர்," என்று அவர் கூறியுள்ளார்.

அதேவேளை இராமேஸ்வரத்தில் தொலைக்காட்சி கோபுரத்தைத் தகர்க்க முயன்றவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் செய்திகள் வெளியாகின.

கைதுசெய்யப்பட்ட இருவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். அந்தக் கைது நடவடிக்கை ஒரு நாடகம் என்று நம்பப்படுகிறது. அகதிகளோடு புலிகள் தமிழகத்திற்குள் ஊடுருவுவதை தடுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளை நியாயப்படுத்தவே அந்த நாடகம் என்று கருதப்படுகிறது. தமிழகத்தில் உள்ள புலிகளின் ஆதரவாளர்களை கட்டுப்படுத்தி வைத்திருக்கவும் தமிழக அரசு விரும்புகிறது.

கைதுசெய்யப்பட்டவர்கள் புலிகள் அல்ல. ஆனால் அவர்களது நோக்கம் என்னவென்று தெரியவில்லை, என்று கலைஞர் கருணாநிதி பிடிகொடாமல் பேசியுள்ளார்.

எப்படியிருப்பினும் அகதிகள் செல்லத் தொடங்கியிருப்பது இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றிய கவனிப்பை மீண்டும் தமிழகத்தில் தோற்றுவித்துள்ளது. ■

# படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் கிரனைட் குறூப்?

## புலிகளின் சமீபகால நடவடிக்கைகளால் சந்தேகம்

திருக்கோணமலையில் உள்ள ரெலோ இயக்கக் காரியாலயத்தில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் பலியானார். ஆறுபேர் காயமடைந்தனர். 26.08.96 அன்று அதிகாலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

கைக்குண்டு வெடித்ததில் ரெலோ இயக்க நிர்வாகச் செயலாளரும் திருமலை மாவட்டப் பொறுப்பாளருமான பாஸ்கரன் பலியானார்.

இச் சம்பவம் நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு திருமலை கடற்கரையில் ரெலோ இயக்கத்தினரால் தேனிசை இரவு இசை நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. வெலிக்கடை சிறையில் பலியான போராளிகளது நினைவாக திறந்தவெளி மேடை ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

கைக்குண்டு வெடித்தபோது அலுவலக அறையொன்றில் ரெலோ இயக்கத் தலைவர் வினோதலிங்கமும் தூங்கிக்கொண்டிருந்தார். அவர் தூங்கிக்கொண்டிருந்த அறைக்கு அருகில் இருந்த மற்றொரு அறையிலேயே கைக்குண்டு வெடித்தது.

ரெலோ அலுவலகத்தின் முன்புறம் 24 மணி நேரமும் ஆயுதம் தாங்கிய சென்றி இருக்கும். அலுவலகத்தின் பின்புறமாக உள்ள அறையில்தான் குண்டுவெடித்துள்ளது. குறிப்பிட்ட அறைக்குச் செல்ல வேண்டுமானால் சென்றியைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். சென்றிக்கு தெரியாமல் சென்றிருந்தாலும் கைக்குண்டு வெடித்தவுடன் கேட்ட சத்தத்தில் சென்றியில் இருந்தவர் உஷாராகியிருப்பார். அதனால் கைக்குண்டை வீசியவர் தப்பி ஓடியிருக்க முடியும் என்பது புதிராக உள்ளது.

மேலும் சமீபத்தில் ரெலோ இயக்கத்தினர் திருமலையில் புதிதாக உறுப் பினர்களை சேர்த்திருந்தனர் என்றும் அறியப் படுகிறது. அந்த உறுப்பினர்களில் யாராவது ஒருவர் மூலமாக ஊடுருவல் நடைபெற்றிருக் கலாமா என்றும் ஒரு சந்தேகம் நிலவுகிறது.

இதேவேளை திருமலையில் சமீபகாலத்தில் கைக்குண்டுத் தாக்குதல்கள் சிலவற்றை புலிகள் நடத்தியுள்ளனர்.

திருமலையில் தென் கொரிய தொலைத் தொடர்பு நிலைய ஊழியர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு புலிகள் இயக்கத்தினரால் கைக்குண்டு வீசப்பட்டது.

தம்பலகாமம் கிராமசேவையாளர் வீடு ஒன்றுக்கும் கைக்குண்டு வீசப்பட்டது.

முன்னர் திருமலையில் புலிகள் இயக்கத்தினரின் 'பிஸ்டல் குரூப்' ஒன்று நடமாடியது. தற்போது 'கிரனைட் குறூப்' ஒன்று திருமலையில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ளதாக கூறப் படுகிறது.

பிஸ்டலால் சுடப்பட்டால் பாதிப்பு குறைவாக இருக்கும். கிரனைட் வீச்சு என்றால் ஒரே குறியில் பலரை பாதிக்கச் செய்யலாம் என்பதால் புலிகளின் நகர்ப்புற கெரில்லாக்கள் கைக்குண்டுகளை பாவிக்க ஆரம்பித்துள்ளனர் என்று நம்பப்படுகிறது.

# இலங்கைத் தமிழர்களுக்கு அனுதாபம்

## தமிழக சட்டசபையில் கலைஞர்

"தமிழகத்தில் உள்ள கள்ளக் கடத்தல் காரர்கள் புலிகளைப் பயன்படுத்திக்கொள் கிறார்கள். அவர்கள் (புலிகள்) இவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ இல்லையோ கள்ளக் கடத்தல்காரர்கள் புலிகளைப் பயன்படுத்துகிறார்கள்." இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 23.08.96 அன்று தமிழக சட்டசபையில் தெரிவித்தார்.

தமிழகத்தை வன்முறைக் களமாக்கும் வகையில் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதை நிச்சயம் ஆதரிக்க மாட்டோம்.

புலிகளுக்கு மானசீகமாக ஆதரவு தெரிவிப்பது என்பது வேறு. செயல்வடிவமான ஆதரவு தெரிவிப்பது என்பது வேறு.

புலிகளுடைய பிரச்சனையையும், சந்திரிக்கா அரசின் நடவடிக்கை காரணமாக அப்பாவித் தமிழர்கள் பலியாகும் பிரச்சனையையும் தனித்தனியாகப் பார்க்கவேண்டும். அப்பாவித் தமிழ் மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்க வேண்டும் என்பது நம் அனைவரதும் கருத்து.

ஒன்றை உறுதியாகக் கூறுகிறேன், எந்த வன்முறைச் சக்திகளுக்கும், அவை நல்லவற்றுக்காகப் பாடுபடுகிறவையாக இருந்தாலும் சட்டவிரோத, வன்முறைக் காரியங்கள் நடைபெற இடம்தரமாட்டோம்" என்றும் கலைஞர் மேலும் தெரிவித்தார்.

வை. கோபால்சாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு.க. இளைஞர் அணியைச் சேர்ந்தவர்கள் புலிகளுக்கு தமிழ்நாட்டிலிருந்து பொருட்களை அனுப்ப முயன்ற போது கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர் என்றும் கலைஞர் தெரிவித்துள்ளார். ■

# கற்பிட்டியில் சோதனை தீவிரம்! பயணிகள் திண்டாட்டம்!

(மன்னார் நிருபர்)

மன்னாரிலிருந்து படகுகள் மூலம் கற்பிட்டி வரும் பயணிகள் தற்போது என்றுமில்லாதவாறு மிகத் தீவிரமான சோதனையை எதிர் நோக்கியுள்ளனர்.

படகிலிருந்து இறங்கிய பயணிகள் சுமார் 3 மணி நேரம் வரை சோதனைக்காக காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மாலை 7 மணிக்கு வந்து சேரும் பயணிகள் இரவு 10 மணிக்குப் பின்னர் தான் வெளியே வர முடிகிறது. வயது முதிர்ந்தவர்கள். பெண்கள் நோயாளிகள் ஆகியோருக்கும் இதுதான் கதி.

இங்கு உடல் மட்டும் இருமுறை சோதிக்கப்படுகிறது. பொதிகளும் தீவிரமாக சோதிக்கப்படுகின்றன. பின்னர், செல்லும் இடம், செல்வதற்கான காரணம், அங்குள்ள உறவினர் விபரங்கள் என்பன துருவித் துருவி அறியப்படுகின்றன. பொலிஸினால் வழங்கப்படும் பாஸும் சோதிக்கப்படுகின்றது.

# கண்டனத்திற்குள்ளாகும் மட்டக்களப்பு போ.வ.சேவை

## கடமை தவறும் சாரதிகளும் நடத்துநர்களும்

(ஏறாவூர் நிருபர்)

நீண்ட காலமாக மட்டக்களப்பு, வாழைச்சேனை இ.போ.ச.வினால் மேற்கொள்ளப் பட்டு வரும் போக்குவரத்து பஸ் சேவை பொதுமக்களின் பரவலான கண்டனத்திற்கு உள்ளாகிவருகிறது.

குறித்த இரு டிப்போக்களின் பஸ் சேவைகளும் அங்கு தொழில் புரியும் அதிகாரிகளினதும் சில பஸ் சாரதிகள், பஸ் நடத்துநர்கள் ஆகியோரின் விருப்பு வெறுப்பின் படியே நடைபெறுகிறது. பயணிகளைப் பற்றி அவர்கள் சிந்தித்தும் கவனத்திலெடுத்ததாகத் தெரியவில்லை.

இவ்விரு டிப்போக்களிலும் தொழில் புரியும் சில ஊழியர்கள் கடமை தவறியுள்ளதை டிப்போ அதிகாரிகளே ஏற்றுக்கொண்டுள்ளனர். கடமை தவறும் ஊழியர்களுக்கெதிராக ஒரு சில வேளைகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், பலர் அதிகாரிகளைக்கூட "சமாளித்து"விடுமளவுக்கு திறமை பெற்றிருக்கிறார்கள்.

இவை தவிர சில சாரதிகளும் பஸ் நடத்துநர்களும் பயணிகளிடம் நடத்தை தவறி நடந்து கொள்வதைக் காணமுடிகிறது. குறிப்பாக கொழும்பு-மட்டக்களப்பு சேவையில் ஈடுபடும் பஸ்சாரதிகளும் நடத்துநர்களும் வெளிநாட்டில் வேலைபார்த்துவிட்டு வீடு திரும்பும் ஏழைப் பணிப் பெண்களிடம் சாதாரண பஸ் கட்டணத்தைவிட பன்மடங்கு பணம் பறித்துக் கொள்வதோடல்லாமல் அவர்கள் கொண்டுவரும் பொருட்களிலும் பங்கு கேட்பதாக அறியமுடிகிறது.

இதேவேளை சில நடத்துநர்கள் பெண்கள் மீது சேட்டைகளில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது. இத்தகவல்களை டிப்போ வட்டாரங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

இது தவிர, இ.போ.ச. பஸ்கள் பயணிகளின்றி வெறுமையாகச் சென்றபோதும் நிறுத்தும் பயணிகளை ஏற்றாது தங்கள் பஸ்ஸின் பின்னால் வரும் தனியார் பஸ்களுக்காகப் பயணிகளை விட்டுச் செல்கிறார்கள். பின்னர் அந்த உதவிக்காக குறித்த தனியார் பஸ்காரர்கள் இந்தப் "பெருந்தன்மையுள்ளகில்லாடி" இ.போ.ச. பஸ் சாரதிகளுக்கு ஒரு தொகைப் பணத்தைக் கைக்குள் திணிக்கிறார்கள்.

சென்ற 24.08.96 அன்று இதே சம்பவம் மட்டக்களப்பில் நடந்தது. அன்றுமாலை மட்டக்களப்பிலிருந்து செங்கலடி நோக்கிப் புறப்பட்ட வாழைச்சேனை டிப்போவின் R.261 இலக்கமுடைய பஸ்ஸின் சாரதி தனக்குப் பின்னால் புறப்பட தயாராகவிருந்த தனது நண்பனின் தனியார் வேன் ஒன்றுக்குப் பயணிகளைத் தனது பஸ்ஸில் ஏற்றாது அதி வேகமாக பஸ்ஸைச் செலுத்திச் சென்றார்.

சிலர் செய்யும் தவறுகளால் பஸ்சாரதிகள், பஸ் நடத்துநர்கள் அனைவருக்குமே கெட்ட பெயர் ஏற்படுவதாக நேர்மையான ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். ●

# புலிகளுக்கு மீனும் லொறியும்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனையிலிருந்து கொம்மாதுறைப் படைமுகாமுக்கு மீன் ஏற்றிச் சென்ற லொறியை வந்தாறுமூலை மாவடி வேம்பில் வழி மறித்த புலிகள், லொறிச் சாரதியையும் உதவியாளரையும் கீழிறக்கி விட்டு மீனுடன் லொறியைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் 24.08.96 அன்று இடம் பெற்றது. வாகனக் கடத்தலை தடுக்கப் படையினர் வீதிக்குக் குறுக்கே அகழி தோண்டி வைத்திருந்த சித்தாண்டிக்கு மிக மிகச் சமீபமாகவே இந்த லொறி கடத்தப்பட்டது. இதனால் படையினர் ஏமாற்றத்திற்குள்ளாகினர்.

# முஸ்லிம்களுக்கு புலிகள் வேண்டுகோள்!

## தலைவர்களுக்கும் புலிகள் கண்டனம்!

அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அரசியற்பிரிவு, தமிழீழ விடுதலைப் புலிகள், மட்டக்களப்பு அம்பாறைப் பிராந்தியம், தமிழீழம் என்ற பெயரில் பிரசுரம் வெளியாகியுள்ளது.

அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக தாம் போட்டியிட இருக்கும் தொகுதிகளில் மட்டும் அபிவிருத்தி பற்றி பேசுவதுடன், தம்மைக் கொல்ல சதி நடப்பதாகவும் அரசியல்வாதிகள் கூறித்திரிகிறார்கள் என்றும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப் பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: "எப்போதும் அன்பான முஸ்லிம் சோதரர்கட்கு! இன,மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட சுதந்திர தேசம் நோக்கிய எமது போராட்ட, பயணத்தில் நீங்கள் செய்திருக்கின்ற, செய்கின்ற பங்களிப்புக்கள் வரலாற்றினால் மறக்கப்பட முடியாதவை; மதிக்கப்பட வேண்டியவை.

ஒரே மொழியைப் பேசி, ஒரே தொழில் மூலகங்களைக் கொண்டு ஒரே பிரதேசத்திலே பிட்டும் தேங்காய்ப்பூவும் போல் என்று பெரியோர் கூற வாழ்ந்திருந்தோம். இன்று நம்மைப் பிட்டு வைப்பதற்காக பேரினவாதமும் அதற்குத் துணை போகின்றவர்களும் முயற்சிக்கின்றனர். எமது நல்வாழ்வைவிட தமது செல்வாக்கை உயர்த்துவதில்தான் அவர்களுக்கு அதிக ஆசை. அவர்களை நீங்கள் அடையாளம் காணவேண்டும்.

வடக்கையும்-கிழக்கையும் இணைய விடமாட்டோம். தமிழீழம் கிடைக்காது என்றெல்லாம் பேசுவது உலக விவகாரங்களில் முதிர்ச்சியான அறிவாற்றல் உள்ளோரின் கருத்தல்ல, என்றும் அப்பிரசுதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# வவுனியாவில் புலிகளின் தாக்குதல்!

## சிவில் நிர்வாக சீர்குலைப்பில் ஒரு கட்டம்

வவுனியா நகரில் கடந்த 27.8.96 அன்று புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வவுனியாவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

'வடக்கு-கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சிவில் நிர்வாக செயற்பாடுகளை சீர்குலைப்போம்' என்று புலிகள் இயக்கத்தினர் அறிவித்தமை தெரிந்ததே. அச் செய்தி முரசில் பிரசுரமாகியிருந்தது.

வடக்கு-கிழக்கில் அரச கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வவுனியா நகர் மட்டுமே இதுவரை புலிகள் இயக்க அச்சுறுத்தல் இல்லாத பகுதியாகக் கருதப்பட்டு வந்தது. அமைதியும் நிலவியது. சிவில் நிர்வாகமும் ஒழுங்காக நடைபெற்றுவந்தது.

வன்னியில் இருந்து வரும் அகதிகளுக்கு வவுனியாவில் அகதி முகாமும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது.

வன்னியில் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகை அகதிகளும் வவுனியாவுக்கு வந்திருந்தனர். அதனைத் தடுக்காவிட்டாலும், வவுனியாவுக்கு அகதிகள் செல்வதை புலிகள் விரும்பவில்லை.

வவுனியாவில் சகஜ நிலை நிலவும்வரை வன்னியில் இருந்து செல்லும் மக்களை தடுப்பது தமக்குத்தான் கெட்ட பெயரை ஏற்படுத்தும் என்று புலிகள் நினைத்தனர்.

அதுதவிர வவுனியாவில் இருந்து இராணுவ நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பிக்கக் கூடும் என்றும் புலிகள் கூறி வந்தனர்.

இவ்வாறான காரணங்களால்தான் வவுனியாவில் சிறு தாக்குதல் ஒன்றுக்குப் புலிகள் திட்டமிட்டனர். புலிகள் இயக்கத்தினரின் தாக்குதலையடுத்து நடைபெற்ற சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் பலியாகியும், படுகாயமடைந்தும் வவுனியா நகர் அல்லோல கல்லோலப்பட்டது. வெடிச் சத்தம் கேட்டு விரைந்த புளொட் இயக்கத்தினரும் அடையாளம் காணப்படாமல் துப்பாக்கி பிரயோகத்துக்கு உள்ளானார்கள்.

தமது நடவடிக்கையின் பின்னர் வவுனியாவில் பாதுகாப்புக் காரணங்களுக்கான கெடுபிடிகள் அதிகமாகும். முன்னர் போல சகஜ நிலை நிலவுவது கடினம். வவுனியாவில் பத்திரமாக இருக்கமுடியும் என்று கருதி அங்கு செல்ல நினைத்தவர்களும் இனிமேல் செல்லமாட்டார்கள் என்பதே புலிகள் இயக்கத்தினரின் நோக்கமாகும்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மேலும் தாக்குதல்களில் புலிகள் ஈடுபடக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன.

# முல்லைக் கிணறுகளில் ஆயுதங்கள்

முல்லைத்தீவில் சென்று குடியேறியுள்ள மக்கள் கிணறுகளைச் சுத்தம் செய்யும் போது ஆயுதங்கள் பலவற்றைக் கண்டெடுத்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு நகருக்கான பஸ் சேவை ஒன்றை புலிகள் ஆரம்பித்துள்ளனர். 19.08.96 முதல் அப்போக்குவரத்து ஆரம்பமானது. தண்ணீரூற்று வழியாக மாங்குளத்திற்கும், முல்லைத்தீவு நகருக்குள் மற்றொரு சேவையும், புதுக்குடியிருப்பு வழியாகப் புளியம் பொக்கணைக்கு இன்னொரு சேவையும் நடத்தப்படுகிறது. 'தமிழீழ போக்குவரத்து சேவை' என்ற பெயரில் பஸ்சேவை நடத்தப்படுகிறது.

முல்லைத்தீவு நகரில் புதிதாக பஸ்தரிப்பிடம் ஒன்றைத் திறந்துள்ளதுடன், அதன் முன்பாக பாண்டியன் சிறப்பங்காடி என்ற பெயரில் கடை ஒன்றையும் புலிகள் திறந்துள்ளனர். ●


படிப்பகம்

# "தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும்! தீர்வினைப் பெற்றுக்கொடுக்க போராடுவேன்!"

## -மஹாகல்கடவல புண்ணியசார தேரர்-

(குருநாகல் நிருபர்)

"பண்டைய இலங்கையில் இரு இனத்தவர்களும் சமாதானமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். முன்பு இடம் பெற்ற யுத்தங்களும் அரசபதவிக்காகவே நடைபெற்றன. இனவாதம் காணப்படவில்லை. சரித்திர நிகழ்வுகளுக்கு இனவாதச் சாயம் பூசிய அரசியல்வாதிகள் தங்கள் நன்மைக்காக நாட்டைக் குட்டிச் சுவராக்குகின்றனர். தமிழர்கள் எம் நாட்டுப் பிரஜைகள்; எம் சகோதரர்கள். எனவே அவர்கள் சகல உரிமைகளையும் பெற்று இந்த நாட்டில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்." இப்படித் தெரிவித்தார், கொக்கல்ல விகாரை பிரதம குரு மஹாகல்கடவல புண்ணியசார தேரர்.

இலங்கையில் நீதிக்கும், சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் திருகோணமலைக் கிளையினரால், திருகோணமலை சனச மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இனப்பிரச்சனை சம்பந்தமான ஒரு நாள் செயலமர்வில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தமதுரையில், "இன்று அஸ்கிரிய மகாநாயக தேரரால் இனப்பிரச்சனை தீர்வுத் திட்டத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கும் எதிர்ப்பு அவரின் சொந்தக் கருத்தேயன்றி முழு மகாசங்கத்தினரதும் கருத்து அல்ல. மகாசங்கத்திலும் அதிகாரம் பிரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு, பல பகுதிகளில் புத்தபிக்குகள் பிரிந்து சென்று, தங்களுக்குள் தனியான மகா சங்கங்களை உருவாக்கி உள்ளனர். அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக தேரர்கள் இலங்கையிலுள்ள முழு பௌத்த பிக்குகளாலும் தெரிவு செய்யப்படுவது இல்லை. கண்டிப் பகுதியைச் சார்ந்த சிலரால் மட்டுமே தெரிவு செய்யப்படுகின்றனர். எனவே தமிழர்களுக்கு பிக்குகள் எதிரிகள் என்ற மனோநிலையில் இருந்து தமிழர்கள் மீள வேண்டும். உங்கள் உரிமைகளை வென்றெடுக்க பெரும்பான்மையான பிக்குகள் களத்தில் இறங்கிப் போராடத் தயாராக உள்ளோம். சிங்கள மக்களும் தயாராக உள்ளனர். சமாதானத்தை விரும்பாதவர்கள் அரசியல்வாதிகளும், இலங்கை விலுள்ள மேற்குடி வியாபாரிகளும், சில பிக்குகள் மட்டுமே. எனவே தமிழர் உரிமைக்கான எம் போராட்டம் தொடரும்" எனத் தெரிவித்தார்.

திருகோணமலையில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டத்தில் மூவின மக்களும், சமயப் பெரியார்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ●

# பாழடைந்த நிலையில் இந்து ஆலயங்கள்

## கோவில் வீதியில் அந்நிய குடியேற்றம்!

(திருமலை நிருபர்)

திருக்கோணமலை நகரத்துக்குள்ளேயே பல இந்து ஆலயங்கள் தொடர்ந்தும் பல ஆண்டுகளாக பூசை வழிபாடுடன் இன்றிப் பாழடைந்த நிலையில் காட்சி அளிப்பது பற்றி சைவாபிமானிகள் கவலை கொண்டுள்ளனர்.

வன்செயல் காரணமாகப் பாழடைந்த நிலையில் பல பிரதான ஆலயங்கள் இன்றும் காட்சியளிக்கின்றன. விஸ்வநாத சுவாமி கோவில் இன்னும் பூரணப்படுத்தப்படாத நிலையில் கும்பாபிஷேகமின்றி வாடிப் போய்க் கிடக்கிறது.

வீரகத்திப் பிள்ளையார் கோவில் வீதிகளைப் பெரும்பான்மை இன மக்கள் அடாத்தாகக் கைப்பற்றிக் குடியேறியுள்ளனர். இவர்களை அகற்றி ஆலயத்தைப் புனரமைக்க வகையின்றி நிருவாகம் திணறுகிறது.

சின்னத் தொடுவாய் விநாயகர் ஆலயம் அண்மையில் பக்தர்களால் துப்புரவு செய்யப்பட்டது. துப்புரவு செய்ய விடாமல் அங்கே அடாத்தாகக் குடியேறிய சிலர் தடுக்க முயன்றபோதும் அம்முயற்சி முறியடிக்கப்பட்டது. பக்தர்களின் பணிக்கு ஈ.பி.டி.பி. அமைப்பினரும் உதவியிருந்தனர்.

பெரிய தொடுவாய் விநாயகர் ஆலயமும் பாழடைந்த நிலையிலேயே காணப்படுகிறது.

பரிபாலன சபையாருடன் சேர்ந்து பாராளுமன்ற உறுப்பினரும் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறாரா என்று மக்கள் கேட்கிறார்கள்.

# விபுலாநந்தர் நிதியம் விழுங்கப்பட்டதா?

## வவுனியா மாணவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்!

கல்வியில் பின் தங்கிய வவுனியா மாவட்டத்திலிருந்து தெரிவாகும் வறிய பல்கலைக் கழக மாணவர்களின் கல்விசார் வசதிகளுக்கு உதவி செய்யும் நோக்குடன் 1992ம் ஆண்டு விபுலாநந்தர் நூற்றாண்டையொட்டி 'விபுலாநந்த நிதியம்' என்ற பெயரில் ஒரு நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. கல்வித்துறையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளையும், உயர்புப் பாடசாலை அதிபர்களையும் வேறு உயர் அரச அதிகாரிகளையும் உள்ளடக்கிய ஒரு நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டு அன்றைய வவுனியா பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் தலைமையில் செயற்பட ஆரம்பித்தது.

இந்நிதியத்திற்கான நிதியை வழங்குவதில் அரசியல் கட்சிகள், வர்த்தக நிறுவனங்கள், வேறு தனிப்பட்ட நலன் விரும்பிகளின் உதவியுடனும், குறிப்பாக பாடசாலை மாணவர்களின் கலை-கலாசார நிகழ்ச்சிகளின் நிதியுதவிக் காட்சிகளினூடாகவும், சேர்க்கப்பட்ட சுமார் 6 இலட்சம் ரூபாய் (எமக்கு தெரிந்தவரையில்) வங்கியில் வைப்பிட்டதாக அறிகின்றோம்.

இதுகாலவரை எந்நோக்கத்திற்காக இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திற்காக செலவழிக்கப்படாததும் அந்த செயற்குழு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததும், இந்நிதியத்திற்கு நிதியை வழங்கிய நலன் விரும்பிகளுக்கும், குறிப்பாக இந்நிதியை சேகரிப்பதில் ஈடுபட்ட மாணவர்களுக்கும், இவர்களின் நடவடிக்கை பெரும் விசனத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந் நல்நோக்கத்திற்காக மனமுவந்து நிதியைத் தந்த நலன் விரும்பிகளே! பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே! வன்னியின் வறிய மாணவர்களின் உயர்கல்வி முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள அனைவரிடமும் இன்று நாம் வேண்டுவது இவையே:

* இந்நிதியத்தின் கணக்கறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

* இந்நிதியத்திற்கு பொறுப்பாக இருந்த அனைத்து நம்பிக்கைப் பொறுப்பாளர்களையும் நீக்கி அல்லது மறுசீரமைத்து இதனை மீண்டும் செயற்பட ஆரம்பித்து வைக்க வேண்டும்.

* அன்று கூறியதின்படி வைப்பில் இருக்கின்ற நிதியின் மூலம் முதற் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாணவர்களுக்காவது இந்நிதியத்திலிருந்து நிதி வழங்குவது உடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

* இந்நோக்கத்திற்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உதவக் காத்திருக்கும் அன்பர்களின் ஆதரவுடனும், வேறு வழிகளின் மூலமும் இந்நிதியத்தை பல்கிப் பெருகச் செய்து இந்நோக்கத்தின் பூரண வெற்றியை எய்துதல்.

* இந்நிதியத்திற்கான செயற்குழுவில் அரச அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள், மற்றும் பாடசாலை அதிபர்களுடனும் இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொண்டுள்ள சமூகத்தின் முன்னோடிகளான மூத்த பிரஜைகளும், நிரந்தர அங்கத்தவர்களாக அனுமதிக்கப்பட வேண்டும் என்பதும் எமது அவா ஆகும்.

-வவுனியா மாணவர்கள்-

# அதிபரில்லாத பாடசாலைகள்

பொத்துவில் பிரதேச எல்லைக்குட்பட்ட இன்ஸ்பெக்டர் ஏத்தம் கமு/அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஊறணி கமு/சரஸ்வதி வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் தற்போது அதிபரில்லாமல் இயங்கி வருகின்றன.

இந்த இரு பாடசாலைகளும் 'ஆரம்ப பாடசாலைகள்' என்பது குறிப்பிடத்தக்கது.

1996.07.01ம் திகதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகளை கடமையாற்றிய அதிபர் அவர்கள் மாற்றமாகிச் சென்று விட்டார். இதுவரைக்கும் இப்பாடசாலை அதிபரில்லாமலேயே இயங்கிவருகிறது. இப்பாடசாலையில் சுமார் 200 சிறார்கள் கல்வி பயில்கிறார்கள். இச்சிறார்களுக்கு கற்பிப்பதற்கு இரு ஆசிரியைகள் மட்டுமே இருக்கின்றார்கள். இந்நிலைமையே ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்திற்கும்.

இப்பாடசாலைகள் அதிபரில்லாமல் இயங்குவது வலயக் கல்விப்பணிமனைக்குத் தெரியாமலில்லை. வலயப் பணிமனை இதுபற்றி தெரியாமலிருப்பது ஏனோ...? இச்சிறார்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வலயக் கல்விப் பணிமனை ஏற்ற நடவடிக்கையினை எடுக்க வேண்டும்.

ஆர்.சாந்தசீலன், இன்ஸ்பெக்டர் ஏத்தம், பொத்துவில்-03.

# நிவாரண முத்திரைக்கு திண்டாட்டம்

(திருமலை நிருபர்)

கடந்த நான்கு மாதங்களாக நிவாரண முத்திரைக்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றார்கள் ஈச்சிலம்பற்றை மக்கள்.

பாதுகாப்புக் காரணமாக தமிழ்க் கிராமங்களில் வைத்து உணவுப் பொருட்களை வழங்க அனுமதிக்க முடியாது, என்கிறது இராணுவம். அயல்கிராமமான மிகிந்த புரத்தில் வந்து இவர்கள் பொருட்களைப் பெற்றுச் செல்லலாம் என்பது அவர்கள் வாதம்.

மக்களோ மிகிந்தபுரத்துக்குச் சென்று தமக்குரிய உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருக்கிறார்கள்.

ஏறத்தாழ ஐயாயிரம் மக்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர். தமிழ்ப்பகுதிகளிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளூடாக வறுமை நிவாரண முத்திரைக்குரிய உணவு வழங்கப்படக்கூடாது என்பதில் இராணுவம் தன் பிடியைத் தளர்த்துவதாகத் தெரியவில்லை.

வன்செயல் காரணமாக வருமானமிழந்து வாழும் மக்கள் உணவு முத்திரையை நம்பியே காலங்கடத்துகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெடிகேட்டால்

## வெறிச்சோடும் வீதிகள்!

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் தற்போது பகல் வேளைகளிலும் மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது.

எங்காவது ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் எனக் கருதி மக்கள் நகருக்கு வருவதைத் தவிர்த்து வருகின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் ஏதேனும் வெடிச்சத்தங்கள் கேட்டால் அனைத்துக் கடைகளும் இழுத்து மூடப்பட்டுவிடுகின்றன. பஸ் சேவைகளும் சிலவேளைகளில் ஸ்தம்பித நிலையை அடைந்து விடுகின்றன.

பஸ்களில் பாதுகாப்புப்படையினர் வந்தால் அதில் பயணம்செய்ய பல பயணிகள் தயங்குகின்றனர்.

தாராபுரம் சந்தியில் பஸ் நிறுத்தப்படுவது கேள்விக்குறியாகிவிட்டது. பாதுகாப்புப்படையினர் பஸ்களில் வரும் போது இச் சந்தியில் நிறுத்தாது சற்று தூரத்தில் சிலவேளைகள் நிறுத்தப்படுகின்றது.

தாராபுரம் பகுதியில் எந்த வீடுகளோ, கடைகளோ எரிக்கப்படவில்லை. எவரும் கொல்லப்படவுமில்லை. இப்பகுதி முஸ்லிம்கள் சிலர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 5 வீடுகள்வரை எரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படும் வதந்திகளில் எதுவித உண்மையுமில்லை. ●

# படகுப் பயணம் தொடருமா?

(மன்னார் நிருபர்)

மன்னாருக்கும் கற்பிட்டிக்குமிடையே நடைபெற்றுவரும் பயணிகளுக்கான படகுப் பயணம் குறித்து இச் சேவையைப் பயன்படுத்தும் பயணிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

முன்னர் வாரத்தில் திங்கள், புதன், சனி ஆகிய தினங்களில் வழமையாக படகுச் சேவைகள் நடைபெற்று வந்தன. தற்போது இது முன்னறிவித்தலின்றி, திடீரென மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் பயணத் திகதியை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமல் பயணிகள் திண்டாடுகின்றனர். கற்பிட்டியிலும், தாழ்வுபாட்டிலும் உள்ள இறங்குதுறைகளில் பலதடவை பயணிகள் காத்து நின்று விட்டு வீடு திரும்பிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே மன்னார்-கற்பிட்டி படகுப் பயணத்தின் எதிர்கால நிலை குறித்து வினா எழுந்துள்ளது.


**என்றும் சந்திக்கலாம்**

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K. சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடன் கலந்துரையாடலாம்.

**தேவை**

கீழ்வரும் இடங்களுக்கு தினமுரசு விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். **விண்ணப்பிக்கவும்**

| | | | |
|---|---|---|---|
| Kahatagasdigiliya | Hakmana | Hali-Ela | Welipanna |
| Hemmathagama | Hettipola | Kegalle | Akuressa |
| Dambadeniya | Ratnapura | Ragama | Nivitigala |
| Deraniyagala | | Ampara | Kalawana |
| Polgahawala | | | |
| Welikanda | | | |

விநியோக முகாமையாளர்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772, கொழும்பு.

**வெள்ளவத்தையில்**

ஆண், பெண் இருபாலாருக்கும் திருமண கோட், சூட், அலங்கார ஆடைகள் மற்றும் சேர்ட், ட்ரவுசர்ஸ் உடனடியாகத் தைத்துத்தரப்படும்.

பட்டுச்சேலையா! கவலை வேண்டாம். ட்ரை கிளீனிங் மற்றும் சாதாரண சலவை. உடனுக்குடன் செய்து தரப்படும்.

நம்பிக்கை–நாணயம்–குறைந்தவிலை

BULE STAR cleaners & Tailors, 253-E, Galle Road, Wellawatte Complex, colombo-06.
புளூஸ்டார் கிளீனேர்ஸ் & டெயிலர்ஸ், 253–E. காலி வதி, வெள்ளவத்தை கொழும்பு–06.

**உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி, உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள், நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதக வலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

**வாரநாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.**

**முருகானந்தா வைத்தியசாலை**
NO. 6/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு-11

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1 காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030

**BRIGHT**ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்:.................................
விலாசம்:.................................

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O. BOX. 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL: 434770

**Bright - 1997 ஆண்டு மாணவர் களுக்கான ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைமுன்னோடிப் பயிற்சி**

Bright ன் தபால் மூலம் கல்வி

**புதிய வெற்றிக்கனி I–10**

புதியதோர் அமைப்பு, புதியதோர் உத்வேகம், அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியூடாக புதியதோர் வழிகாட்டல் நூலாக வெளிவரவுள்ளது.

புதிய வெற்றிக்கனியை தொடர்ச்சியாக பெற விரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெற தொடர்பு கொள்க.

Bright Book Centre (Pvt) Ltd
S-27, First Floor, P.O. Box 162
Colombo Central Super Market Complex
Colombo -11 T.P: 434770

**மலையாள மாந்திரீகம்**





நம்பினார் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம், "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.

தொடர்புகளுக்கு:-

விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 0094134483l EXT. FRS
FAX 00941342464

மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி (J.D.G.A.N.)JP. பி.கே.சாமி
அஸோசியட் பிரைவேட் லிமிட்,
இல,162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் ரோட், கொழும்பு-13.

**விளம்பரப் பகுதி**

**"மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்**



காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசத்திகளின் தொல்லைகள், தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, மர்மமான மருந்து, மந்திர ஐந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்–பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி.) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம். YOGI. DR. SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:-

YOGI. DR. SACKTHYANANTHEBABA
INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE,
KALLADY-BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

# புகலிடமாகும் தமிழகம்

# தலையிட வைக்கும் தலைவலி!

"அகதிகள் என்ற போர்வையில் புலிகளின் ஊடுவலுக்கு அனுமதியோம்."

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அப்படித்தான் கூறியிருக்கிறார்.

அப்படித்தான் அவர் கூறவும் முடியும். "புலிகள் ஊடுருவி விட்டார்கள்" என்று மீண்டுமொரு முறை ஜெயலலிதா கூறுவதற்கு இடமளிக்காமல் கலைஞர் தானே முந்திக் கொண்டு சொல்லியிருக்கிற கருத்து அது.

அந்தக் கருத்து இலங்கை அரசுக்கு செவியில் தேன்பாய்ந்த மாதிரியாகிவிட்டது. அரசின் வெகுஜன தொடர்புச் சாதனங்கள் கலைஞர் சொன்னதை- டெண்டுல்கர் அடித்த பந்தை லபக்கென்று பிடித்த ஒரு கிரிக்கெட் வீரரின் சந்தோசத்துக்கு ஈடான- பூரிப்போடு சொல்லிக்கொண்டிருந்தன.

ஆனால், கலைஞர் பந்து வீசியது பிரபாகரனின் விக்கெட்டுக்கு குறிபார்த்தல்ல; தமிழக அரசியல் ஆடுகள நிலவரத்துக்கு ஏற்ப ஜெயலலிதாவுக்கு போட்ட பந்துதான் அது.

தமிழ்நாட்டுக்கு அகதிகள் செல்வார்கள் என்பதையோ, அவ்வாறு தப்பித் தவறி சென்றாலும்கூட தமிழக அரசு இடமளிக்கும் என்றோ இலங்கை அரசு நினைத்திருக்கவில்லை.

போரினால் பாதிக்கப்படும் அகதிகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்லவேண்டும். அல்லது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இருக்க வேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சீரான உணவு விநியோகம் நடந்தால்தானே அங்குள்ள அகதிகள் சீவிக்க முடியும்! உணவு விநியோகத்தைக் கட்டுப்படுத்திவிட்டால் அகதிகள் பொறுமை இழப்பார்கள்: புலிகளின் கட்டுப்பாட்டை மீறிக்கொண்டு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவார்கள் என்றுதான் அரசாங்கம் நினைத்திருந்தது.

புலிகளுக்கும், அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் கச்சிதமான தந்திரம் அது.

ஆனால், புலிகள் என்ன செய்தார்கள் என்றால், அரசாங்கத்தின் தந்திரத்தை முறியடிக்கும் போக்கில் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்துவிட்டார்கள்.

தமிழகம் செல்லப் புறப்பட்ட அகதிகளை புலிகள் தடுக்க முயலவில்லை. தமது விசைப் படகுகளில் ஏற்றிச்சென்று இந்தியக் கடல் எல்லைக்குள் வைத்து மீன்பிடிப்படகுகளிலும் ஏற்றிவிட்டார்கள்.

ஒரு குறிப்பிட்டளவான அகதிகள் தமிழகம் செல்லட்டும்: தடுக்க வேண்டாம். தேவையானால் உதவி செய்யுங்கள் என்பது தான் மன்னாரில் உள்ள புலிகளுக்கு தலைமைப் பீடத்தின் கட்டளை.

புலிகள் தடுப்பார்களோ என்று தயங்கிக் கொண்டிருந்தவர்களும், புலிகள் பச்சைக் கொடி காட்டிவிட்டதால் மூட்டை முடிச்சுக்களோடு புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

அகதிகள் செல்ல அனுமதித்தது மூலம் தமிழகத்தையும், இந்திய அரசையும் மீண்டும் இலங்கைப் பிரச்சனைபற்றி கவனம் செலுத்தியே தீரவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கியது ஒன்று.

மற்றொன்று; அகதிகள் வெளியேற்றத்தை தடுக்க வேண்டுமானால் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கும் உணவு அனுப்பியே தீரவேண்டிய கட்டாயத்தையும் அரசுக்கு ஏற்படுத்திவிட்டார்கள். ஆக, ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்!

இனிமேல் வன்னிப்பகுதிக்கு போதியளவு உணவுப் பொருட்கள் செல்லத் தொடங்கிவிடும் என்பது அதன் அர்த்தமல்ல. கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி குறுக்கே நிற்கும் நடைமுறைகள் தொடரத்தான் செய்யும்.

ஆனாலும், புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் உணவு தட்டுப்பாட்டையும் போர்த் தந்திரங்களில் ஒன்றாக நம்பியிருக்க முடியாது என்பதை அரசாங்கம் உணர்ந்தே இருக்கும்.

ஆட்டிலறி ஷெல் வீச்சால் இடம்பெயரும் மக்களை அத்தியாவசிய உணவுப்பொருட்களால் தம்மை நோக்கி இழுக்கலாம் என்ற அணுகுமுறை தோல்வியைத் தழுவும் என்பது புரிந்திருக்கலாம்.

இந்நிலையில் விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதையாக, 'புலிகள் ஊடுவ முடியாது' என்று கலைஞர் சொன்னதை பெரிய தலைப்புச் செய்தியாக்கி திருப்திப்பட்டுக் கொண்டிருக்கிறது அரசாங்கம்.

ஆனால், இதெல்லாம் மேற்போக்கான திருப்திப்படுதல் மட்டுமே. அகதிகள் தமிழகம் செல்வதால் ஏற்பட்டுள்ள பாதகங்களை அரசு உள்ளூர உணராமலிருக்காது.

தமிழ் மக்கள் தமது பக்கம் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று அரசாங்கம் செய்த பிரசாரமும் அடிவாங்கியிருக்கிறது.

வன்னிப்பகுதியில் பாரிய ஒரு இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிடுவதாக இருந்தால் அகதிகள் பிரச்சனை பெரிதாகும் என்ற புதிய நெருக்கடியும் இப்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அகதிகள் தமிழகம் செல்லாதவரை இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் பற்றி இந்திய அரசு பெரிதாக அக்கறைப்படவில்லை.

தமிழ்நாட்டிலும் முன்னர்போல அனுதாப அலை இல்லாமல் போனதால், புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தமிழக மக்களிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தலாம் என்ற உள்நாட்டு நிர்ப்பந்தமும் மத்திய அரசுக்கோ, தமிழக மாநில அரசுக்கோ இருக்கவில்லை.

சமீபத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் தமிழகம் சென்ற பின்னர் நிலமை மாறியிருக்கிறது.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமானால் மேலும் பல ஆயிரம் அகதிகளை தமிழகத்தில் எதிர்பார்க்கவேண்டி இருக்கும் என்று இந்திய மத்திய அரசு நினைக்கும்.

இந்தியாவின் பாதுகாப்புத்துறை மற்றும் புலனாய்வு அமைப்புக்கள் இலங்கை அகதிகள் மீண்டும் தம் நாட்டுக்குள் வரத்தொடங்கி யிருப்பது நல்லதல்ல என்றே நினைக்கின்றன.

முன்னர் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டபோது, இந்தியாவுக்கு இலங்கை தமிழ் அகதிகள் சென்றமை இந்திய அரசுக்கு சாதகமான ஒரு விஷயமாக இருந்தது.

இலங்கை விவகாரத்தில் தாம் தலையிடுவதற்கான காரணத்தை நியாயப்படுத்த அகதிகள் விவகாரமும் இந்தியாவுக்கு ஒரு துருப்புச் சீட்டாக இருந்தது.

தற்போது, இலங்கை விவகாரத்தை இந்தியா முழுதாக கைகழுவாவிட்டாலும்கூட, 'புலிகள் பொது எதிரிகள்' என்ற அளவில் இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் மறைமுக ஆசீர்வாதம் இருந்துகொண்டிருந்தது.

"உங்கள் விவகாரத்தை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்ற ரீதியில் இலங்கை விவகாரத்திலிருந்து தான் ஒதுங்கி விட்டதுபோலவே இந்தியா காட்டிக் கொள்கிறது.

ஆனால், இந்தியாவும் அதன் வெளியுறவுத் துறையும், புலனாய்வு அமைப்புக்களும் இலங்கை இனப்பிரச்சனை விவகாரங்களில் இப்போதும் ஒரு கண்வைத்துக்கொண்டுதான் இருக்கின்றன.

இலங்கை அரசு பிரச்சனையை எப்படிக் கையாள்கிறது? யுத்த நிலவரம் ஏப்படிப் போகிறது? மற்றும் இலங்கை அரசுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகளின் தன்மை போன்றவை தொடர்பாக இந்தியப் புலனாய்வுப் பிரிவுகள் தகவல்களைத் திரட்டிக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்தியாவின் தேசிய நலன் என்று பார்க்கும் போது, இலங்கை அரசால் இந்தியாவுக்கு ஒரு போதும் நேரடியான அச்சுறுத்தல் ஏற்படப் போவதில்லை.

ஆனால், யுத்தத்துக்கு உதவுதல் என்ற சாட்டோடுசாட்டாக அமெரிக்கா இலங்கையை தனது செல்லப்பிள்ளையாக்கிக் கொண்டால் இந்தியாவுக்கு பாதகம் ஏற்படலாம்.

அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையெழுத்துப்போடவேண்டும் என்று அமெரிக்கா துரத்திக்கொண்டு திரிகிறது. போதிய அணு ஆயுதங்களை கையிருப்பில் வைத்திருக்கும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு புத்திசொல்லக் கிளம்பியிருக்கிறது.

சாத்தான் ஏன் வேதம் ஓதுகிறது? இந்தியா போன்ற நாடுகள் தனக்கு சவாலாக மாறிவிடக்கூடாது என்ற எண்ணத்தால்தான்.

இந்நிலையில் இந்தியாவில் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்துவருகின்றன. இந்தியாவும் அமெரிக்காவும் நேரடியாக தமது விரோதத்தை வெளிப்படுத்தாவிட்டாலும் திரைமறைவில் புகைச்சல் இருக்கிறது.

இந்தியாவில் தனிப்பெரும் கட்சியாக வளர்ந்து வருகிறது பாரதீய ஜனதா கட்சி. ஆலைகள் செய்வோம், காகிதம் செய்வோம் என்று அது சொல்லவில்லை. "நாங்கள் பதவிக்கு வந்தால் அணு ஆயுதம் செய்வோம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறது.

இதெல்லாம் அமெரிக்காவுக்குப் பிடித்தமான விஷயமல்ல. தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு வல்லரசாக வளர்ந்து நிற்பதை அமெரிக்காவின் 'உலகப் பொலிஸ்காரன்' மனோபாவம் ஒருநாளும் விரும்பாது.

அதனால்தான் காஷ்மீர் பிரச்சனையில் பகிரங்கமாகவே பாகிஸ்தானுக்குச் சார்பாக அமெரிக்கா கருத்து வெளியிட்டது. விளைவு, இந்தியாவில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

இப்போது அணு ஆயுத தடை விவகாரத்திலும் இந்தியாவில் அமெரிக்க எதிர்ப்பு மனோபாவம் வளர்ந்திருக்கிறது.

இதனால் பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் உள்ள மக்களிடமாவது நல்ல பெயர் எடுக்கவும், இந்த நாடுகளில் தனது பிடியை இறுக்கமாக வைத்திருக்கவும் அமெரிக்கா ஆர்வம் காட்டுகிறது.

அதன் பிரதிபலிப்புக்கள் அப்பட்டமாகவே தெரிகின்றன. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு பற்றியும் அமெரிக்கா பேசுகிறது. புலிகளையும் காட்டமாகக் கண்டிருக்கிறது. கொழும்பில் குண்டுவெடித்தால் முதல் கண்டனம் அமெரிக்காவிடமிருந்து வருகிறது.

இலங்கை விவாகரத்தைப் பொறுத்தவரை இலங்கை மக்கள் அனைவரிடமும் தன்னை ஒரு 'தர்மசிந்தனையாளன்', 'புண்ணியவான்' என்று காட்டிக் கொண்டு மூக்கை நுழைப்பதுதான் அமெரிக்காவின் கொள்கை.

இலங்கை மீதான அமெரிக்காவின் கரிசனை இந்தியாமீதான அமெரிக்காவின் கண்காணிப்புக் கொள்கையுடன் இரண்டறக் கலந்த ஒன்றுதான்.

இதெல்லாம் இந்தியாவுக்கும் தெரியும். இலங்கை அரசுக்கு இராணுவ ஒத்துழைப்பு என்ற ரீதியில் அமெரிக்கா உதவுவதை இந்தியாவும் அவதானமாக நோக்கிக்கொண்டே இருக்கும்.

அதனால்தான் வீரவில காட்டில்- இலங்கை விமானப்படை முகாமில் அமெரிக்கா வழங்கும் பயிற்சி இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அது வெளியே தெரிந்தவுடன் விதண்டாவாத வியாக்கியானங்களையும் அமெரிக்கா கூறியிருந்தது.

எனவே-இலங்கையில் அமெரிக்காவின் கரிசனை இந்தியாவுக்கு பிடிக்காத ஒன்றுதான். ஆனால், மறுபுறத்தில் புலிகளும் இந்தியாவின் நம்பகத்தன்மையை இழந்துவிட்டதால் இந்தியாவின்பாடு தர்மசங்கடமாகியிருக்கிறது.

புலிகளையும் வளரவிட முடியாது. இலங்கை அரசையும் அமெரிக்கா போன்ற நாடுகளை முற்றாகச் சார்ந்து நிற்கும் நிலைக்கு விட்டுவிடக் கூடாது. இரண்டுமே தனது நலனுக்கு பாதகம் என்பது இந்தியாவின் நிலை.

இரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாது என்பதால், புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசுக்கு மறைமுகமான ஒத்துழைப்பு வழங்கியது இந்தியா.

அதன்மூலம் இந்தியாவுடனும் நட்பாகவும், இந்தியாவுக்கு விரோதமான காரியங்களுக்கு உதவாமலும் இருக்கும்வரையில் இலங்கையை நடுநிலைப்படுத்தி வைத்திருப்பதே இந்தியாவின் நோக்கமாக இருந்தது.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர் விவகாரம் என்பது 'ஆறின கஞ்சி பழம் கஞ்சி' என்ற நிலைக்குச் சென்றதால் இந்திய மத்திய அரசு இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டிருக்க முடிந்தது.

தமிழகத்தில் பதவியில் இருந்த ஜெயலலிதாவும், எதிர்வரிசையில் இருந்த தி.மு.க.வும் மௌனம் சாதித்துக் கொண்டிருந்தமையும் இந்திய மத்திய அரசு புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் உதவ மேலும் வசதியாக இருந்தது.

ஆனால் தற்போது மீண்டும் அகதிகள் செல்லத் தொடங்கியவுடன் இந்தியாவின் புலனாய்வு அமைப்புக்களுக்கு ஒரு கவலை வந்திருக்கிறது.

அகதிகள் என்ற போர்வையில் புலிகள் உள்ளே வந்துவிட்டால் என்ன செய்வது என்பது தான் கவலை.

அதனால்தான் அகதிகள் மீண்டும் இந்தியாவுக்குள் வருவது நல்லதல்ல என்ற அபிப்பிராயம் இந்தியப் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அமைப்புக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆட்சிகள் மாறினாலும் இந்தியாவின் தேசிய நலன் தொடர்பான கொள்கைகள் மாறுவதில்லை. அதுபோலவே புலனாய்வு மற்றும் பாதுகாப்பு, வெளியுறவுத் துறைகளின் நோக்கங்களும், செயற்பாடுகளும் மாறுவதில்லை. சில அதிகாரிகள் வேண்டுமானால் மாற்றப்படலாம்.

அந்த வகையில் காங்கிரஸ் ஆட்சி மாறினாலும்கூட இந்திய அரசின் புலிகள் தொடர்பான நிலைப்பாடு இன்னமும் அப்படியேதான் இருக்கிறது. புலிகள் மீதான தடை நீடிக்கப்பட்டதும் அதற்கு ஒரு உதாரணம்.

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு விடயத்துக்கு புலிகள் ஒரு சவாலாக மாறிவிடுவார்கள் என்ற நினைப்பு இந்திய அரசிடம் இருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் இந்தியாவில் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதில் இந்தியப் புலனாய்வு, பாதுகாப்பு அமைப்புக்கள் கடும் கவனம் கொண்டிருக்கின்றன.

வடக்கு-கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இந்தியா செல்வதற்கு விசா வழங்குவதில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் கடைப்பிடிக்கும் அணுகுமுறைகள், இந்தியா எந்தளவுக்கு புலிகளின் ஊடுருவல் விடயத்தில் கவனமாக இருக்கிறது என்பதைப் புலப்படுத்தும்.

இலங்கையில் இருந்து மட்டுமல்ல, உலகின் வேறு ஏதாவது ஒரு நாட்டில் இருந்து இலங்கைத் தமிழர்கள் இந்தியா செல்ல விரும்பினாலும்கூட அந்த நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு விண்ணப்பங்களைத் துருவிப்பார்க்கின்றன.

தமிழ்நாட்டில் தங்கியிருந்த அகதிகளை இலங்கைக்கு அனுப்பிவைப்பதிலும் இந்திய அரசும், தமிழக அரசும் துரித ஆர்வம் காட்டின.

இவ்வாறான நிலையில் மீண்டும் அகதிகள் தமிழகம் செல்லத் தொடங்கியமை இந்திய அரசின் மேற்கண்ட முயற்சிகளுக்கெல்லாம் நேர் மாறானதாகிவிட்டன.

இந்தியத் தூதரகங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு விசா கொடுப்பதில் கடும் கட்டுப்பாடுகளை அமுல்படுத்திக் கொண்டிருக்கையில், படகுகள் மூலம் ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் சென்று தமிழகம் இறங்கிவிட்டார்கள்.

அகதிகளை திருப்பி அனுப்பவும் முடியாது: வராதே என்று தடுக்கவும் முடியாது. அதுவும் தமிழக முதல்வராக கலைஞர் இருக்கிறார். உலகத் தமிழர்களது தலைவர் என்று அழைக்கப்படுமளவுக்கு தமிழ் உணர்வு கொண்டவராக மதிக்கப்படுபவர்.

தனது ஆட்சியில் தமிழ் அகதிகள் திருப்பி விரட்டப்பட்டார்கள், புகலிடம் மறுக்கப்பட்டார்கள் என்ற பழி ஏற்பட அவர் விரும்பமாட்டார்.

இந்திய அரசும் அகதிகளை ஏற்க வேண்டாமென்று தமிழக அரசிடம் கூறமுடியாது. அப்படிச் சொன்னால் தமிழகத்திலும் இந்திய மத்திய அரசு தமிழர்களுக்கு எதிரான அரசு என்ற உணர்வு ஏற்பட்டுவிடும்.

எனவே-இந்திய அரசுக்கும், அதன் வெளியுறவு, பாதுகாப்பு, மற்றும் புலனாய்வு அமைப்புக்களுக்கும் இலங்கை அகதிகள் மீண்டும் தமிழகம் செல்வது என்பது மெல்லவும் முடியாத, விழுங்கவும் முடியாத நிலையாகி விட்டது.

தமிழக அரசுக்கும் அதே நிலமைதான். புலிகள் தொடர்பாக கலைஞருக்கு அப்படி ஒன்றும் தனிப்பட்ட விரோத உணர்வு கிடையாது. ஆனால் புலிகள் தமது கொள்கைக்காக எங்கு வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் செய்வார்கள் என்ற நினைப்பு கலைஞரிடம் ஆழமாகப் பதிந்துவிட்டது.

தி.மு.க. ஆட்சி- தனக்குப் பின்னரும் தனது வாரிசான ஸ்டாலின் தலைமையில்- தொடர்வதற்கு ஏற்ற நிலையை உருவாக்கி விட்டுச் செல்லவே கலைஞர் விரும்புகிறார்.

இந்நிலையில் நெருப்பை எடுத்து மடியில் வைத்துக்கொண்ட கதையாக, புலிகளை மீண்டும் தமிழகத்தில் அனுமதிப்பானேன் என்பதுதான் கலைஞரின் நிலைப்பாடு. அந்த நிலையில் கலைஞர் மிக உறுதியாக இருக்கிறார்.

அகதிகள் மீண்டும் வரும்போது அதற்குள் புலிகளும் வருவார்கள் என்பது கலைஞருக்குத் தெரியாத விடயமல்ல. அதற்காக அகதிகளை கெடுபிடிக்கு உள்ளாக்குவது, கலைஞர் தமிழ் உணர்வு கொண்ட தலைவர் என்ற தகுதிக்கும் ஏற்றதல்ல.

அதனால்தான் அகதிகளை உள்ளே அனுமதித்தனர். அகதிகளை ஏற்றிச்சென்ற மீனவர்களை மட்டும் பொலிசார் எச்சரித்தனர்; மீனவர்கள் சிலர் தாக்கப்பட்டனர்: மீனவர்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தமையால் பொலிசார் பின்வாங்கவேண்டி ஏற்பட்டு விட்டது.

எனவே-அகதிகள் வருகையைத் தடுக்க முடியாத நிலையில், அகதிகள் வருவதற்கான சூழ்நிலை ஏற்படுவதை இந்திய அரசு தலையிட்டுத் தடுக்க வேணிடும் என்று வலியுறுத்தும் அவசியம் கலைஞருக்கு ஏற்படும்.

இராணுவ நடவடிக்கைகளைத் தணிக்குமாறு இலங்கையிடம் இந்திய மத்திய அரசு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதை கலைஞர் வற்புறுத்த வேண்டியும் ஏற்படும்.



சமீபத்தில் தமிழகம் சென்ற அகதிகளில் ஒருவர். தாயைத் தேற்றும் சிறுவன்.

அதுதவிர, அகதிகளுக்கு புகலிடம் கொடுத்தமை நியாயம் என்று நிரூபிக்க, இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு பற்றியும், இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகள் பற்றியும், பேசவேண்டிய நிலைக்கு கலைஞர் உள்ளாக்கப்பட்டுள்ளார்.

அகதிகள் பிரச்சனை, அகதிகள் என்ற போர்வையில் புலிகள் ஊடுருவல் என்ற நெருக்கடிகள் தனது அரசைப் பாதிக்காமல் இருப்பதற்காக கலைஞர் ஒரு காரியம் செய்யவேண்டியிருக்கும். பந்தை மத்திய அரசின் கோட்டுக்குள் அடித்துவிடவேண்டியிருக்கும்.

"இலங்கை அரசுடன் இந்திய மத்திய அரசு பேசி, அகதிகள் தமிழகம் வருவதற்கான சூழ்நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டும்." என்று கலைஞர் சொல்லிவிடுவார்.

அதனால் முன்னர்போல இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளை பார்த்துக்கொண்டிருக்க முடியாத நிலை இந்திய அரசுக்கு ஏற்படும்.

இலங்கை அரசிடம் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு இந்தியா உடனடியாகக் கோரப்போவதில்லை. ஆனால் இராணுவ நடவடிக்கைகள் உக்கிரமாகுமானால், 'இந்த வேகம் வேண்டாம்' என்று சொல்லவேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்படும்.

முன்னர் இலங்கை அகதிகள் பிரச்சனை இந்தியாவுக்கு ஒரு துடுப்புச்சீட்டு. இப்போது அதே பிரச்சனை இந்தியாவுக்கு தலைவலி. தலைவலியில் இருந்து தப்புவதற்கு இந்தியா ஏதாவது செய்தேயாக வேண்டும். ○

---

# அதிரடி அய்யாத்துரை



**வெ**ளிநாடுகள் சிலவற்றில் ரெண்டு எழுத்தார்மீது கண்காணிப்பு இருக்குதாம். அதனால் சில தந்திரங்களோடு ரெண்டு எழுத்தார் காரியம் செய்கினமாம். வெளிநாடொன்றில் இலங்கைத் தமிழர்கள் நடத்திய கண்காட்சி ஒன்றில் அந்த நாட்டு உளவுத் துறையினரும் நடமாடினார்களாம். அதனால் பக்திப்பாடல் லேபல் போட்ட கசட்டுக்களை ரெண்டு எழுத்தார் விற்பனை செய்தவையாம். லேபல்தான் பக்திப்பாடல். உள்ளே ரெண்டு எழுத்தாரின் பிரசாரப்பாடல்கள். திருவிளையாடல் புராணத்திற்குப் பதிலாக போர்விளையாடல் பாடல்கள்.

**நோர்**வேக்கு எதிராக தென்னிலங்கையில் காவி உடைக்காரர் ஆர்ப்பாட்டம் செய்தவையல்லோ. உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிடவேண்டாம் எண்டு கோஷம் போட்டவையல்லோ. நோர்வே அரசு சும்மாயிருக்குமோ. இங்கிருந்து செல்லும் தமிழ் அகதிகளுக்கு புகலிடம் கொடுக்கக் கதவு திறந்துபோட்டுது. பாதிக்கப்பட்டவர்தான் என்று நிரூபித்தால் உடனே அகதிகள் அந்தஸ்து வழங்கப்படுதாம். விடுவினமோ ஏஜன்சிக்காரர். புதுருட்டுக்கள் திறந்து பொதுஜன சேவையில் இறங்கியிருக்கினம். 4 1/2 இலட்சம்வரை ரேட் போகுதாம்.

**கொ**ழும்பு ஆங்கில வாரப்பத்திரிகை ஒன்றில் கடந்தவார தலைப்புச்செய்தி. 'அரசை கவிழ்க்க தமிழ்க் கட்சிகள் தயார்.' அதில் குறிப்பிடப்பட்ட தமிழ் கட்சிகளும் தங்களுக்குள் அப்படி ஒரு அபிப்பிராயம் இருக்குதோ எண்டு கிள்ளிப்பார்த்துக் கொண்டினமாம். பிறகு விசாரித்துப் பார்த்தபோது குறிப்பிட்ட பத்திரிகையின் ஆலோசகர் பச்சைக் கட்சியின் பிரமுகர் எண்டு தெரியவந்ததாம். கட்சி சார்பு இருக்கலாம். அது அவரவர் உரிமை. அதற்காக செய்திகளில் விமர்சனங்களில் திரிபுகள் இருக்கலாமோ? பச்சைக் கட்சியினர் ஆளும் தரப்பையும் தமிழ்க் கட்சிகளையும் மோதவிட்டுப் பார்க்கும் செய்திகள் இடம்பெறுமாறு பல்வேறு பத்திரிகைகளில் உள்ள தங்கள் சார்பாளர்கள் மூலம் தந்திரம் செய்கினமாம்.

**த**லைநகரில் காலையில் 'வோக்கிங்' சென்ற வயதான தமிழர் ஒருவர் விசாரிக்கப்பட்டாராம். அவரிடம் வதிவிடப்பதிவுத்துண்டு இருக்கவில்லை. வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டேன். வேண்டுமானால் வீட்டுக்கு வாருங்கள் காட்டுகிறேன் என்றாராம். முடியாது என்று; நிலையத்துக்கு கூட்டிச் சென்றார்களாம். நிலையத்தில் அவரைக் கண்ட பொறுப்பதிகாரி எழுந்து நின்று 'சல்யூட்' செய்தாராம். அழைத்துப் போனவர்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பின்னர்தான் விஷயம் வெளிச்சது. அவர் ஒரு உயர்ந்த கௌரவமான பதவியில் இருப்பவராம். சகல மரியாதைகளுடனும் வீட்டுக்கு அனுப்பிவைத்தாராம் பொறுப்பதிகாரி.

**ந**டக்கக் கூடாத நேரத்தில் காரியங்கள் நடப்பதுதான் நம்நாட்டில வழக்கமாகப் போச்சது. இயற்கையும் நாட்டு நடப்புக்கு ஏற்றமாதிரி மாறிப்போச்சு. 'கிரிக்கெட்' போட்டிகள் நடக்கும் நேரத்தில்தான் வானமும் அதுவரை மறந்துபோயிருந்த தன் கடமையைச் செய்யத் துவங்கியது. நடக்கும் என்பார் நடக்காது. நடக்காது என்பார் நடந்துவிடும்.

**யா**ழில் சமீபத்தில் பெரும் வளைப்பு நடத்தி அலசல் நடத்தப்பட்டதாம். பெண்கள் மீதுதான் காரமான சந்தேகக் கணைகள் பாய்ந்ததாம். மறுபுறத்தில் ரெண்டு எழுத்தாரும் இடம் கண்ட இடத்தில் தடம் போட்டுக்கொண்டிருக்கினம். அதனால நிலவரம் மெல்ல மெல்ல சூடாகத் தொடங்கியிருக்கு எண்டுதான் தெரியுது.

**க**ல்முனையில் கரும்ரெண்டு எழுத்தார் எண்டு சொல்லப்பட்ட சமாச்சாரத்தில் பலியானவர்களது பெற்றோர்கள் தமிழ்க் கட்சி வெகுஜனப் பிரதிநிதி ஒருவரை சந்தித்து விளக்கம் கொடுத்திருக்கினமாம். விரைவில் குறிப்பிட்ட விஷயம் வெளிச்சத்துக்கு வரலாம் எண்டு தெரியுது. வெளிநாடு செல்ல தலா 50 ஆயிரம் ரூபாய் பலியான இருவரிடமும் தம்மால் கொடுக்கப்பட்டதாகவும் பெற்றோர்கள் கூறியுள்ளனராம். பணம் எங்கே?

**க**தாசிரியர் பாலகுமாரனுக்கும் நறுக்கென்று நல்ல கவிதை எழுதவரும். உதாரணத்திற்கு இரண்டு.

"மழைக்குப் பயந்து
அறைக்குள் ஆட்டம் போட்டன
துவைத்த துணிகள்."

❑❑

"முட்டி முட்டிப்
பால் குடிக்கின்றன
நீலக்குழல் விளக்கில்
விட்டில் பூச்சிகள்."



படிப்பகம்

www.padippakam.com

**அரசியல் தொடர்**

**அற்புதன் - எழுதுவது**




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# திரைமறைவில் ஒரு இராஜதந்திரம்

### இராஜதந்திர நாடகம்

'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருந்த போது, ஜூன் 7ம் திகதி இந்திய விமானங்கள் யாழ்ப்பாண வான் பரப்பில் திடிரென்று தோன்றின.

எங்கும் ஒரே பரபரப்பு. மக்கள் பதுங்கிக்கொள்ள பங்கர்களை நாடி ஓடிக் கொண்டிருந்தார்கள். இலங்கை விமானங்கள்தான் குண்டு போட வருகின்றன என்று எங்கும் ஒரே கிலி சூழ்ந்தது.

இந்த வான் நாடகம் அரங்கேறுவதற்கு முன்னர் இலங்கை, இந்திய அரசுக்கிடையே நடைபெற்ற இராஜதந்திர நாடகங்களைப் பற்றிச் சொல்லியேயாக வேண்டும்.

பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் ஒருவிதமாக இருக்கும். திரைமறைவில் நடக்கும் சம்பவங்கள் வேறுவிதமாக இருக்கும். உண்மையில் அவைதான் சுவாரசியமானவை.

முன்கூட்டியே சில முடிவுகளை செய்துவிட்டு அதற்கேற்ப காய் நகர்த்துவதும், நாடகம் ஆடுவதும் இராஜதந்திரம் என்ற பெயருக்குள் அடக்கப்பட்டுவிடுகின்றன.

'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையே நடைபெற்ற அராஜதந்திர நாடகத்தின் சில காட்சிகளைப் பார்ப்போம்.

'ஒப்பரேசன் லிபரேசன்' ஆரம்பித்தது மே 26ம் திகதி. இந்தியாவின் விருப்பத்துக்கு முற்றிலும் மாறான நடவடிக்கையாக அது அமைந்தது.

புலிகள் இயக்கத்தினர் இராணுவரீதியில் அப்போதிருந்த பலத்தை இழப்பதை இந்தியா விரும்பவில்லை. ஏனெனில் போராளிகள் பலவீனமாகிவிட்டால் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை ஒரு தீர்வுக்கு உடன்பட வைக்க முடியாது என்பது இந்தியாவின் நம்பிக்கை.

கொழும்பு குண்டுவெடிப்புக்களுக்கு இந்தியாவின் 'றோ' உளவுப்பிரிவு புலிகள் இயக்கத்தினரையும், ரோஸ் இயக்கத்தினரையும் ஊக்குவித்தமையும் ஜே.ஆர். அரசுக்கு அதன் காலடியிலும் ஆபத்து வந்துவிட்டதை உணர்த்துவதற்காகவே.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை பேச்சுவார்த்தை மேசையில் நியாயமாக நடந்துகொள்ள வைக்கவேண்டுமானால், யுத்தத்தில் வெல்ல முடியாது என்ற நினைப்பை அவரிடம் ஏற்படுத்த வேண்டும்.

பேச்சுவார்த்தைக்கான இந்தியாவின் மூல உபாயம் அதுதான்.

ஆனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவோ நேரடியாக மோதிப்பார்க்கலாம் என்ற முடிவோடு 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கைக்கு ஒப்புதல் கொடுத்துவிட்டார்.

மே 27ம் திகதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா பின்வருமாறு அறிவித்தார்.

"அவர்கள் வென்றாலும் சரி, நாங்கள் வென்றாலும் சரி. இறுதிவரை போராடிப் பார்த்துவிடலாம்."

ஜே.ஆர் விடுத்த அறிவிப்பு இந்திய அரசுக்கு அதிர்ச்சியாகப் போய்விட்டது. அதுவரை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் ஜே.ஆர் தான் ஒரு நல்ல பிள்ளையாகவே நடித்துக்கொண்டிருந்தார்.

ராஜீவ்காந்தியும் ஜே.ஆர் விட்டுக் கொடுத்து கீழே இறங்கிவருவார் என்று ஓரளவு நம்பியிருக்கக்கூடும்.

சகல நம்பிக்கைகளும் ஜே.ஆரின் நடவடிக்கையால் தகர்ந்துபோக, இந்தியா கோபத்தின் உச்சிக்கே போய்விட்டது.

### ராஜீவின் கடிதம்

ராஜீவ் காந்தியிடம் இருந்து வந்த கடிதத்துடன் இலங்கைக்கான இந்தியத்தூதர் ஜே.என்.திக்ஷித் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

ஜே.என்.திக்ஷித் தொடர்பாக கொழும்பில் அதிருப்தி நிலவிய காலகட்டம் அது.

திக்ஷித் ஒரு திமிர் பிடித்தவர் என்றே கொழும்பில் விமர்சிக்கப்பட்டார்.

இந்திய கிரிக்கெட் குழுவினர் இலங்கை வந்து விளையாடியபோது, திக்ஷித் அந்தப் போட்டியைக் காணச் சென்றிருந்தார். அப்போது திக்ஷித்தை நோக்கி சிலர் வசைமாரி பொழிந்தனர். கிண்டலடித்தனர்.

அதே தீக்ஷித்தான் ஜே.ஆரை சந்திக்கவும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கடிதத்தோடு சென்றிருந்தார்.

கடிதத்தை வாங்கிப் படித்தார் ஜே.ஆர்.

ஜே.ஆரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் திக்ஷித். கடித வாசகங்கள் ஜே.ஆரின் முகத்தில் இறுக்கத்தைக் கொண்டுவந்தன.

கடிதத்தில் காணப்பட்ட முக்கிய விடயங்கள் இவைதான்.

**1. தங்களுடைய போக்கு அதிருப்தியையும், வருத்தத்தையும் தருகிறது.**

**2. 1983 முதல் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.**

**3. யாழ் குடாநாட்டில் தங்கள் அரசாங்கத்தால் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக்குதல்கள் எமக்கிடையே உள்ள உடன்பாடுகளின் அடிப்படைகளையே சிதைத்து விடுகிறது.**

**4. இனக்கொலையை இந்தியா வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கப்போவதில்லை.**

**5. எமது அரசியல் போக்கினை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைக்கு தயவுசெய்து எம்மை தள்ளிவிடாதீர்கள்.**

இக் கடிதத்தை அனுப்பிவைத்ததோடு நில்லாமல் மே 28ம் திகதி புதுடில்லியில் பத்திரிகையாளர்களை சந்தித்தார் ராஜீவ் காந்தி.

வழமைக்கு மாறாக ராஜீவ் காந்தி இலங்கை அரசுமீது காட்டமாகவே கருத்து வெளியிட்டார். ஜே.ஆர். தன்னை ஏமாற்ற நினைக்கிறார் என்று ராஜீவ் காந்தி சூடாகிவிட்டதாகவே தெரிந்தது.

ராஜீவ்காந்தி சொன்னது இதுதான்:

**"இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கை மேலும் உயிரழிவுகளுக்கே வழிவகுக்கும். கடந்த சில நாட்களுக்குள் நூற்றுக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். தமிழ் போராளிகளை ஒழித்துக்கட்டுவதாகக் கூறிக்கொண்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கையால் எண்ணற்ற அப்பாவி பொதுமக்கள் பலியாக நேர்ந்துள்ளது. இராணுவரீதியில் ஒரு முடிவினைக் காணவே இலங்கை அரசாங்கம் காலம் கடத்துகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது."**

### எம்.ஜி.ஆர் சென்றார்

தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அப்போது சுகவீனம் அடைந்திருந்தார். அமெரிக்காவிற்கு சென்று சிகிச்சை பெற்றுவிட்டு வந்திருந்தார்.

24 மணிநேரமும் அவரது உடல்நிலையை கண்காணிக்க டாக்டர்கள் குழுவொன்றே வீட்டில் இருந்தது. விமானப் பயணங்கள் அவரது உடல் நலத்துக்கு கேடாகலாம் என்று டாக்டர்கள் கூறியிருந்தனர்.

அப்படியிருந்தும் யாழ்ப்பாண நிலை குறித்து பாரதப் பிரதமருடன் விவாதிக்க புதுடில்லிக்கு புறப்பட்டுச் சென்றார் எம்.ஜி.ஆர்.

பிரபாகரனுடன் பாசமாக இருந்தவர் எம்.ஜி.ஆர். ராஜீவ் காந்தியும் தமிழக அரசியலில் எம்.ஜி.ஆரை முழுவதுமாக நம்பியிருந்தார்.

பொதுத்தேர்தலும் சில ஆண்டுகளில் வரவிருந்தமையால் தமிழக மக்களை திருப்தி செய்ய வேண்டிய அவசியமும் ராஜீவ் காந்திக்கு இருந்தது.

எல்லாக் காரணங்களும் ஒன்றுசேர்ந்து இலங்கைமீதான கடும் நடவடிக்கைக்கு பாரதப் பிரதமரை தள்ளிவிட்டன.

இலங்கை அரசுக்கு பாடம் புகட்டுவது என்று இந்தியா முடிவு செய்துவிட்டது.

அதற்கிடையே ஒரு முறை ஜே.ஆருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் ராஜீவ் காந்தி.

ஜே.ஆரிடம் ஒரு குணம். கெஞ்சினால் மிஞ்சுவார். மிஞ்சினால் கெஞ்சுவார்.

வடமராட்சி போர் நிலவரம் தமக்குச் சார்பாக மாறிக்கொண்டிருந்ததும் ஜே.ஆரின் பிடிவாதக் குணத்துக்கு கொம்பு சீவிவிட்டிருந்தது.

ராஜீவ் காந்தியிடம் ஜே.ஆர்.தொலைபேசியில் சொன்ன வார்த்தை: "யாழ்ப்பாணத்திற்கு எது அவசியமோ, அதனையே செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டார் ஜே.ஆர்.

சுருக்கமாகச் சொன்னால் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிவிட்டார் ஜே.ஆர்.

# பாரதம் அனுப்பிய படகுகள்

### நிதானமான நடவடிக்கை

எனவே, இலங்கை அரசின் கையை அதன் முதுகுப்புறமாக வளைத்து திருகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று இந்தியா முடிவு செய்தது.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அணிசேரா நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதானமான நாடு. உலக சமாதானத்திற்காக பாடுபட்ட நேரு பரம்பரையின் வாரிசு ராஜீவ்காந்தி.

இலங்கை போன்ற ஒரு சிறியநாட்டை இந்தியா மிரட்டுகிறது. இலங்கையை ஆக்கிரமிக்க நினைக்கிறது. பக்கத்து நாடுகளை விழுங்கத் துடிக்கிறது என்பதுபோன்ற அபிப்பிராயங்கள் ஏற்பட்டுவிடக்கூடாதல்லவா.

சர்வதேச அரங்கில் தனது நடவடிக்கை நியாயமானது., மனிதாபிமானமானது? வேறு வழியில்லாத நிலையில் மேற்கொள்ளப்படுவது என்பதை எடுத்துக்காட்ட வேண்டாமா. வேண்டும் தான்.

அதனை மிகவும் திறம்பட செய்யத் தொடங்கியது.

முதற்கட்டம் யாழ்ப்பாண குடாநாட்டு மக்களுக்கு உணவு அனுப்புவது.

இந்தியா நினைத்திருந்தால் உடனடியாகவே தனது விமானங்களை அனுப்பி யாழ் குடாநாட்டில் உணவு போட்டிருக்கலாம். இலங்கை அரசின் அனுமதியைக் கேட்காமலேயே இந்திய யுத்த விமானங்கள் இலங்கை வான்பரப்புக்குள் சீறிக்கொண்டு பாய்ந்து வந்திருக்கலாம்.

ஆனால், இந்தியா அப்படிச் செய்யவில்லை. திட்டமிட்டு நிதானமாக ஒவ்வோர் அடியையும் எடுத்துவைத்தது.

### இரண்டாவது கடிதம்

1987 ஜூன் 1ம் திகதி இலங்கையின் வெளிநாட்டமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீதை சந்தித்தார் இந்தியத்தூதர் திக்ஷித்.

புன்னகையுடன் வரவேற்றார் ஹமீத். இருவரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். கடிதம் ஒன்றை ஹமீத்திடம் கையளித்தார் திக்ஷித்.

இராஜதந்திர, மனிதாபிமான ரீதியான வாசகங்களோடு கடிதம் அமைந்திருந்தது.

அந்தக் கடிதத்தில் காணப்பட்ட வாசகங்கள் இவைதான்:

"தமது சொந்த அரசாங்கமே விதித்துள்ள பொருளாதார தடை காரணமாக யாழ்ப்பாண மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் 'முடிவுவரை போர்' என்ற அடிப்படையில் அம்மக்கள் மீது இராணுவத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன வன்செயல்களால் பல ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகியுள்ளனர். பாதுகாப்பற்ற அப்பாவி பொதுமக்கள் விமானக் குண்டு வீச்சுக்களாலும், ஆட்டிலறிச் ஷெல் வீச்சுக்களாலும் நூற்றுக்கணக்கில் பலியாகி வருகின்றனர்.

செய்தித் தணிக்கையால் இத் துயரச் சம்பவங்கள் உலகின் செவிகளுக்கு எட்டவில்லை.

ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் உடமைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானோர் இருப்பிடங்கள் இல்லாமலும், உணவு மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தும் இழந்த நிலையிலும் பரிதவித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில், இத்தகைய பரிதாபமான, சோகமான சூழ்நிலையில், இந்திய மக்களும், இந்திய அரசாங்கமும் ஒரு முடிவுக்கு வந்துள்ளனர். இந்திய செஞ்சிலுவை சங்கம் மூலமாக யாழ்ப்பாணத்திற்கு அத்தியாவசிய தேவைகளை அனுப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ் உதவிப் பொருட்களை 1987 ஜூன் 3ம் திகதி முதல் கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் பொருட்களை பரிசீலனை செய்ய இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அழைக்கப்பட்டுள்ளது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இப்பொருட்களை பரிசீலனை செய்ய அழைக்கப்படுகின்றனர்.

மனிதாபிமானரீதியில் அனுப்பிவைக்கப்படும் இப் பொருட்களுடன் ஆயுதங்கள் எதுவும் அனுப்பிவைக்கப்படமாட்டாது. ஆயுதப் படைப் பாதுகாப்பும் இருக்கப்போவதில்லை.

பொருட்களின் விநியோகத்தை பார்வையிட்டு செய்திகள் வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் இந்திய மற்றும் சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் இப் பொருட்களுடன் யாழ்ப்பாணம் சென்று, உதவி தேவையானவர்களுக்கு பொருட்கள் சென்றடைவதை நேரடியாக ஊர்ஜிதம் செய்வார்கள்.

இத்தகைய மனிதாபிமானப் பணியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் கலந்துகொள்ளும் என்று கருதுகிறோம்.

இலங்கை அரசாங்கத்தின் சாதகமான பதிலை விரைவில் எதிர்பார்க்கிறோம்."



இந்தியப்படை தயார் நிலையில்

### இலங்கை அரசின் பதில்

இந்த இரண்டாவது கடிதம் இலங்கை அரசை கடுமையாக யோசிக்க வைத்துவிட்டது. இந்தியா வெறும் கண்டனங்களோடு நிறுத்திக் கொள்ளப்போவதில்லை என்பதும் தெரிந்து போயிற்று.

ஜே.ஆர். புத்திசாலி. தந்திரசாலியும்கூட. உதவி செய்யத் தேவையில்லை. உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள் என்று சொன்னால், இந்தியா கேட்கப்போவதில்லை. தடுக்கவும் முடியாது.

நேரடியாக முரண்பட்டு மூக்குடைபடுவதைவிட விட்டுக்கொடுப்பதே சரியானது என்று முடிவு செய்தார் ஜே.ஆர். தனது சகாக்களுக்கும் நிலமையை எடுத்துச் சொன்னார்.

அதேவேளை இந்தியா கேட்டது, இலங்கை அரசு உடனே சம்மதித்தது என்று செய்திகள் வெளியானால் சிங்கள மக்களிடம் அரசுக்கு விரோதமான எண்ணங்கள் ஏற்படலாம்.

ஜே.ஆர். பணிந்துவிட்டார். இந்திய ஆக்கிரமிப்புக்கு உடன்பட்டுவிட்டார் என்றெல்லாம் அரசியல் எதிரிகள் பிரசாரம் செய்யவும் கூடும்.

அதனால் தான் ஒன்றும் பணிந்து விடவில்லை என்பதுபோல பாசாங்கு செய்தபடியே நாசூக்காக இறங்கிவந்தார் ஜே.ஆர்.

இந்திய அரசின் கடிதத்துக்கு பதிலாக இலங்கை அரசு அனுப்பிய கடிதத்தின் வாசகங்களை ஊன்றிக் கவனித்தால் ஜே.ஆர அரசாங்கத்தின் நாசுக்கான விட்டுக்கொடுப்பு தெரியும்.

### இலங்கை அரசின் கடிதம்

இலங்கை அரசு அனுப்பிவைத்த கடிதத்தின் சுருக்கம் இது:

"தங்கள் கடிதத்தின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தவறானவையும், ஆதாரமற்றவையுமாகும்.

இந்திய உபகண்டத்தின் ஒருபகுதியான தமிழ்நாடு இலங்கைப் பிரிவினைவாதிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருக்காவிட்டால் இத்தகைய சூழ்நிலை எழுந்திருக்காது.

வெளிநாட்டு உதவிகள் தேவைப்படும் அளவுக்கு யாழ்ப்பாணத்தின் நிலமை மோசமாகவில்லை. தேவைகளை பூர்த்தி செய்யும் நிலையில் இலங்கை அரசு உள்ளது.

**இந்திய அரசும், மக்களும் உண்மையாகவே அயலவர்களின் உதவி என்ற அடிப்படையில் உதவ முன்வருமானால் அதனை ஏற்பதையிட்டு இலங்கை அரசாங்கம் ஆலோசனை செய்யும்.**

**எத்தகைய பொருட்கள், எவ்வாறு விநியோகிக்கப்படவேண்டும் என்பதை இரு நாட்டு பிரதிநிதிகளும் சேர்ந்து திட்டமிடலாம்."**

இக்கடிதப் பரிமாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இந்தியப் பிரதமர் ராஜீவுக்கும், ஜே.ஆருக்கும் இடையே நேரடியான தொலைபேசி தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டது. இருவரும் அந்தரங்கமாக பிரச்சனைகளைப் பேசிக்கொள்ளவே அந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கை அரசு கடிதத்தை அனுப்பி வைத்த பின் ஜே.ஆருடன் தொடர்பு கொண்டார் ராஜீவ் காந்தி.

இந்திய அரசின் மனிதாபிமான உதவியை ஏற்றுக்கொள்ள முன்வந்தமைக்கு ஜே.ஆருக்கு நன்றி கூறினார் ராஜீவ்.

ஜூன் 3ம் திகதி புதன்கிழமை பொருட்கள் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படும் என்ற தகவலை ராஜீவ் தொலைபேசி ஊடாகத் தெரிவித்தார்.

ஜே.ஆர் சம்மதித்தார். ராஜீவ்காந்தியிடம் தனது இக்கட்டான நிலையை தெரிவித்தார் ஜே.ஆர். "தயவுசெய்து எனக்கு சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்!" ஜே.ஆர் சொன்னது அதுதான்.

### ஜே.ஆர்.பல்டி

அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டினார் ஜே.ஆர். 'வேறு வழியில்லை. உடன்பட்டேயாக வேண்டும்' என்பதை விளக்கினார். அமைச்சரவையில் இருந்து பலத்த கண்டனக்குரல்கள் எழுந்தன. அதிலும் ஒரு குரல் கடுமையாகவே உரத்து ஒலித்தது.

அந்தக் குரலுக்கு சொந்தக்காரர் அப்போதைய பிரதமர் பிரேமதாசா.

ராஜீவும், ஜே.ஆரும் தொலைபேசியில் தகவல்களை பரிமாறிக்கொண்டபோதும், இந்திய வெளியுறவு அமைச்சரும் இந்தியாவின் பதிலை இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாக தெரிவித்தது.

"ஜூன் 3ம் திகதி தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் இருந்து சாதாரண படகுகள் மூலம் பொருட்கள் அனுப்பிவைக்கப்படும். இலங்கை தூதுவரின் பிரதிநிதியும் இப்பொருட்களுடன் செல்ல அறிவுறுத்துங்கள்."

அமைச்சரவையில் ஏற்பட்ட பலத்த எதிர்ப்பு கண்டு ஜே.ஆர் அதிர்ச்சியுற்றார்.

ராஜீவ் காந்தியிடம் தான் சம்மதம் தெரிவித்துவிட்டதை ஜே.ஆர் தனது சகாக்களுக்கு கூறவில்லை.

இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் கடிதத்துக்கு காட்டமான பதில் ஒன்றை அனுப்புவதன் மூலம் தனது சகாக்களின் எதிர்ப்பில் இருந்து தப்பிக்கொள்ள நினைத்தார் ஜே.ஆர். சுருக்கமாகச் சொன்னால் ஜே.ஆர் ஒரு பல்டி அடித்தார்.

இலங்கை அரசின் முதல் கடிதத்தில் இருந்து முற்றிலும் மாறான கடிதமாக அது இருந்தது.

அந்தக் கடித வாசகத்தின் சுருக்கம் இதுதான்.

"ஜூன் முதலாம் திகதி இந்திய அரசு அனுப்பிய கடிதத்துக்கு இலங்கை அரசு அனுப்பிய பதிலை இந்திய அரசு தவறாக அர்த்தப்படுத்திக் கொண்டதையிட்டு திகைப்படைகிறோம்.

அந்நிய உதவி எதுவும் தேவைப்படும் அளவுக்கு இங்கு நிலமை இல்லை என்பதை இலங்கை அரசு சுட்டிக்காட்டுகிறது.

அனுப்பப்படும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் வருவோர் பற்றிய விபரங்களை இரு அரசாங்கங்களும் தீர்மானிப்பதற்கு முன்னர் பொருட்கள் அனுப்பப்படுவதை இலங்கை அரசு அனுமதிக்க முடியாது. இதுபற்றி கலந்துரையாட இலங்கை அரசு ஆயத்தமாகவுள்ளது."

இக் கடிதம் கிடைத்தவுடன் ராஜீவ் காந்தி கொதிப்படைந்துவிட்டார்.

உண்மையில் இலங்கை அரசின் முதல் கடிதத்தில் பொருட்களை அனுப்பலாம் என்று நேரடியாகக் கூறப்படவில்லை. ஆனால் ராஜீவ் காந்தியுடன் தொலைபேசியில் பேசும்போது ஜே.ஆர் சம்மதம் தெரிவித்துவிட்டார். அதனை ராஜீவ் தனது வெளியுறவு அமைச்சகத்துக்கு தெரிவிக்க, அதனடிப்படையில்தான் வெளியுறவு அமைச்சகம் இலங்கை அரசுக்கு கடிதம் அனுப்பியது.

ஆனால் ஜே.ஆர். தான் சம்மதம் தெரிவித்த விடயத்தை ஒரே அமுக்காக அமுக்கி விட்டதால், இந்திய அரசுதான் இலங்கை அரசின் கடிதத்தை பிழையாக அர்த்தப் படுத்திக் கொண்டது? அல்லது முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறது என்பதுபோன்ற கருத்து ஏற்பட வாய்ப்பிருந்தது.

### வழி மறிப்பு

ஆனாலும் இந்தியா தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை.

ஜூன் 3ம் திகதி. பகல் 2 மணி.

தமிழ் நாடு இராமேஸ்வரத்தில் இருந்து 19 மீன்பிடிப்படகுகள் உதவிப் பொருட்களுடன் புறப்பட்டன.

இந்திய கடலோரக் காவல் கப்பலான 'விக்ரம்' மேற்பார்வையிட்டுக் கொண்டிருக்க இந்திய கடற்படைக் ஹெலிக்கொப்டர் ஒன்று மேலே பறந்து நோட்டமிட்டுக்கொண்டிருந்தது.

படகுகளில் இந்திய செஞ்சிலுவைச் சங்க கொடிகள் பறந்துகொண்டிருந்தன.

இலங்கை கடல் எல்லையில் வைத்து இலங்கை கடற்படை ரோந்துப்படகு இந்தியப் படகுகளை வழிமறித்தது.

இந்திய அதிகாரிகளும் இலங்கை கடற்படை ரோந்துப் படகு கொமாண்டரும் 4 மணிநேரம் நடுக்கடலில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இலங்கை கடற்படை ஒரே பிடியாக நின்றது. இந்தியப் படகுகள் திருப்பிச் சென்றன.

இச் செய்தி உலகெங்கும் பரவியது.

ஜே.ஆரின் துணிச்சலைப் பாருங்கள் என்று இலங்கையில் உள்ள அவரது ஆதரவாளர்களும் குதிக்கத் தொடங்கி விட்டனர்.

இந்தியப் படகுகள் திரும்பிவிட்டதாமே. இனிமேல் என்ன நடக்கும்? புலிகளுக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்கள் போன்ற பாரிய உதவிகளை இந்தியா வழங்கலாம் என்றுதான் பலரும் நினைத்துக் கொண்டிருந்தனர்.

### அவசரக் கூட்டம்

ஜூன் 4. அதிகாலை ஒருமணி.

புதுடில்லியில் ராஜீவ் தலைமையில் உயர் அதிகாரிகள் அவசரக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அமைச்சர்கள், அதிகாரிகள், 'றோ' உளவுப்பிரிவு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் ஆறு மணிநேரம் கூட்டம் நடைபெற்றது.

கூட்ட முடிவில் அங்கிருந்தே தொலைபேசி மூலமாக தமிழக முதல்வர் எம்.ஜி. ஆருடன் தொடர்பு கொண்டார் 'றோ' அதிகாரி எஸ்.சந்திரசேகரன். அவர் சந்திரன் என்று சுருக்கமாக அழைக்கப்படுவார். தமிழ் நாட்டுக்காரர். தமிழர். அவர்தான் 'றோ'வில் இலங்கைப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவர்.

சுகவீனம். ஒழுங்காகப் பேசமுடியாத நிலை. அப்படியிருந்தும் தொலைபேசியில் எம்.ஜி.ஆர். சந்திரனுக்கு சொன்னார்:

**"எப்படியாவது இலங்கையிலுள்ள தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும்."**

இந்திய விமானப்படையின் மிராஜ் போர்விமானங்கள் தயாராகிக்கொண்டிருந்தன.

அதே நேரம் இந்திய இராணுவத் தளபதி சுந்தர்ஜியின் மேசையில் முன்கூட்டியே தயாராக இருந்த இரகசிய திட்ட ஆவணம் விரிந்தது.

அந்த பைலின் மீது எழுதப்பட்டிருந்த வார்த்தைகள்;

**-MO-SL-** (தொடர்ந்து வரும்)





படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# புலிகளுக்குத் தடை! பிடிவாதமான அணுகுமுறை!

தமிழ் அரசியல் கட்சிகள் சாத்வீகமான போராட்டம் ஒன்றை நடத்துவது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றன.

இலங்கைத் தமிழர் அரசியல் உரிமைகள் தொடர்பாக சாத்வீகமான முறையிலான அணுகுமுறைகளே 20 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ் அரசியல் தலைவர்கள் சாத்வீகமாகவும், அறிவு பூர்வமாகவும் தமிழர்களது அரசியல் கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டுமென்பதில் ஆர்வங்கொண்டிருந்தனர்.

இனவாதம் பேசியோ, அல்லது சிங்கள மக்களை வஞ்சித்தோ உரிமைகளைப் பெற வேண்டுமென தமிழ்த் தலைவர்கள் ஒரு போதும் எண்ணியதில்லை.

சிங்கள மக்களும் இந்த நாட்டில் வாழவேண்டும், தமிழ் மக்களும் சகல உரிமைகளும் பெற்று ஒற்றுமையாக வாழவேண்டுமென்பதே தமிழ்த் தலைவர்களது எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால் தமிழ் அரசியல்வாதிகளது நல்லெண்ணங்களுக்கு சிங்களப் பேரினவாதிகளே வேட்டு வைத்திருந்தனர்.

சுதந்திர இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா தமிழர்களது தாயக பூமியை ஊடறுத்து அவர்களது பாரம்பரிய மண்ணை சூறையிட வேண்டுமென்று திட்டங்களை வகுத்தார்; அத்துடன் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டுமிருந்தார்.

அவரைத் தொடர்ந்து அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரசகரும மொழி என்ற சட்டத்தை முன்னெடுத்து இன வாதத்தீயை மூட்டிவிட்டிருந்தார்.

# "ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு அரசியல் பிரவேசம் செய்த தமிழ் அரசியல் கட்சிகள் ஏமாற்றப்பட்டு வருகின்றன."



இந்த இரு தலைவர்களும் அடித்தளமிட்டுச் சென்றிருந்த இனவாத அத்திவாரங்களே இன்று நாட்டில் எண்ணிலடங்காத கல்லறைகள் உருவாவதற்கு வழியமைத்துள்ளன.

இலங்கையில் கடந்த 13 வருடங்களுக்கும் மேலாக வடக்கு-கிழக்கு யுத்தம் அரசியல் அணுகுமுறைகளுக்கே இடமின்றி நீடித்துச் செல்லுகின்றது.

ஆனால் இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் 30 வருடங்களுக்கும் மேலாக தமிழ் அரசியல் தலைவர்கள் சாத்வீகமாகவே உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார்கள்.

ஆனால் அவர்களது குரல்வளையை நசுக்கி விடுவதுபோல 1983ம் ஆண்டு வரை அவ்வப்போது வன்முறைகளும், காடைத்தனங்களுமே பேரினவாதிகளால் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

1983ம் ஆண்டின் பின்னரே தமிழர்களும் ஆயுதம் ஏந்தி, தமக்கும் போரிடத் தெரியும் என்று நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதனையடுத்துத் தொடங்கிய இலங்கையின் வடக்கு-கிழக்கு யுத்தமே இன்றுவரை ஒரு தீராத நோயாக முழு இலங்கையையும் பீடித்துள்ளது.

இப்போதும் தமிழ் அரசியல் கட்சிகள் சாத்வீகப் போராட்டத்தில் குதிக்க உத்தேசித்துள்ளன. ஆனால் இப்போராட்டத்துக்கு பேரினவாத அரசியலாளர்கள் எவ்வளவு தூரம் மதிப்பளிப்பார்கள் என்பது சந்தேகமாகவே உள்ளது.



சாத்வீகத்தையும், சத்தியாக்கிரகத்தையும் சிங்களத் தலைவர்கள் மதித்திருப்பார்களேயானால் 1956ம் ஆண்டு காலிமுகத்திடலில் அமைதியாகக் குழுமியிருந்த தமிழ் தலைவர்கள்மீது காடைத்தனம் கட்டவிழ்க்கப்பட்டிருக்கமுடியாது.

அத்துடன் 1958ம் ஆண்டிலும் இனக்கலவரம் வெடித்திருக்க முடியாது. அதனையடுத்து 1977ம், 1983ம் ஆண்டுகளிலும் இனக்கலவரங்கள் ஏற்பட்டிருக்கமுடியாது.

நிறைவேற்று அதிகாரங்களுடன் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனாகூட "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று அறிவித்து தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிராகரித்தார்.

இந்நிலையில் சாத்வீகம், சமாதானம் என்று குரல் கொடுத்த நிலையிலும் வன்முறைகளை எதிர்கொண்டதாலேயே வடக்கு- கிழக்குத் தமிழர்கள் ஆயுதபாணிகளானார்கள்.

தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அரசியல் கட்சிகள் சில உட்பட, பாராளுமன்ற பிரதிநிதித்துவமில்லாத தமிழ்க்கட்சிகள் சில கூட 13 வருடங்களுக்கு முன்னர் ஆயுதப்போராட்டக் குழுக்களாகவே இருந்தன.

கடந்த ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் பிரதான எதிர்க்கட்சியாகவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியைக்கூட அரசியலமைப்பில் புதியனவற்றைச் சேர்த்து பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை ஜே.ஆர்.தரப்பினர் இழக்கச் செய்திருந்தனர்.

எனவே எந்தவொரு நேர்த்தியான அரசியல் நிலைப்பாட்டுக்கும் இலங்கையின் சிங்களத்தலைவர்கள் உரிய மரியாதையைக் கொடுக்கவில்லை என்பதையே கடந்த கால வரலாறுகள் உணர்த்தியுள்ளன.

சாத்வீகம் என்பது மகாத்மா காந்தியின் காலத்தில் மட்டுமல்ல, அண்மைக்காலத்தில்கூட ஒருபலம்மிக்க ஆயுதமாக இருந்துள்ளதையே தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவின் கதை புலப்படுத்துகின்றது.

ஆனால் இலங்கையில் சாத்வீகம், சத்தியாக்கிரகம் என்பவை பலவீனமானவையாகவே எடைபோடப்பட்டுள்ளன. இதன்காரணமாகவே தடுத்துநிறுத்துவாரின்றி இரத்த ஆறு கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது.

ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு அரசியல் பிரவேசம் செய்த தமிழ் அரசியல் கட்சிகள் ஏமாற்றப்பட்டு வருகின்றன.

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி இருவேறு முனைகளில் கடும் எதிர்ப்பை முகங்கொடுத்துள்ளது.

ஒரு புறம் எல்.ரி.ரி.ஈ.யினருடன் கொடிய யுத்தத்தை ஆட்சியாளர்கள் நடத்துகின்றனர். மறுபுறம் பிரதான எதிர்க்கட்சியினரான ஐக்கிய தேசியக்கட்சியினர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்கப்போவதில்லை எனக் கூறிவருகின்றனர்.

இந்த இரு வேறு சூழ்நிலைக்கும் மத்தியிலேயே தமிழ் அரசியல் கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவென்றும், சந்திப்புக்கள், மகாநாடுகள் என்றும் அனைத்துப்புறமும் இடிபட்டவண்ணமுள்ளன.

சாத்வீகம் என்பது ஓர் உன்னதமான அணுகுமுறை; தற்போதைய சூழ்நிலையில் மிகவும் இன்றியமையாததாகவுமிருக்கின்றது. ஆனால் ஆட்சியாளர்களும், அவர்களை உலுப்பிவிடும் பேரினவாதக் கும்பல்களும் அதற்கு உரிய மதிப்பளிப்பார்களா? என்பது சந்தேகமே.

நாட்டின் பொருளாதார நிலை மோசமடைந்து போவதையும், நாளுக்குநாள் உயிரிழப்புக்கள் பெருகுவதையும், பொருட்படுத்தாது ஒரு பெரும்போரையே ஆட்சியாளர்கள் நடத்திவருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இலங்கையில் தடைசெய்வது குறித்தும் ஆட்சியாளர்கள் பரிசீலித்து வருகின்றனர்.

எல்.ரி.ரி.ஈ.யினரைத் தடை செய்யலாம்; அல்லது தடைசெய்யாது விடலாம். இதனால் எல்.ரி.ரி.ஈ.யினர் தரப்பில் எவ்வித மாறுதல்களும் ஏற்படப்போவதில்லை.

எல்.ரி.ரி.ஈ.யினர் இன்று நன்கு வளர்ச்சிபெற்ற ஆயுதப்போராட்ட அமைப்பாக இருக்கின்றனர்.

முல்லைத்தீவு முகாம் மீதான பெருந்தாக்குதலும், அதில் அவர்கள் பெற்ற வெற்றியும் அவர்கள் சாமான்யமானவர்களல்ல என்பதையே புலப்படுத்தியுள்ளது.

இலங்கைப் பாராளுமன்றத்தில் அண்மையில் நடத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் மீதான விவாதங்களில் கூட எல்.ரி.ரி.ஈ.யினரது பலத்தைக் குறைவாக மதிப்பிட வேண்டாமென்றே எதிர்க்கட்சியினர் குரலெழுப்பினர்.

முன்னாள் அமைச்சரான ரொனி டி மெல்கூட "எல்.ரி.ரி.ஈ. அமைப்பு ஒரு சராசரிப் பயங்கரவாத அமைப்பல்ல என்பது முல்லைத் தீவுத் தாக்குதல் மூலம் புலனாகியுள்ளது" என்று தெரிவித்தார்.

கச்சிதமான இராணுவ அணுகுமுறைகளைக் கொண்டுள்ள எல்.ரி.ரி.ஈ அமைப்பைத் தடைசெய்வதன் மூலம் அந்த அமைப்பு மீண்டும் பேச்சுவார்த்தைக் களத்தில் பிரவேசிக்கும் வாய்ப்புக்களையும் ஆட்சியாளர்கள் நிராகரித்துவிடுவர்.

இதன் விளைவு யுத்தம் தொடர்ந்து நீடிப்பதாகவே இருக்கும்.

எல்.ரி.ரி.ஈ.யினரது போக்கை அவதானிக்கும் பட்சத்தில் அவர்கள் அரசின் அரசியல் அணுகுமுறைகளில் நம்பிக்கையற்றுள்ளார்கள், என்பது தெளிவாகிறது.

காலநேர, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றவாறு யுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு தமது இலக்குகளை எட்டுவதிலேயே அவர்கள் முனைப்பாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

சர்வதேச ரீதியாக நோக்குமிடத்து- அண்மையில் செச்சினிய பிரிவினைவாதிகளுடன் கூட- ரஷ்யா சமரசத்துக்கு முன்வந்துள்ளது.

இந்தியாவில் காஷ்மீர் பிரச்சினை ஒரு பெருந்தலையிடியாக இருக்கின்றது. ஆனால் காஷ்மீர் பிரிவினை வாதப்போராட்டத்தை இந்தியா தடைசெய்து விடவில்லை.

நெருக்குதல்கள், இடையூறுகளுக்கு மத்தியில் காஷ்மீர் கிளர்ச்சியாளர்களுடன் பேசுவதிலேயே இந்திய அரசு முனைப்பாகவிருக்கின்றது.

வட அயர்லாந்தில் ஐரிஷ் கெரில்லாக்கள் பிரிவினைப்போராட்டத்தை நடத்திவருகின்றார்கள். ஆனால் பிரிட்டிஷ் அரசு தனது இராணுவ அரசியல் பலத்தைப் பின்னணியாகக்கொண்டு ஐரிஷ் குடியரசு இராணுவத்தை தடைசெய்யவில்லை.

கூடவே சர்வதேச சமூகத்திடமும் ஐ.ஆர்.ஏ.அமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று பிரிட்டிஷ் அரசு கோரவில்லை.

ஒரு பலம்மிக்க போராட்ட அமைப்பைத் தடைசெய்வதன் மூலம் அதனுடனான தொடர்புகள் அனைத்தையும் முழுமையாகத் துண்டித்து விடவே முடியும்.

அத்தகைய துண்டிப்பு ஏற்படுமானால் வன்முறை, யுத்தம் என்பதே ஒரு நியதியாகிவிடும். ஏனெனில் தடைசெய்யப்பட்ட அமைப்பு தனது பலம் அனைத்தையும் பிரயோகித்து தனது அரசியல் நிலைப்பாட்டை ஏற்கச் செய்வதற்கான பிரயத்தனங்களிலேயே குதிக்கும்.

எனவே எல்.ரி.ரி.ஈ.யை தடைசெய்வதைவிட அந்த அமைப்புடன் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தி பிரச்சினைகளை அணுகுவதே ஆரோக்கியமான அரசியலாக அமைய முடியும். ●

---

# மறுபடியும் பயங்கரம்


**முல்லைச் சமர் தொடர்பாக தமிழக சஞ்சிகையான 'இந்தியா ருடே'யின் பார்வை இது:**

சாவு, துன்பம், இத்துடன், இலங்கையின் இனப் போராட்ட வரலாற்றில் மாறவே மாறாத இன்னொரு அம்சமும் உண்டு. அது, தமிழீழ விடுதலைப் புலிகளின் விடாப்பிடி. ஒழிந்தார்கள் புலிகள் என்று ஒவ்வொரு முறையும் தப்புக் கணக்கு போட்டு வெற்றிக் கொண்டாட்டத்தில் களிப்பார்கள் புலிகளின் எதிரிகள். ஆனால் மீண்டும் புலிகள் எழுந்து சரியான பதிலடி தரும்போது அதிர்ச்சியில் உறைந்து போவார்கள். இப்போதும், யாழ்ப்பாண வீழ்ச்சிக்குப் பிறகு புலிகள் புதிய உத்வேகத்தோடு மீண்டும் பாய்ந்து தாக்கியிருக்கிறார்கள். இலக்கு வடக்குக் கரையிலுள்ள பரந்த முல்லைத்தீவு ராணுவ முகாம். ஜூலை 17 அன்று நள்ளிரவுக்கு சற்று பிந்தைய நேரத்தில், பலத்த காவல் போடப்பட்ட முல்லைத்தீவு முகாம் மீது நூற்றுக் கணக்கான கெரில்லாக்கள் திடீர் தாக்குதல் தொடுத்து அந்த ராணுவ முகாமை கைப்பற்றினார்கள்.

இழப்பு எவ்வளவு என்பதை கணிக்க கொழும்பிலுள்ள ராணுவ அதிகாரிகள் கடும் முயற்சி எடுத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில், ஜூலை 24 அன்று, கொழும்பு புறநகரில் நடந்த ரயில் குண்டுவெடிப்புகளில் 70 பேர் கொல்லப்பட்டனர். 100க்கும் அதிக மானவர்கள் காயமடைந்தனர். இது புலிகளின் கைவரிசை என்று அரசு சொல்ல, இது, "சிங்கள ஆளும் வகுப்பினரின் ஒரு பிரிவினர்" செய்த வேலை என்று புலிகள் மறுத்தார்கள். முல்லைத்தீவு தாக்குதலின் இரண்டாவது நாளில் கொல்லப்பட்ட ராணுவ வீரர்களின் எண்ணிக்கை 400 ஆக இருந்தது. ஐந்தாம் நாளில் 1208 ஆனது. தங்கள் தரப்பில் 68 பெண்கள் உள்பட 241 வீரர்களை இழந்ததாக புலிகள் சொன்னார்கள்.

ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்த வரை, முற்றிலும் இசகுபிசகான வேளையில் இந்த தாக்குதல் நடந்திருக்கிறது. இலக்கில்லாமல் செயல்படும் அரசு, பொருளாதாரத்தை சொதப்பும் அரசு என்று எதிர்க்கட்சிகள் வசைபாடும் தருணத்தில் அவருக்கு இது பேரிடி. இத்துடன், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பிறகு சிங்களவர் மத்தியில் கரை புரண்டோடிய உற்சாகமும் வடிந்து போய்விட்டது. ஏக விளம்பரத்தோடு கொண்டு வரப்பட்ட அதிகாரப் பகிர்வு திட்டத்தை சந்திரிகா அரசே கிட்டத்தட்ட கை கழுவிவிட்ட நிலையில், பிற தமிழர் குழுக்களும் வெறுப்படைந்திருக்கின்றன.

புலிகள் இனி பூனைகள் என்று கணக்குப் போட்டதுதான், அதிகாரப் பகிர்வு திட்டத்தை கொஞ்சம் கொஞ்சமாக சந்திரிகா கைகழுவி வந்ததற்குக் காரணம். இதனால், ஜனாதிபதி சிங்களவர்களுக்கு சார்பாக மட்டுமே நடந்து கொள்கிறார் என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. இப்போது ராணுவம் சிதறடிக்கப்பட்டிருக்கிற நிலையில் அவருக்கு இரண்டு முனைகளிலும் ஆபத்து காத்திருக்கிறது. முதலாவதாக, சிங்கள தீவிரவாதம் மீண்டும் எழலாம். இரண்டாவது புலிகளின் தாக்குதல் தொடரலாம்.



முல்லைத்தீவு முகாமிலிருந்து மூன்று கவச வாகனங்கள், இரண்டு 122 மி.மீ.கன பீரங்கிகள் உட்பட ஏராளமான தளபாடங்களைப் புலிகள் அள்ளிக் கொண்டு போயிருக்கிறார்கள். இவற்றால் அந்தப் பகுதியிலுள்ள ராணுவ முகாம்களுக்கும் ஆபத்து காத்திருக்கிறது.

முல்லைத்தீவு வெற்றி புலிகளுக்கு பெரிய தெம்பாக இருக்கும். புலிகளின் ராணுவ, அரசியல் இமேஜ் தமிழர்கள் மத்தியில் மீண்டும் கூடும். யாழ்ப்பாண வீழ்ச்சியைத் தொடர்ந்து குறைந்துபோன நிதி சேர்ப்பு நடவடிக்கை மேலும் தீவிரமாகும். யாழ் நகரின் வீழ்ச்சிக்குப் பிறகும் போர் தொடரும் என்று சூளுரைத்த புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இது வெற்றிதான். புலிகள் தங்கள் வைராக்கியத்தை மீண்டும் நிரூபித்துவிட்டார்கள். இலங்கை கொந்தளிப்பு இப்போது அடங்கப் போவதில்லை என்பதுதான் இதற்கு அர்த்தம்.

-கொழும்பிலிருந்து பி.ஜெயராம்.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி
## — பூலான்தேவி —

**7**

வெடியோசை கேட்டதும் நான் பயந்துபோனேன். கைலாசுக்கு என்னா கியதோ என்ற நினைப்பு அந்தப் பயத்தை விரட்டிவிட்டது.

நான் கண்களைத் திறந்து பார்த்தேன். என்னையே பார்த்துக்கொண்டு அவர்கள் நின்றார்கள்.

அவர்கள் ஆறு பேர். ஆறுபேரும் துப்பாக்கி வைத்திருந்தனர். அவர்களில் ஒருவன் என்னைப் பார்த்து விகாரமாய் இளித்தான்.

நான் கைலாஸை தேடினேன். அவன் ஒரு ஒதுக்குப்புறமாகச் சென்று கொள்ளை யர்களில் ஒருவனுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

எனக்கு போன உயிர் திரும்பிவந்தது போல இருந்தது. என் கைலாஸ் உயிரோடு இருக்கிறான் அதுபோதும். இனி நடப்பதைப் பார்த்துவிடலாம்.

கைலாஸ் அவனுடன் என்ன பேசு கிறான் என்று காதில் விழவில்லை. சற்று தூரத்தில் நின்று பேசியதாலும், இரகசியம் பேசுவதுபோல குரலை தாழ்த் திப் பேசிக் கொண்டிருந்ததாலும் ஒன்றுமே கேட்கவில்லை.

கைலாஸ் எனக்காக மன்றாடு கிறானா? 'எங்களை ஒன்றும் செய்ய வேண்டாம் விட்டுவிடுங்கள்' என்று கெஞ் சிக்கொண்டிருக்கிறானா? அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன்.

என் எதிரே நின்றவர்களில் ஒருவன் இப்போதும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் என் முகத் தைப் பார்க்கவில்லை. அப்போதுதான் கவனித்தேன். என் சேலை மார்புப் பக்கத்தில் விலகியிருந்தது. சட்டென்று சேலையைச் சரிப்படுத்திக் கொண்டேன். 'பொறுக்கிப் பயல்.' எதிரே நின்றவனை மனதில் சபித்தேன்.

என் எதிரே நின்று பார்த்துக்கொண் டிருந்தவன் என் அருகில் வந்தான். என் முகத்துக்கு அருகில் குனிந்தபடி, 'அங்கெல்லாம் கைபோட்டானா கண்ணு?" என்று கேட்டான்.

சட்டென்று என் நெஞ்சில் கைவைத் தான்.

எனக்கு எப்படித்தான் அப்படி ஒரு கோபம் வந்ததோ தெரியவில்லை. 'பளார்' என்று அவன் கன்னத்தில் அறைந்தேன். என் பலமெல்லாம் திரட்டி ஓங்கிக்கொடுத்த அறை.

அவன் தடுமாறிப்போனான். அதற் குள் மற்றவர்களும் என் அருகில் வந்து விட்டார்கள்.

அவன் தன் கன்னத்தை தொட்டுப் பார்த்துக்கொண்டே, தன் மறுகையில் இருந்த துப்பாக்கியை ஒருவனிடம் கொடுத்துவிட்டு, 'ஏன்டி, தொட்டால் அடிப்பாயா?" என்றான்.

ஏனோ எனக்குப் பயம் வரவில்லை. "உதைப்பேன்!" என்றேன்.

"எங்கே உதை பார்க்கலாம். இப் போது நான் கோழிக்குஞ்சைப் பிடிக்கப் போகிறேன். உதை பார்க்கலாம்!" சொல்லிக்கொண்டே என்னை நெருங் கினான்.

எனக்கு புத்திலாலின் ஞாபகம் வந் தது. அவனுக்கு எந்த இடத்தில் உதைத் தேனோ, அதே இடத்தில்தான் இவனுக் கும் உதைக்க வேண்டும் என்று முடிவு செய்து தயாராய் நின்றேன்.

அவன் என் இரண்டு தோள்களிலும் தன் கைகளால் அழுத்தினான்.

அழுத்தட்டும். என் மேல் சாயட்டும். அப்போதுதான் உதைக்க வசதியாக இருக்கும்.

அதேநேரத்தில், "அவளை விடு!" என்று குரல் கேட்டது. மகுடிக்குக் கட்டுப் பட்ட பாம்புபோல, அவன் என்னை விட்டுப் பின்னடைந்தான்.

கைலாசும் அவனோடு பேசிக் கொண்டிருந்தவனும் என் பக்கத்தில் வந்துவிட்டனர். கைலாசோடு பேசிக் கொண்டிருந்தவன்தான் குரல் கொடுத்த வன் என்று புரிந்தது.

அவன்தான் அந்தக் கூட்டத்தின் தலைவனாக இருக்கவேண்டும்.

என்னைத் தொட்டவனின் சட்டையை கொத்தாகப்பிடித்து, கன்னத்தில் அறைந் தான்.

"இனிமேலும் இப்படி நடந்தாய், சுட்டுப் பொசுக்கிவிடுவேன்." என்றான்.

எனக்கு அவன்மேல் அந்த நொடியே மதிப்பு ஏற்பட்டுவிட்டது.

என் சித்தப்பா, சித்தாப்பாவின் மகன், அந்தப் பெண் பொறுக்கி கிராம அதிகாரி, புத்திலால் என்று நான் சந்தித்த அத்தனை ஆண்களிலும் எனக்கு வெறுப்பே ஏற் பட்டிருந்தது.

கைலாஸ் நல்லவன்தான். ஆனால் வீரம் இல்லாதவன். எல்லோரையும்விட இந்தக் கொள்ளைக்கூட்டத் தலைவன் நல்லவன். துணிச்சலானவன். என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டேன்.

"கைலாஸ் இந்தப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு போ!" என்றான் அவன்.

அவர்களைவிட்டு விலகி சற்றுத் தூரம் வந்ததும் கைலாஸ் கேட்டான்:

"பூலான் பயந்துவிட்டாயா?"

"நீ பயப்படவில்லையா?"

"அவர்கள் எனக்குத் தெரிந்தவர்கள் தான்."

"கொள்ளைக்காரர்கள்தானே?"

"ம்..ம்..ஆனால் நல்லவர்கள். உன்னில் கைவைத்தவனுக்கு என்ன நடந்தது, பார்த் தாய்தானே!"

"அவர்கள் உனக்கு எப்படிப் பழக்கம்?"

"அதெல்லாம் இரகசியம். வெளியே சொல்லக்கூடாத இரகசியம்."

"ஏன், சொன்னால் என்ன?"

"பொலிஸ்காரர்கள் வந்து என்னை மாமியார் வீட்டுக்கு கொண்டுபோய் விடுவார் கள்!"

"மாமியார் வீட்டுக்கா?"

"மாமியார் வீடென்றால் சிறைச்சாலை" என்று சிரித்தான் கைலாஸ்.

"நடந்தது எதனையும் வீட்டில் சொல் லாதே என்ன?"

"நீ மாலை போட்டதையுமா?"

"முக்கியமாக அதனைத்தான் சொல் லாதே. நேரம் வரும்போது நானே சொல்லிக் கொள்கிறேன் சரியா?"

"சரி!"

"கள்ளி!" சடக்கென்று என்னைக் கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டான்.

வீட்டுக்குப்போனதும் "பட்டணம் எப்படி இருந்ததடி பூலான்?" என்றாள் மாமி.

கைலாஸ் என்னை மனைவியாக்கிக் கொண்டதை இவள் அறிந்தால் என்ன செய்வாள்? என்று நினைத்துப் பார்த்தேன். கலக்கமாக இருந்தது. மாமியை ஏமாற்று கிறேனே என்பது கவலையாக இருந்தது.

நான் என்ன செய்ய முடியும்? கைலாஸ் தானே கட்டாயப்படுத்தினான். என்னை கேட்காமலேயே மாலை போட்டான். என்று சமாதனாம் சொல்லிக் கொண்டேன்.

"என்னடி, பதிலைக் காணோம்?"

"நல்லாயிருந்தது மாமி. இதோ வளை யல். கைலாஸ் வாங்கிப் போட்டுவிட்டது" என்றேன்.



தருவது — ரசிகன்

"என் ராசாத்தி! சாப்பிட்டுவிட்டுப் போய் தூங்கு, போ!"

கைலாஸின் மனைவி இருமிக்கொண்டு வந்தாள். அவள் முகத்தைப் பார்க்க சங்கட மாக இருந்தது. குழந்தையைத் தூக்கும் சாட்டில் முகத்தைக் குனிந்து கொண்டேன்.

இரவு தூக்கம் வரவில்லை.

அன்று நடந்த சம்பவங்கள் எல்லாம் மீண்டும் மீண்டும் நினைவில் வந்துபோய்க் கொண்டிருந்தன.

கைலாஸ் பதுங்கிப் பதுங்கி என் பக்கத்தில் வந்து படுத்துக்கொண்டான்.

என்னைத் தன் பக்கமாக திருப்பிக் கொண்டு என் நெற்றியில் உதடு பதித்தான். அவன் மூச்சு சூடாக என் முகத்தில் பட்டுக்கொண்டிருந்தது.

என் உதடுகளை தனது விரல்களால் வருடிப்பார்த்தான். மூக்கைக் கிள்ளினான்.

கைலாஸின் மனைவி இருமுகின்ற சத்தம் துல்லியமாகக் கேட்டது. நான் பயந்து போனேன். உடம்பு முழுக்க நெருப்புக்கு அருகே இருப்பதுபோல வெப்பமாக இருந் தது.

"வேண்டாம்.. மா.மாமி..மா." கைலாஸ் பேசவிடவில்லை. தன் உதடுகளால் தடை போட்டுவிட்டான்.

கைலாஸின் கையொன்று அதிக, மிக அதிக சுதந்திரம் எடுத்துக்கொண்டு அலைந்து திரிந்தது.

யாரோ நடமாடுவதுபோல சத்தம் கேட்கிறது. கைலாசுக்கு சொல்லலாம் என்றால் அவன் என்னை பேசவிடும் நிலையில் இல்லை.

காலடிச்சத்தம் என் காதுக்கு நன்றாக கேட்கிறது.

யாரோ வருகிறார்கள்.

கைலாஸ் இப்போது என்மீது பரவத் தொடங்கியிருந்தான்.

"கை..கை" பேசவிடாமல் வாயைத்தன் ஒரு கையால் பொத்திக்கொண்டான்.

'யாரோ வருகிறார்கள்' என் நெஞ்சுக் கூட்டுக்குள் பயம் நிரம்பிவழிந்தது.

கைலாஸை என்மீதிருந்து பிடித்துத் தள்ளுவதைவிட வேறு வழியில்லை.

கைலாஸ் என் கழுத்துக்குக் கீழே முகம் வைத்திருந்தான். பாரமாக இருந்தான்.

கைலாஸை விலக்க அவன் தோளில் நான் கைவைப்பதற்கும், காலடிச்சத்தம் அருகில் வந்து, விளக்கு வெளிச்சம் எம்மீது விழவும் சரியாக இருந்தது.

கைலாசை தள்ளிவிட்டுக் கொண்டே, வந்தது யாரென்று பார்த்தேன்.

மூச்சே நின்றுவிடும்போலிருந்தது.

வந்தது கைலாஸின் மனைவி.

கைலாஸ் அப்போதுதான் கவனித்தான். அவன் முகம் வெறிச்சோடியது.

அதற்குள் கைலாஸின் மனைவி கத்தத் தொடங்கிவிட்டாள்.

"நான் சந்தேகப்பட்டது சரியாய்ப் போச்சு. வளையல் வாங்கிக் கொடுக்கிறாராம் வளை யல். எனக்கு ஒரு நாளாவது வாங்கித் தந்தியா பாவி மனுசா? சிறுக்கி, சின்னச் சிறுக்கி. குடிகெடுக்க வந்த கோடாரி!" கைலாஸை திட்டியவள் கோபத்தையும், வெறுப்பையும் என்மீது திருப்பத் தொடங்கி விட்டாள்.

சத்தம் கேட்டுத் தூக்கக் கலக்கத்துடன் ஓடிவந்த மாமி, நிமிஷத்தில் சகலமும் புரிந்து கொண்டாள்.

இப்போது கைலாஸின் மனைவி மாமி மீது திரும்பினாள்.

"பட்டணம் பார்க்க அனுப்பிவைத்தது நீங்கள்தானே! பட்டணம் போன இடத்தில் என்ன மந்திரம் போட்டாளோ, என் புருசனை மயக்கிப் போட்டாளே! பூனைமாதிரி இருந்து கொண்டு இந்த மனுசன் இப்படி செய்யு மென்று நான் கண்டேனா? என் காளியம்மா. இந்தச் சிறுக்கிக்கு கண்போகவை தாயி!"

குந்தியிருந்து தலைவிரிகோலமாக ஒப் பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள்.

"என்னடா இதெல்லாம்?!" என்றாள் கைலாசிடம் மாமி.

இனி ஏன் மறைக்க வேண்டும். கைலாஸ் ஏன் வாய் திறக்காமல் இருக்கிறான். சொல்ல வேண்டியதுதானே என்று நினைத்தேன்.

கைலாஸ் வாய் திறந்தான்.

"அம்மா! அது வந்து..." தயங்கினான்.

என்ன சொல்லப்போகிறான்? என் நெஞ்சு துடிக்க அவன் வாயிலிருந்து வரும் வார்த்தைகளுக்காகக் காத்திருந்தேன்.

"பூலான்தான் என்னை.. என்னை.."

"உன்னை..?"

"கட்டாயப்படுத்திப் படுக்கைக்கு கூப் பிட்டாள்.."

என் தலையில் இடி இறங்கியது. தலை சுற்றியது.

நான் மயங்கித் தரையில் மல்லாக்காகச் சரிந்தேன்.

என் முதல் காதலும் என்னோடு சேர்ந்து மயங்கிச் சரிந்து, கருகிக்கொண்டிருந்தது.

(தொடர்ந்து வரும்)

**இதுவரை**

பதினொரு வயதில் பூலான்தேவிக்கு முப்பத்தொரு வயது புத்திலாலை கல்யாணம் செய்துவைக்கின்றனர். பூலான் புத்திலாலை வெறுக்கிறாள். பலாத்காரம் செய்ய முயலும்போது தாக்கிவிடுகிறாள். பூலானை வீட்டுக்கு திருப்பி அனுப்புகிறான் புத்திலால். பூலான் வீட்டார் அவளை மாமியார் வீட்டுக்கு அனுப்ப, மாமியின் மகன் கைலாஸ் பூலானை விரும்புகிறான். அப்போது பூலானுக்கு 15 வயது. ஒரு கோயிலில் வைத்து அவளுக்கு மாலை போட்டு மனைவியாக்கிக் கொள்கிறான். வீடு திரும்பும் வழியில் இருவரும் சரசத்தில் ஈடுபட்டிருக்கையில், கொள்ளையர் வருகின்றனர்.

இனி...



பூலான

# அதிபர் கிளிண்டனை
## மிரட்டும் அழகிகள்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலும் வரப்போகிறது. அதிபர் கிளிண்டன்மீது ஏகப்பட்ட புகார்கள் கிளம்பிக்கொண்டி ருக்கின்றன.

அமெரிக்க அதிபராக பதவிவகித்த கென்னடிக்குப் பின்னர் பெண்கள் விவகாரத் தில் சம்பந்தப்படுத்தி அதிகம் பேசப்படுபவர் கிளிண்டன்தான்.

கிளிண்டன் ஒரு ஜொள்ளு மன்னன் என்று அவரது அரசியல் எதிரிகள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

கிட்டத்தட்ட எழுபது பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தாராம் கிளிண்டன். அதிலும் பதினொரு பேருக்கு விசேஷ கவனிப்பாம்.

மனைவி ஹிலாரியைவிட கிளிண்டனுக்கு அதிகம் பிடித்த மானவர் ஜெனிபர் பிளவர்ஸ் என்ற அழகி. கிளிண்டன் கவர்னராக இருந்த போது ஏற்பட்ட தொடர்பு அது. 12 வருடங்கள் அந்தத் தொடர்பு நீடித்ததாம்.

காபரே நடனக்காரியாக இருந்த ஜெனிபர் பிளவர்ஸ் கிளிண் டனின் சிபாரிசில் அரச உத்தி யோகம் பெற்றுக்கொண்டாள்.

கிளிண்டன் ஜனாதிபதியான தும் அவரது முன்னாள் காதலிகள் பலர் ஒரே சமயத்தில் கிளர்ந் தெழுந்துவிட்டார்கள்.

பவுலா ஜோன்ஸ் என்னும் அழகி கிளிண்டன்மீது வழக்குத் தொடுத்தார்.

என்ன ஆதாரம் இருக்கிறது? என்று கிளிண்டனால் கேட்க முடியவில்லை.

கிளிண்டனின் அந்தரங்க அடையாளங்கள் சிலவற்றையும் தனது புகாரில் குறிப்பிட்டிருக் கிறார் படு புத்திசாலியான பவுலா ஜோன்ஸ். பின்னர் தேவைப்படும் என்று முன்னரே குறிப்பு எடுத்துவைத்து விட்டார் போலிருக்கிறது.



பவுலா ஜோன்ஸ் ஒரு பக்கம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்க, வெண் ஜோலா என்னும் பெண்ணும் புகாரோடு புறப்பட்டார்.

"என்னைத் தொல்லைப்படுத்துகிறார். வீட்டுக்கும் போன் செய்து என்னை அழைக்கி றார்" என்பது வெண் ஜோலாவின் புகார்.

கிளிண்டன் கவர்னராக இருந்த ஆர்க்கன்சா மாநிலத்தில் அழகிப்போட்டி நடந்தது. சாலி பெர்மியூ என்னும் பெண் 'மிஸ் ஆர்க்கன்சா'வாக தேர்ந்தெடுக்கப் பட்டாள்.

சாலி பெர்மியூவை தேடிப்போனாராம் கிளிண்டன். "நைசாகப் பேசி என்னை அமுக்கிவிட்டார்." என்று சொல்லியிருக் கிறார் சாலி பெர்மியூ.

சாலி பெர்மியூ பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார். "கிளிண்டனும் நானும் நான்கு மாதங்கள் ஜாலியாக இருந்தோம்" என்று கூறியிருக்கிறார்.

ஜோ ஜென்கின்ஸ் என்ற மற்றொரு அழகி கிளிண்டனை 'பெண் பித்தர்' என்று வர்ணித்திருக்கிறாள். அழகான பெண்கள் என்றால் ஹி..ஹி என்று பல்லைக் காட்டுவார். தொலைபேசியில் கூட ஒருமணி நேரம், இருமணி நேரம் புலம்புவார் என்கிறார் ஜென்கின்ஸ்.

இவர்களையெல்லாம் மிஞ்சும் வகை யில் பாபி ஆன்ட்டி என்னும் பெண் குண்டொன்றைத் தூக்கிப்போட்டுள்ளார். "எனது பதினொரு வயது மகனுக்கு கிளிண்டன்தான் அப்பா. கிளிண்டன் என்னை மிரட்டி பணியவைத்து உறவு வைத்துக்கொண்டார்" என்கிறார் பாபி.

இவர்கள் எல்லாம் போதாது என்று கிளிண்டனின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகளும் புகார் சொல்கிறார்கள். "கிளிண்டனுக்காக நாங்கள் பெண்களை சேகரித்துக் கொடுத்தோம். கிளிண்டன் சபலம் உள்ளவர்தான்." என்று அடித்துக் கூறியிருக்கிறார்கள்.

இந்தப் புகார்கள் எதற்கும் கிளிண்டன் பதில் சொல்லாமல் இருக்கிறார்.

புகார்கள் எல்லாம் கிளிண்டன் கவர்னராக பதவிவகித்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பற்றியே எழுந்துள்ளன.

ஜனாதிபதியானதும் கிளிண்டன் நல்ல பிள்ளையாகிவிட்டார். பெண்களை ரசிப்ப தோடு சரி. அதற்கு மேல் வம்பு தும்புக்குப் போவதில்லை என்று நினைத்தால், புதிதாக ஒரு புகார் கிளம்பியிருக்கிறது.

முன்னாள் துணை ஜனாதிபதி வோல்டர் மண்டேலின் மகளான எலப்னர் என்ற அழகான பெண்ணை கிளிண்டன் காதலிக்கத் தொடங்கியிருக்கிறாராம்.

காதல் விவகாரங்களில் அமெரிக்கா மக்கள் தாராளமாக இருப்பவர்கள். அப்படியிருந்தும் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் காதல் லீலைகளில் தாராள மாக நடந்து கொள்வதை அவர்கள் விரும்புவதில்லை.

அதனால், கிளிண்டனின் காதல் லீலைகள் பற்றிய செய்திகள் அவரது எதிர்காலத் தேர்தல் வெற்றிக்கு ஒரு சவால்தான். ஆனாலும் கிளிண்டன் கவலைப்படுவதுபோலத் தெரியவில்லை.

# "நல்லவிலை கிடைத்தால் கொடுத்துவிடுவோம்"
## வறுமையில் ஒரு வியாபாரம்



ஆண்களுக்கு சீதனம் கொடுத்து திரு மணம் நடத்துவதுதான் தற்போது பரவலான விஷயம்.

பெண்ணுக்கு விலைகொடுத்து வாங்கி கல்யாணம் செய்யும் பழக்கமும் இப்போதும் இருக்கத்தான் செய்கிறது.

இந்தியாவின் சில பகுதிகளிலும் பெண்ணை பேரம்பேசி வாங்கி திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது.

பூலான்தேவியை அவளது பதினொரு வயதில் ஒரு பசுமாட்டையும், சைக்கிளையும் மணமகனிடம் வாங்கிக்கொண்டு திரு மணம் செய்து கொடுத்தனர்.

சமீபத்தில் பி.பி.சி. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ருமேனியாவில் நடை பெறும் சம்பவத்தைக் காண்பித்தார்கள்.

ருமேனியாவில் ஈஸ்டர் பண்டிகைக்கு பத்துத் தினங்கள் முன்பாக பெண்களை பேரம் பேசி விற்கும் சந்தை கூடுகிறது. பருவமடைந்த பெண் பிள்ளைகளை இந்தச் சந்தைக்குப் பெற்றோர் அழைத்து வருகின்றனர்.

அவர்களை விற்பனை செய்வது மூலம் தமது வறுமைக்கு நிவாரணம் தேடவே பெற்றோர்கள் அவ்வாறு செய் கின்றனர்.

பெண்களை சந்தைகளில் வாங்கிச் செல்லுவோர் தம் ஆண்பிள்ளைகளுக்கு அவர்களை திருமணம் செய்துவைக்கின் றனர். அல்லது வீட்டு வேலைகளுக்கு பயன்படுத்துகின்றனர்.

16 வயது பெண் ஒருத்தியையும், அவளது பெற்றோரையும் காண்பித்தார் கள். கடந்த நாலு வருடங்களாக அப் பெண்ணை சந்தைக்கு அழைத்து வருகி றார்களாம். விலை சரியாக அமையாததால் விற்காமல் வைத்திருக்கிறார்களாம். நல்ல விலை கிடைத்தால் அவளைத் தள்ளி விடலாம் என்று காத்திருக்கிறார்கள்.

ருமேனியா கிழக்கு ஐரோப்பிய நாடு களில் ஒன்று. சோசலிச நாடாக இருந்த ருமேனியாவில் 1989இற்ப் பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இப்போது வறுமை தலைவிரித்தாடுகிறது.





படிப்பகம்

# அசைந்தால் சுழலும்

## தகவல் பெட்டி

மூக்கின் மேல் ஒரு குச்சியை வைத்தபடி நிற்பதுகூட முடியாத காரியம். இவர் என்ன செய்கிறார் பாருங்கள். மூக்கின் மேல் ஒரு குழாயை வைத்து, அதன்மேல் இரு தட்டுகளில் 8 கிளாசுகளை சுமந்துகொண்டு நிற்கிறார்.

அத்தோடு விடவில்லை. இடுப்பில் இருக்கிறது பாருங்கள் ஒரு வளையம். இடையை லாவகமாக அசைத்து அந்த வளையத்தை கழற்றிக்கொண்டும் இருக்கவேண்டும். சமநிலை தவறினால் கிளாஸ் விழுந்து உடையும். இடை அசையத் தவறினால் வளையம் நழுவிக் கீழே போய்விடும். இரண்டையும் கச்சிதமாகச் செய்து காட்டினார் இந்த சாதனைப் பெண். இவரது பெயர் நானா ஜியாங். வயது எத்தனை தெரியுமா? பத்து வயதுதான்.

கீழே உள்ள படத்தில் உடலை வில்லாக வளைத்து, வாயில் உள்ள குழாயில் 8 வைன் கிளாசுகளை தாங்கிக்கொண்டிருக்கிறார். கிளாசுகளின்மீது ஒரு பூச்சாடியும் இருக்கிறது.

சீனாவில் நடைபெற்ற ஒரு கலைவிழாவில் இந்த அரிய வித்தைகளைச் செய்துகாட்டி அசத்தினார் நானா ஜியாங். ஆள் சிறிது, அசத்தல் பெரிது.





# கொம்புகள் மூன்று

ஓணான் என்றா நினைக்கிறீர்கள்? கொஞ்சம் தப்பு, கொஞ்சம் சரி. இதன் பெயர் குமில்யுன். அசப்பில் ஓணானைப் போலவே இருக்கும். ஏனெனில் ஓணான் குடும்பத்தைச் சேர்ந்ததுதான் இதுவும்.

குமில்யுன் என்றழைக்கப்படும் இந்த பிராணிகளில் ஆண் குமில்யுன்களுக்கு மட்டும் தலையில் மூன்று கொம்புகள் இருக்கும். படத்தில் இருப்பது ஆண்.

கொம்புகள் இருப்பதால் ஆண் குமில்யுன்களுக்குள் அடிக்கடி கொம்புகளால் மோதி சண்டை மூளும். (அங்கும் சகோதரச் சண்டையா?)

இவைகளின் பார்வையில் பயங்கரக் கூர்மை. சாப்பிடுவது நாக்கினால். நீளமான நாக்கு இருப்பதால் சிறிய உயிரினங்களை நாக்கால் வளைத்து கப்பென்று விழுங்கி விடுகின்றன. கிழக்கு ஆபிரிக்கக் காடுகளில்தான் இவை அதிகமாகக் காணப்படுகின்றன.



# டேக் இட் ஈஸி

**வா**னத்தில் 'டைவ்' அடிக்கும் இந்த வீராங்கனையின் பெயர்; றோஸ் ரொம்கின்ஸ், வயது 26.

அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி துறைமுகத்தின் மேல் வானத்தில் 'அக்ரோபற்றிக்ஸ்' என்கின்ற சாகச விளையாட்டை நிகழ்த்திக் காட்டினார்.

பல்லாயிரம் அடி உயரத்தில் புவியீர்ப்புவிசை சற்றுக் குறைவாயிருக்கும். மெதுவாக அந்தரத்தில் அசைந்தாடலாம். புவியீர்ப்புவிசையின் மட்டத்திற்கு வந்ததும் வேகமாக புவியை நோக்கி கவரப்படாமலிருக்க, முதுகில் மாட்டியிருக்கும் பாரசூட்டினை இயக்கிப் பறக்க விடவேண்டும். பாரசூட் இயக்கத்தில் பிழை நேர்ந்தால் சாவது உறுதி. சாவுக்கு பயந்தால் சாதனை செய்ய முடியுமா? இதற்கெல்லாம் தேவை டேக் இட் ஈஸி பொலிசி.




வயதாகிவிட்டாலே தங்களுக்கு இயலாமை வந்து விட்டதாக முடங்கிப்போவார்கள் சிலர்.


அமெரிக்காவில் கலிபோர்னியாவில் வசிக்கும் வியோலா கிரானுக்கு இப்போது 90 வயது. வயதாக, வயதாக அவருக்கு சுறு சுறுப்பும் கூடிக் கொண்டே போகிறது.

நீச்சல் விளையாட்டுக்களில் புகுந்து தூள் பண்ணுகிறார் இந்த 90 வயது இளைஞி. நீச்சல் குளம் ஒன்றில் அவர் டைவ் அடித்துப் பாயும் காட்சியைப் பாருங்கள். உங்கள் வீட்டில் உள்ள வயதானவர்களிடம் இந்தப் படத்தை ஒருமுறை காண்பிப்பது நல்லது. அதற்காக அவர்களைப் பாயச் சொல்ல வேண்டாம். ஒன்று கிடக்க ஒன்றாகிவிடும். வயதாகிவிட்டதே என்று முடங்கிக் கிடக்காமல் சுறு சுறுப்பாக இருக்கட்டுமேன். அதற்காக மட்டும் படத்தைக் காண்பிக்கலாம்.

# தொண்ணூறிலும் துள்ளவரும்!









# நீருக்குள் கார் ஓடும்

கப்பலில் இருந்து ஒருவர் அதிசயமாகப் பார்ப்பது, நீருக்குள் ஓடும் காரைப் பார்த்துத்தான். நமக்கும்தான் ஆச்சரியம்.

தரையிலும், தண்ணீரிலும் ஓடும் கார் ஒன்றை இங்கிலாந்தைச் சேர்ந்த டைம்டட்டன் என்பவர் கண்டுபிடித்துள்ளார். இந்தக் காருக்கு 'டைட்டன் மாரினா' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

விரைவில் இக் கார் மூலம் இங்கிலாந்தின் இங்கிலீஸ் கால்வாயையும், ஜெர்மனில் உள்ள லீமான்ஸ் கால்வாயையும் கடந்து சாதனை செய்யப்போகிறாராம்.

இப்படியான கார் பாவனைக்கு வந்தால் இலங்கை போன்ற நாடுகளில் உள்ள மழைக்கால 'தெருக்கடலில்' பயணம் செய்ய உபயோகமாக இருக்கும்.

www.padippakam.com

## சரிதா வாழ்வில் புயல்

பாலச்சந்தர் படங்கள் உட்பட பல படங்களில் நடித்து நல்ல நடிகை என்று பெயர் எடுத்தவர் சரிதா. மலையாள நடிகர் முகேஷை காதலித்து கைப்பிடித்தார்.

தற்போது படவாய்ப்புக்கள் இல்லாவிட்டாலும் தமிழில் நடிகைகளுக்கு பின்னணிக் குரல் கொடுத்து சம்பாதிக்கிறார் சரிதா.

இப்போது சரிதாவின் வாழ்க்கையில் புயல் வீசத் தொடங்கியிருக்கிறது. சரிதாவின் கணவர் முகேஷ் வேறொரு நடிகை மீது மையல் கொண்டுவிட்டார்.

பூந்தோட்டக்காவல்காரன் உட்பட தமிழில் சில படங்களில் நடித்தவர் வாணி விசுவநாத். தற்போது அவர் மலையாளப் படவுலகில் பிஸியாக இருக்கிறார். வாணிமீதுதான் முகேஷ் மொய்த்துக் கொண்டிருக்கிறார். இருவரும் சமீபத்தில் துபாய் நாட்டுக்கு போய் ஜாலியாக பொழுதைப் போக்கிவிட்டு திரும்பியிருக்கிறார்கள்.

விஷயம் தெரிந்த சரிதா வெறுத்துப்போய் இருக்கிறார்.

## குஷ்புவின் 'கோபாலா, கோபாலா'

'நாட்டுப்புறப்பாட்டு' படத்தின் வெற்றிக்குப் பின்னர் குஷ்புவின் சம்பளம் கிடு கிடுவென்று உயர்ந்துவிட்டது. ஒரு படத்திற்கு ஏழு இலட்சம் கேட்கிறார்.

குஷ்பு புதிதாக ஒப்பந்தமாகியுள்ள படம் 'கோபாலா..... கோபாலா'. படத்தை இயக்கி, திரைக்கதை, வசனம் எழுதி, கதாநாயகனாக நடிக்கிறார் பாண்டியராஜன்.

பாண்டியராஜனும், குஷ்புவும் ஜோடியாக நடிப்பது இதுதான் முதல் தடவை.

மணிவண்ணன், செந்தில், ஜனகராஜ், சார்லி, கோவை சரளா, ஜோதிமீனா ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை: தேவா. பாடல்கள்: வைரமுத்து.

## அஞ்சுவின் 5 ஆசைகள்

'பூவே உனக்காக' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் அஞ்சு அரவிந்த்.

அஞ்சு தன்னுடைய ஐந்து சின்ன சின்ன ஆசைகளை சொல்லியிருக்கிறார்.

1. ரஜினியுடன் நடிக்க வேண்டும். 2. பொய்யே சொல்லாமல் வாழ வேண்டும். 3.கடலுக்கு நடுவில் நின்று ஓவென்று கத்த வேண்டும். 4. டெண்டுல்கருக்கு முத்தம் கொடுக்க வேண்டும். 5.விக்ரமனின் அடுத்த படத்திலும் நடிக்க வேண்டும்.

தனது வயது 16 என்றும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். கவர்ச்சி காட்டவே மாட்டாராம். மற்றொரு சாவித்திரியாக வேண்டும் என்பதுதான் இலட்சியமாம்.

'எனக்கொரு மகன் பிறப்பான்' படத்திலும் அஞ்சு அரவிந்த் நடித்துள்ளார். படம் வெளியாகிவிட்டது.



மோகன்லால்-மீனா
படம்: பிரின்ஸ்



கிளிவந்து கொத்தாத
கொய்யா-தன்னந்
தனியாக இருப்பது
பொய்யா-அது
இளமைக்கும்- நிலமை
இரவுக்கும்-பகலுக்கும்
துணையாக வரவேணும்
அய்யா-என்றும்
துணையாக வரவேணும்
அய்யா!

~கவிஞர் வா

ரிவியா
படம்: செல்வா



மந்த்ரா
படம்: இளங்காதலர்கள்

## எங்கே, எப்போது, எப்படி?

## சபாஷ் சாந்தி

## பிடிகொடாத அழகி

## குஷ்புவின் கனவு

முகப்பில்
பிரசாந்த்
சங்கவி
படம்:-
'மன்னவா'
விஜய்

## தெலுங்கில் காந்

பின்னணிப் பாடக எஸ்.பி. பாலசுப்பிரமணிய 'காந்தி' ஆங்கில படத் தெலுங்கில் மொழிமாற் வெளியிட்டிருக்கிறார்.

இதனை ஒரு வியாபா மாக நினைத்துச் செய் வில்லை. ஆத்ம திருப்தி காக செய்தேன் என்கிறா 'காதல் தேசம்', 'உல்லாச போன்ற படங்களிலு எஸ்.பி.பி. நடித்து கொண்டிருக்கிறார்.

## ஒரு புறம் நக்மா-மறுபுறம் ரம்பா

சத்யராஜ் ரசிகர் மன்றத் தலைவர் கே.பி.பாலு தயாரிக்கும் படம் ஜானகிராம சரத்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு இரு ஜோடிக ஒருவர் நக்மா. இன்னொருவர் ரம்பா.

தற்போதைய கோடம்பாக்க மார்க்கெட் நிலவரப்படி நக்மா ஓரம்கட்டிவிட்டார் ரம்பா. நக்மாவுக்கும், ரம்பாவுக்கும் தமிழில் மட்டும தெலுங்கிலும் போட்டிதான்.

தனக்கு வரவேண்டிய வாய்ப்புக்களையும், தனக்கு வேண் தயாரிப்பாளர்களையும் ரம்பா கொத்தியெடுத்துவிட்டார் என் நக்மாவுக்கு மகா கவலை. மகா கோபம்.

இப்படியாகப்பட்ட நேரத்தில் இருவரும் ஒரே படத் இணைந்து நடிப்பது கவர்ச்சிப் போட்டியில் முடியப்போ போட்டியை ஊக்குவிக்கத்தான் இருவரையும் ஒப் செய்திருக்கிறார்களோ?

ஜானகிராமன் படத்தை இயக்குவது சி.சுந்தர். இ பாடல்கள், பழனிபாரதி.

கவுண்டமணி, மணிவண்ணன், செந்தில், கசன்கா நடிக்கின்றனர்.



விஜயகாந்த்-ரோஜா
படம்: தமிழ்ச்செல்வன்

## சுந்தரின் ரசனை

'மேட்டுக்குடி' படம் விரைவில் வெளியாகப் போகிறது. நக்மா குளிக்கும் காட்சியை ரசித்து ரசித்து படமாக்கியிருக்கிறார் சி. சுந்தர்.

நக்மா பாத்ரூமில் குளித்துக் கொண்டிருக்க, கார்த்திக் மறைவில் இருந்து ரசிப்பது மாதிரியான காட்சியாம். குறிப்பிட்ட காட்சியில் நக்மா நடிக்கும்போது மூன்று பேர் மட்டுமே படப்பிடிப்பு தளத்தில் இருந்தார்கள்- ஒளிப்பதிவாளர். சி.சுந்தர், கார்த்திக் ஆகியோர் மட்டுமே அந்த மூவர்.

சி.சுந்தர் நக்மாவை ரசனையுடன் படமாக்கியது குஷ்புவுக்கு தெரிந்தால் என்னாகும்?

## தமிழ் செல்வன்

பாரதிராஜாவும்-விஜயகாந்த்தும் முதன் முதலாக கூட்டணி சேர்ந்துள்ள படம் தமிழ் செல்வன்.

அரசியல் கலந்த படத்தை இயக்குவது பாரதிராஜாவுக்கும் இது முதல் முறையல்ல. அரசியல்வாதிகளை ஒரு பிடி பிடிப்பது விஜயகாந்துக்கும் முதல் முறையல்ல. அதனால் இருவருமே ஊதித்தள்ளிவிட்டார்கள்.

பாரதிராஜா-விஜயகாந்த் கூட்டணியிடம் மாற்றமான ஒரு படத்தை எதிர்பார்த்தவர்களுக்கு மட்டும் சின்ன சின்ன ஏமாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

ஏழைக்குடும்பத்தில் பிறந்த விஜயகாந்த் மாவட்ட ஆட்சித் தலைவராகிறார் (கலெக்டர்). அரசியல்வாதிகளின் மிரட்டல், உருட்டல்களுக்கு பணியாமல் கடமையே கண்ணாக இருக்கிறார். பிறகென்ன, வழக்கம்போல அரசியல்வாதிகளால் பழிவாங்கப்படுகிறார். தந்தையை பறிகொடுக்கிறார். மனைவியும் இறக்கிறார். அப்படியிருந்தும் விடாமல் போராடி ஆட்சியை கலைக்க வைக்கிறார். இதுதான் கதை.

விஜயகாந்த் ஆவேசகாந்தாக கலெக்டர் பாத்திரத்தை நிமிரவைத்திருக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

# சி னி வி சி ட்

## ரிவியாவின் நெருக்கம்

'செல்வா' படத்தில் விஜய் ஜோடிகளாக சுவாதியும், ரிவியாவும் நடிக்கின்றனர்.

ரிவியாவின் பலவிதமான கவர்ச்சி கோணங்கள்தான் படத்தின் விசேஷ போனஸ். அதனால் மனவருத்தத்தில் இருக்கிறார் சுவாதி.

ரிவியாவுக்கும் செல்வா பட நாயகன் விஜய்க்கும் இடையே ஏற்பட்ட நெருக்கம்தான் ரிவியாவுக்கு முக்கியத்துவம் கொடுக்க காரணம் என்று பொருமுகிறார் சுவாதி.

தனது மனக்குமுறலை 'செல்வா' பட இயக்குநரை தனியாகச் சந்தித்துக் கொட்டியிருக்கிறார் சுவாதி. இயக்குநரும் சுவாதியை தட்டிக்கொடுத்து ஆறுதல் சொன்னாராம்.

சுவாதி என்ன மாயம் செய்தாரோ தெரியவில்லை, விஜய்-சுவாதி இருவரையும் வைத்து மேலும் ஒரு பாடல் காட்சியை கிளு கிளுப்பாக படமாக்கினார் இயக்குநர். ரிவியாவின் கவர்ச்சியை முறியடிக்கும் துடிப்போடு படு படு கவர்ச்சியாக நடித்தாராம் சுவாதி.

ரிவியாவா? சுவாதியா? என்பது செல்வா படம் வெளியானதும் தெரிந்துவிடும்.

ரிவியா பற்றி மற்றொரு செய்தி: விஜய்யும் ரிவியாவும் சென்னையில் உள்ள நட்சத்திர விடுதியில் ஒன்றாகவே தங்குகிறார்களாம். மகனைக் காணவில்லை என்று தேடிய இயக்குநர் சந்திரசேகருக்கு பின்னர்தான் விஷயமே தெரிந்தது.

தோளுக்கு மேலே வளர்ந்துவிட்டான். தனியாக வேறு சம்பாதிக்கிறான். கடுமையாக உழைக்கிறான். ரிலாக்ஸ் தேவைதான். மாலையும் கழுத்துமாக வந்து நிற்காவிட்டால் சரிதான் என்று சொல்கிறாராம் எஸ்.ஏ.சந்திரசேகர்.

அருகில் உள்ள படத்தைப் பார்த்தால் ரிவியா கலைச்சேவையில் ஒன்றும் சளைத்தவரல்ல என்பது தெரிகிறதல்லவா.

## மணி பிஸி

மணிவண்ணன் வசம் இப்போது ஏகப்பட்ட படங்கள். வில்லத்தனமும், நகைச் சுவையும் கலந்த பாத்திரங்களில் வெளுத்து வாங்குகிறார் மணிவண்ணன். இயக்குநராக இருந்தபோது கிடைத்த வருமானத்தைவிட பல மடங்கு சம்பாதிக்க முடிகிறதாம்.

படம் இயக்கி படாத பாடு படுவதைவிட நடிப்பதுதான் புத்திசாலித்தனம் என்று முடிவு செய்திருக்கிறார் மணிவண்ணன்.

மணிவண்ணனின் முன்னேற்றம் கவுண்டமணிக்கே கலக்கத்தை கொடுத்திருக்கிறது.

## மினி சினி

* சில வருடங்களுக்கு முன் சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் கமல் கன்னடத்தில் 'புஷ்பக்'(தமிழில் 'பேசும் படம்') என்ற படத்தில் நடித்திருந்தார். தற்போது இவர் கன்னடப்படமொன்றில் நடிக்கவிருக்கிறார். இப்படத்தை ஆர்.சத்யன் என்பவர் இயக்குகிறார்.

* பாலுமகேந்திரா இயக்கும் 'அப்துல் ராமன்' படத்தில் கதாநாயகியாக நடிக்கும் ஈஸ்வரிராவ், வேறொரு புதிய படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கிறார்.

* 'ஜென்டில்மேன்','காதலன்','இந்தியன்' படங்களை இயக்கிய ஷங்கர், முன்னர் எஸ்.ஏ.சந்திரசேகரிடம் உதவியாளராக இருந்த போது அவர் இயக்கிய 'சீதா', 'நீதிக்குத் தண்டனை' ஆகிய படங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்திருக்கிறார்.

* விஜய்-சங்கீதா நடித்து வெற்றிபெற்ற 'பூவே உனக்காக' தெலுங்கில் 'சுபகன்சுலு' என்ற பெயரில் தயாராகி வருகிறது. இந்தப் படத்தில் ஜெகபதிபாபு-ரவளி ஜோடியாக நடிக்கின்றனர்.

* விஜயகாந்தின் 'தமிழ்செல்வன்' படத்தைத் தயாரித்த சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தற்போது சத்யராஜ் நடிக்கும் 'வள்ளல்' படத்தைத் தயாரித்து வருகிறார். இதனையடுத்து இவர் பிரபு நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

* கமலின் 'குருதிப்புனல்' படத்திற்குப் பின்னர் கௌதமி தமிழ்ப்படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ஜெயராம் கதாநாயகனாக நடிக்க, குருதனபால் இயக்கும் 'பெரிய இடத்து மாப்பிள்ளை' படத்திலேயே கௌதமி கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

* 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' படத்தைத் தொடர்ந்து இராவுத்தர் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் படத்திற்கு 'தினமும் என்னைக் கவனி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் ராம்கி கதாநாயகனாக நடிக்கிறார்.

* உலக அழகிகளும், இந்திய அழகிகளும் தமிழ்ப்படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் 'உலக அழகி','மிஸ் இந்தியா' என்ற பெயர்களில் படங்கள் தயாராகவுள்ளன.

* கே.டி.குஞ்சுமோன் தயாரித்த 'காதல் தேசம்' படத்தின் நாயகனான அப்பாஸ் அடுத்து 'கோடீஸ்வரன்' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தையும் குஞ்சுமோனே தயாரிக்கிறார்.

* இரு ஆண்டுகளுக்கு முன் ஹொலிவூட்டில் வெளிவந்து சக்கை போடு போட்ட 'ஸ்பீட்' படத்தின் இரண்டாவது பாகத்தைத் தயாரிக்கவுள்ளார்கள். இரண்டாவது பாகத்திலும் கியனு ரீவ்ஸ் தான் கதாநாயகன்.



பிரபு-நக்மா படம் பெரியதம்பி

## மனைவியே மந்திரி

மலையாள நடிகர் மோகன்லாலுக்கு அளவான குடும்பம். அனுசரணையான மனைவி. மனைவி சுசித்ரா சென்னையைச் சேர்ந்தவர். நடிகர்- தயாரிப்பாளர் கே. பாலாஜியின் மகள். மோகன்லால்-சுசித்ரா தம்பதிக்கு ஆஸ்திக்கொரு மகன், ஆசைக்கொரு மகள். மகன் பிரணவ், மகள் விஸ்வமயா.

மனைவி மீது அபரிமிதமான பிரியம் கொண்டவர் என்றாலும் வீட்டுக்குப் போகும்போது எந்தவொரு பரிசுப்பொருளையும் வாங்கிப் போகமாட்டார்.

"பாசம் பரிசுப்பொருட்கள் மூலம் வெளிப்படுவதில்லை. மனைவிக்குப் புடவை வாங்கித் தருவதல்ல அன்பு. அதற்கும் அப்பாற்பட்டது. என் மனைவி என்னை மிக நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறாள். என்னைப் பற்றி வரும் வதந்திகள் பற்றியோ 'கிசுகிசு' பற்றியோ அவள் கவலைப்படமாட்டாள். அவள் படித்து ரசிப்பதுடன் எனக்கும் படித்துக் காட்டுவாள். அதனால் அவள் என்ன சொன்னாலும் அதைத் தட்ட மாட்டேன்," என்று சொல்கிறார் மோகன்லால்.



சிரஞ்சீவி-நக்மா படம் வீரபத்ரன்

## வலம் வரும் இளம் ஹீரோக்கள் >>>>>>

துள்ளிப்பாயும் குதிரை அஜித்குமார்.

தமிழ்ப் பட உலகில் இளம் ஹீரோக்களில் தற்போது முதலிடத்தில் இருப்பவர் அஜித்குமார். இரண்டாம் இடத்தில் வருகிறார் விஜய். பிரசாந்த் தற்போது மூன்றாம் இடத்தில்தான் இருக்கிறார்.

பிரசாந்த் நடித்த படங்கள் வரிசையாகத் தோல்வியைச் சந்தித்தன. பிரசாந்த் சரியாக பயன்படுத்தப்படவில்லை. பிரசாந்த் நடித்து சமீபத்தில் வெளியாகிய 'தாவூத் இப்ராகீம்' படமும் பலத்த அடிவாங்கியிருக்கிறது. படம் வந்துபோன சுவடே தெரியவில்லை. அதற்கு முன்னர் பிரசாந்த்-ஹீரா நடித்து கிருஷ்ணா படம் வெளியாகியது. அதுவும் சுருண்டது.

'இந்தியன்' பட இயக்குநர் சங்கர் பிரசாந்தை வைத்து ஒரு படம் இயக்கப்போகிறார். பெயர் இன்னமும் முடிவாகவில்லை. சங்கரின் படம் பிரசாந்தை கைதூக்கிவிடலாம் என்று நம்பப்படுகிறது.

விஜய் நடித்த படங்களில் சிலவும் தோல்விகண்டன. ஆனாலும் 'பூவே உனக்காக' பட வெற்றி விஜய் மார்க்கெட்டை உயரத்துக்கு தூக்கிவைத்தது.

இவர்கள் தவிர, அருண்குமாரும் இளம் ஹீரோக்கள் வரிசையில் கவனிக்கப்பட வேண்டிய ஒருவர். 'பிரியம்' படம் வெளியாகி வெற்றிகரமாக ஓடினால் அருண்குமார் பக்கம் தயாரிப்பாளர்கள் படையெடுக்கலாம். சென்ற ஆண்டு வீசிய பிரபுதேவா அலை இப்போது ஓய்ந்துவிட்டது.

இளம் ஹீரோக்களில் பிரசாந்துக்குத்தான் முன்னர் பெண் ரசிகைகள் ஏராளமாக இருந்தார்கள். இப்போது அஜித்குமார் என்றால் போதும் பெண் ரசிகைகள் பட்டாளம் ஒன்றே அவரைத் துரத்திக்கொண்டிருக்கிறது.

கல்லூரி மாணவிகள் மத்தியில் பிரபுதேவா, பிரசாந்த், அரவிந்தசாமி ஆகியோருக்கு இருந்த செல்வாக்கில் பாதியை இப்போது அஜித்குமார் கைப்பற்றிக் கொண்டார்.

வெளிப்புறப் படப்பிடிப்புக்களில் கல்லூரி மாணவிகளின் தொல்லைகளை தாங்கமாட்டாமல் தவித்துப் போகிறார் அஜித்.

நடிகைகள் மத்தியிலும் ஹீரா, தேவயாணி, சுவாதி என்று அஜித்குமாரின் காதல் பட்டியல் நீண்டுகொண்டிருக்கிறது.

பிரசாந்த் மன்னவா படத்தில் சங்கவியுடன் படு நெருக்கமாக நடிக்கிறார். சங்கவியும் தாராளகுணத்தோடு பிரசாந்துக்கு ஒத்துழைப்புக் கொடுக்கிறார்.

ஓடுகிற குதிரைகளுக்குத்தான் திரையுலகில் எப்போதும் மரியாதை. இப்போது ஓடிக்கொண்டிருக்கும் இளம் குதிரைகளில் அஜித் துடிப்பான குதிரை.

இயல்பான, அலட்டல் இல்லாத நடிப்புத்தான் அஜித்குமாரின் தனித்துவம்.

பிரசாந்த், விஜய், அருண்குமார் மூவருக்கும் அவர்களின் தந்தையர்கள் பின்பலமாக இருக்கிறார்கள். ஆனால், அஜித்குமார் எந்தப் பின்பலமும் இல்லாமல் முன்னுக்கு வந்திருக்கிறார்.

பிரபுதேவா அலைபோல, அஜித்குமார் அலையும் ஓயுமா என்பது போகப் போகத் தான் தெரியும்.

: சிற்பி.

ஆகியோரும்

## ...ட விமர்சனம்

...மில்லா விட்டாலும் சண்டைக்காட்சிகளும் ...

...ராஜாவை சேலையோடு படம் முழுக்க ...னாலும், மழைக்காட்சியில் தெப்பலாக ...ப வைத்து ரோஜாவின் அழகுகளை காட்ட...க்கவில்லை கல்லூரிப் பேராசிரியையாக ...ரோஜா மழையின் புண்ணியத்தால் ரசிகர் ...மகிழவைத்திருக்கிறார்.

...ணிவண்ணன்தான் கலகலக்க வைக்கிறார். ...வசனம் பேசும்விதமே அலாதியாக இருக்... வெடிகுண்டு முத்து என்ற பெயரில் சட்ட... உறுப்பினராக தோன்றி வசனங்களால் ...கிளப்புகிறார்.

...தல் அமைச்சராக மலேசியா வாசுதேவனை ... நாட்களின் பின்னர் காணமுடிகிறது. ...லுவும் இருக்கிறார்.

...தை, வசனம் ரத்தினகுமார். ஈட்டியாக குத்தும் வசனங்கள் படத்தின் முதுகெலும்பாக இருக்கின்றன. இசை; தேவா. பரவாயில்லை ரகம்.

இதுவரை வசூல் நிலவரம் நன்று. நம் நாட்டில் வீடியோ பிரதிகளில் வந்துவிட்டது. விஜயகாந்த் ரசிகர்களுக்கு விருந்து.

## ரஜினியின் மாளிகை

சென்னையில் மகாபலிபுரம் அருகில் பங்களா ஒன்றைக் கட்டிவருகிறார் ரஜினிகாந்த். நேரில் சென்று கட்டிட வேலைகளை கவனித்து வருகிறார்.

கடற்கரைப்பகுதி என்பதாலும், சென்னை நகரைவிட்டு ஒதுங்கிய பகுதி என்பதாலும் நிம்மதியான இடம் மகாபலிபுரம். அதனால்தான் அங்கு வீடு கட்டிக்கொண்டு குடியேறப்போகிறார்.

தற்போது போயஸ் தோட்டத்தில் உள்ள வீடு அலுவலகமாக மாற்றப்படுமாம்.

ரஜினியின் புதுப்பட அறிவிப்பு செப்டம்பர் மாதத்தில்தான் வெளியாகும் என்றும் தகவல்.



விஜயகாந்த்-ரோஜா படம் தமிழ்செல்வன்

## கோட்டை — 50 இலட்சம்

'காதல் கோட்டை' படத்தை இந்தியில் தயாரிக்கப்போகிறார்கள். இந்தி உரிமையை சிவாஜியின் பட நிறுவனமான சிவாஜி பிலிம்ஸ் வாங்கியிருக்கிறது. அதற்காக கொடுத்த பணம் இந்திய மதிப்பில் 50 இலட்சம்.

'காதல் கோட்டை' படத்தின் தெலுங்கு உரிமையை 'இந்தியன்' பட தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்தினம் வாங்கியிருக்கிறார்.

'காதல் கோட்டை' படம் வசூல் மழை பொழிவதால், அஜித்குமார் நடிக்கும் 'உல்லாசம்' பட சென்னை விநியோக உரிமையை கமல் வாங்கியிருக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

# 1 முதல் 9 வரை

## எண்களும் – பயன்களும்

ஒருவருடைய பிறந்த நாள் எண்ணைக் கொண்டு அவருடைய குணத்தைக் கணிக்க முடியும். இதில் இரண்டு முறைகள் கடைப் பிடிக்கப்படுகின்றன. பிறந்த திகதிக்குரிய எண்ணை மட்டும் எடுத்துக்கொள்வதுண்டு. பிறந்ததிகதி, மாதம், வருடம், ஆகிய மூன்றையும் கூட்டி வரும் எண்ணை எடுத்துக்கொள்வதும் உண்டு. இதில் இரண்டாவது முறையையே எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவர் பிறந்த திகதி 04.10.1950 என்று வைத்துக்கொள்வோம். இதிலுள்ள எண்களின் மொத்தக் கூட்டுத் தொகை 20 ஆகிறது. அதை ஒற்றைப்படை எண்ணாக்கினால்:- 2. இவ்வாறு கணக்கிடும் போது எல்லோருடையதுமே 1 முதல் 9 வரை உள்ள எண்களில் ஏதாவது ஒரு எண்ணாகவே இருக்கும்.

கடந்த வாரம் 1,2,3 ஆகிய எண்களுக்கான பலன்களைத் தந்திருந்தோம். இவ்வாரம் 4,5,6,7 எண்களின் பலன்களைப் பார்ப்போம்.

### எண் – 04

சுறுசுறுப்பான வியாபார மனம் கொண்ட, ஆனால் கற்பனை வளம் இல்லாத நபராக இவர் இருப்பார். உழைப்பதற்கு வேண்டிய ஆற்றல் இவரிடம் நிறைய இருக்கும். ஆனால் சரியான திசைகளில் அதைச் செலுத்தமாட்டார். இவ்வாறு தவறான உழைப்பும், வேண்டாததைத் தொடங்கி அவஸ்தைப்படுவதும் இவர்களிடம் உள்ள குறைபாடுகளாகும். பிறருடன் ஓரளவுக்குச் சுமுகமாகப் பழகக் கூடியவர்கள். எதிர்படும் பல தடைகளைத் தாண்டி நகர்வதற்கு இவரிடம் உள்ள விடா முயற்சி உதவுகிறது. முடியாது என்ற வேலையைக் கூட இவர் எப்பொழுதும் செய்து கொண்டிருப்பார்.

நகைச்சுவை உணர்வு அவ்வளவாக இராது. அவருடைய மனம் வேறு எங்கோ இருப்பதால்தான் இங்கே கூறப்படுவதை அவரால் கிரகிக்க முடிவதில்லை. விதிப்புடன் செயற்படுகிறார். தன்னைப் பிறர் பெருமையாக எண்ணிக் கொள்ளவேண்டும், எதற்கும் வாய்க்கில்லாதவர் என்று எண்ணாமலும் இடைப்பட்ட ஒருவராக இருப்பார் என்று சொல்லலாம்.

### எண் – 05

இவர்கள் மற்றவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக எதையும் செய்யக்கூடியவர்கள். சில சமயம் வேண்டாத தொல்லைகளை வருந்தி அழைப்பது போன்று இருக்கும். இதனால் அவர்கள் அஞ்சி ஓடுவார்கள். நல்ல விஷயமாக இருந்தாலும் கூட அது அளவுக்கு மீறிப் போகும்போது வெறுக்கத்தக்கதாகிறது என்பதை இவர் உணர்வதில்லை. இவர்களுடைய நல்ல இயல்பினால் பிறர் இவர் குறித்து பொறுமை இழந்து விடும்படி செய்கிறார்கள்.

தாராள மனப்பான்மை உள்ளவர்களாக இருப்பார்கள். நண்பர்களுக்கு உதவுவதற்கு தன்னுடைய சௌகரியத்தைக் கூட விட்டுக் கொடுப்பார்கள். ஒருவருக்குச் செய்த உதவி பல மடங்காகப் பயன் தரும் என்று இவர்கள் நம்புகிறார்கள். ஒருவருக்குக் கடன் கொடுத்திருந்தாலும் கூட அவர் உண்மையில் கஷ்டத்தில் இருப்பதாக இருந்தால், அந்தப்



பணத்தைத் திருப்பிக் கேட்க மாட்டார்.

ஒரு விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல், வேண்டாத விஷயத்தில் தலையிடுகிறார்கள் என்ற தவறான கருத்தை ஏற்படுத்திவிடும்.

### எண் – 06

ஆறாம் எண்ணுக்குரியவர்கள் தன்னம்பிக்கை மிக்கவர்கள். தெளிவான சிந்தனையுள்ளவர்கள். சில சமயங்களில் பிடிவாதமாகக் கூட இருப்பார்கள். எதற்கும் பயப்பட மாட்டார்கள். எந்தப் பிரச்சனையையும் துணிவோடு எதிர்பார்ப்பார்கள். எந்தப் பிரச்சனையையும் நேர்மையுடன் கையாள்வார்கள். இவர்களின் அறிவு மிகவும் கூர்மையானது. ஒன்றைச் சட்டென்று புரிந்து கொண்டு செயற்படுவார்கள். அதிகமாக வேலை செய்வதில் இவர்களுக்கு ஆர்வமுண்டு. பிறர் செய்யாத ஒன்றைச் செய்ய ஆசைப்படுவார்கள். எல்லோரிடமும் நல்லவிதமாகப் பேசுவார்கள். ஆயினும் தன் முனைப்பு அதிகமாக இருக்கும். எல்லோருமே இவரை விரும்புவார்கள். இவர்களிடம் உள்ள குறைபாடுகளை யாரும் எடுத்துச் சொல்லத் துணிவதில்லை. வார்த்தைகளைச் சாமர்த்தியமாகக் கையாண்டு பேசுவார்கள். நல்ல நினைவாற்றல் உண்டு. உரையாடல்களில் தொய்வே ஏற்படாது. பல பேர் மத்தியில் இருக்கும்போது இவரே நடுநாயகமாகத் திகழ்வார்.

### எண் – 07

தம்மிடமே குறை காண்பவர்களாக இருப்பார்கள். புதிய திட்டம் எதையும் மேற்கொள்ளும் முன் அதற்குரிய தகுதி தங்களிடம் இருக்கிறதா? என்பதைப் பலமுறை ஆராய்ந்து பார்ப்பார்கள். எதிலும் கவனமாக இருப்பார்கள். அவசரப்பட்டு எதையும் துவங்கிக் குறை பாட்டுடன் பாதியில் விட்டு விடும் பழக்கம் இவர்களிடம் கிடையாது.

ஒன்றைச் செய்யத் துவங்குமுன் எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்து, அதை நன்றாகச் செய்து முடிக்க முடியும் என்ற திருப்தி ஏற்பட்ட பிறகே அதில் இறங்குவார்கள். சாதக, பாதகங்களைச் சீர் தூக்கிப்பார்ப்பார்கள்.

தாமதமாகத் துவங்கினாலும், சட்டென்று வேலைகளை முடித்து விடுவார்கள். எதையும் தாங்கும் ஆற்றல் படைத்தவர்கள். ஒரு வழியை விட்டு இன்னொன்றை இவர்கள் தேர்ந்தெடுப்பார்களானால் அதில் எந்தவித சந்தேகமும் இல்லாதபோதே அவ்வாறு செய்வார்கள்.

எதையும் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டு இருப்பதால் வாழ்க்கை இன்பங்களை அவர்களால் அனுபவிக்க முடிவதில்லை. ஏதாவது இன்பமான அனுபவங்கள் ஏற்பட்டிருந்தது என்றால் அது எதிர்பாராததாகத்தான் இருந்திருக்க வேண்டும். இவ்வாறு எதிர்பாராமல் வருவதுகூட அவர்களுக்குக் கவலையை உண்டாக்கி எதிர் காலத்தைப் பற்றிய அச்சத்தைத் தோற்றுவிக்கும். தானாக வந்ததை அனுபவிப்போம் என்று திருப்தி அடையமாட்டார்கள்.

எண்கள் 8,9, ஆகியவற்றின் குணாம்சங்கள் அடுத்தவாரம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## வாரம் ஒரு இயற்கை வைத்தியம்

### வயிற்றுப் புண் (அல்சர்)

வயிற்றுப் புண்ணுக்குக் காரணம், அந்தந்த வேளையில், குறிப்பிட்ட நேரத்தில் உணவு உண்ணாததுதான் என்றும், உணவின் போது இடையிடையே தண்ணீர் குடிப்பது தான் என்றும் கூறப்படுகிறது. ஆனால் காரணம் அதுவல்ல; வயிற்றுப்புண்ணுக்குரிய காரணம், காரமான உணவுகள் சாப்பிடுவதும், சூடு அதிகமான பொருட்களைச் சாப்பிடுவதும், உண்ட உணவு சரியாகச் சமிபாடு அடையும் முன் அடுத்த வேளை உணவுகள் உண்டு சமிபாடு அடையாது வயிற்றில் புளிப்பு ஏற்படுவதும்தான். இக்காரணங்களைத் தவிர்த்தாலே வயிற்றுப் புண் குணமாகவும், வயிற்றுப்புண் ஏற்படாது காக்கவும் முடியும்.

**காலை 5 மணி:**

எழுந்தவுடன், மூன்று முதல் ஆறு டம்ளர் தண்ணீர் அருந்துதல் வேண்டும்.

**காலை 6 மணி:**

அறுகம்புல்சாறு, வில்வ இலைச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, வல்லாரை இலைச் சாறு, சாம்பல் பூசணிக்காய்ச் சாறு, வாழைத் தண்டுச் சாறு ஆகியவற்றில் நாளொன்றுக்கு ஏதேனும் ஒரு சாறு வீதம் அருந்தலாம். அருந்தும்போது நிதானமாகச் சப்பிச் சப்பிச் சாப்பிட வேண்டும்.

**காலை 9 மணி:**

வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் தேவையான அளவு உண்ணலாம்.

**மதியம் 1 மணி:**

பச்சைக்காய் கறிக் கலவை உண்ணலாம்.

**மாலை 4 மணி:**

தேன் கலந்த பச்சைத் தண்ணீர் அருந்தலாம்.

**இரவு 7 மணி:**

தேங்காயும் பழங்களும் உண்ணலாம்.



**பொது:**

நாள்தோறும் இடுப்புக் குளியல்-20 நிமிடங்கள் எடுக்கலாம். இடையிடையே தேன் கலந்த தண்ணீர், சாம்பல் பூசணிக்காய்ச்சாறு, வாழைத்தண்டுச் சாறு, நெல்லிக்காய்ச்சாறு அருந்தி உண்ணா நோன்பு கொள்ளலாம். காரமான, சூடுள்ள உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். முன்பு உண்ட உணவு நன்கு சமிபாடு அடைந்த பின்னரே அடுத்து உண்ண வேண்டும். 15 முதல் 30 நாட்களில் மருந்து, மாத்திரை எதுவுமின்றி இயற்கை வழியில் வயிற்றுப்புண் குணமாகும். யோகாசனங்கள் நாள்தோறும் செய்யலாம்.

–மூ. ஆர். அப்பன்–
தமிழக இயற்கை உணவு நிபுணர்

## பெண்களுக்கு வரும் வயிற்றுவலிக்கு!

பெண்களை மலர்களுக்கு ஒப்பிடுகிறார்கள் கவிஞர்கள். இதனால்தான் என்னவோ புஷ்பவதி ஆகிவிட்டாள் என்று அவள் மலரும் காலத்தை மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்றார்கள். இந்தப் பருவத்தில் ஒவ்வொரு பெண்ணின் உடல் உறுப்புக்களிலும் ஒவ்வொரு அதிசய மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதாவது அவளைத் தாய்மைக்குரிய தகுதிகளைப் பெற இயற்கை அன்னை ஆசிர்வதிக்கிறாள். புஷ்பவதி ஆன பிறகு அவள் கருப்பையில் ஒவ்வொரு மாதமும் ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. இதை 'மென்ஸஸ்' அல்லது 'மாதவிலக்கு' என்கிறோம். இது பெண்ணாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இயற்கை வகுத்திருக்கும் ஒழுங்கு.

மாதவிலக்கு ஏற்படும் ஒவ்வொரு மாத



மும் பெரும் பாலான பருவப் பெண்களுக்கு வயிற்றுவலி உண்டாகிறது. இதைச் 'சூதகவலி' என்றும் சிலர் அழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் 'டிஸ்மேனரியா' என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இதில் ஓர் ஆச்சரியம் என்ன வென்றால் இடுப்புப் பகுதியில் உள்ள உறுப்புக்களில் நோய்நொடி பாதிப்பு எதுவும் இல்லாமல் இந்த வலி உண்டாகிறது. சுமார் 25 வயது வரை இந்த வலி மாதாமாதம் உண்டாகும். 30 வயதுக்குப் பிறகு இந்த வலி கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும். முதன்முதலில் இடுப்புப் பகுதியில் ஆரம்பமாகும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வயிற்றுப் பகுதிக்குப் பரவும். முதல்நாள் வலி கடுமையாகும். மூன்றாவது நாளில் மறைந்துவிடும். இந்த நேரத்தில் சிலருக்கு மயக்கமும் உண்டாகும். சிறுநீர் அடிக்கடி போகும். வாந்தியும் உண்டாகலாம்.

### மாத்திரைகள்

இந்த வயிற்றுவலி வரும் நேரத்தில் சிலர் ஆஸ்பிரின் அடங்கிய மாத்திரைகளை விழுங்குகிறார்கள். வலி நின்றுவிடுகிறது. இத்தகைய மாத்திரைகளைச் சாப்பிடுவது நல்லது அல்ல. பிறகு கெடுதலை உண்டாக்கும். இந்தவலி ஏன் உண்டாகிறது என்று மருத்துவ நிபுணர்கள் ஆராய்ச்சி செய்தார்கள். சிலருக்குச் சில சமயங்களில் இரத்தம் தடைப்படுகிறது. இந்த இரத்தத்தை வெளியேற்றக் கருப்பை அடிக்கடி சுருங்கிச் சுருங்கி விரிகிறது. இதனால் வலி உண்டாகலாம் என்று கண்டார்கள். இன்னும் சிலருக்கு, கருப்பையிலுள்ள 'டெஸிடுவா' என்ற சவ்வுப் பகுதி சிறுசிறு துண்டுகளாக உடைந்து வெளியேற முயற்சி செய்கிறது. இதனாலும் வலி அதிகமாகிறது. இன்னும் சிலருக்குக் கருப்பை நன்கு முதிர்ச்சி அடையாத காரணங்களால் இந்தவலி உண்டாகிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

### என்ன செய்யலாம்?

பெண்களை மாதம் ஒருமுறை அச்சுறுத்தும் இந்தவலி ஏற்படாமல் இருக்க என்ன செய்யவேண்டும்? சத்துள்ள ஆகாரங்களைச் சாப்பிட வேண்டும். பால், மோர் அதிகமாகக் குடிக்க வேண்டும். கீரைகள், பீட்ரூட் ஆகியவற்றை உணவில் அதிகமாகக் கலந்து சாப்பிடவேண்டும். விட்டமின் பி-12 மல்டி வைட்டமின் மாத்திரையாகவோ, ரொனிக்குகளாகவோ சாப்பிட வேண்டும். விட்டமின் மாத்திரைகளைச் சாப்பிடுவதன் மூலம் இது நீங்க வழி இருக்கிறது. இரத்த சோகை என்று தெரிந்தால் டாக்டரின் ஆலோசனைப்படி இரும்புச் சத்துள்ள மாத்திரைகளைச் சாப்பிடலாம். வலி அதிகமானால் டாக்டரிடம் காட்டலாம். அவர் 'டி அண்டு சி' செய்து கொள்ளும்படி சொன்னால் செய்து கொள்வது நல்லது.

சிலர் மாதவிலக்கு ஏற்படுவதைச் சில நாட்கள் தள்ளிப் போட மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்கள். இது நல்லது அல்ல. பிறகு இது கோளாறுகளை உண்டாக்கும்.

### சித்தவைத்தியம்

மாதவிடாய் சம்பந்தமான கடுமையான வயிற்றுவலிக்கு ஒரு சிறந்த தமிழ்மருந்தைச் சொல்லுகிறார்கள் சித்த வைத்தியர்கள். ஒரு கைப்பிடி அளவு மல்லிகைப்பூவை ஒரு சட்டியில் போட்டு 200 மி.லி. தண்ணீர் விட்டு அதை 100 மி.லி. ஆக சுண்டும்படி காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு இரண்டு .அவுன்ஸ் வீதம் காலையிலும் மாலையிலும், மாதவிலக்குற்கு முன்னும், பின்னும் ஒருவாரம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுவலி குறையும்; மாதவிலக்கும் ஒழுங்காக நடக்கும்.

# "அசாருதீன் என்னைத் துன்புறுத்தினார்"

## கண்ணீர் விடுகிறார் நவ்ரீன்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அசாருதீனின் முதல் மனைவி பெயர் நவ்ரீன். திருமணத்தின்போது நவ்ரீனுக்கு 16 வயதுதான். இப்போது அவருக்கு அப்பாஸ் (வயது-6), அலி(வயது-3) என்ற இரு மகன்கள் உண்டு.

நவ்ரீனை அசாருதீன் இப்போது விவாகரத்துச் செய்துவிட்டார். கிரிக்கெட் போட்டியின் போது பந்தை ஓங்கி அடித்து விரட்டுவது போல் பஞ்சாரா ஹில்ஸ் பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து நவ்ரீனைத் தூக்கி வீசி விட்டார். நவ்ரீனுக்குக் கிடைத்தது ஒரு மாருதி காரும், அம்ருதா பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள ஒரு வீடும் தான்.

நவ்ரீன் இப்போது தனது தாயார் வீட்டில் உள்ளார். 2 மகன்களையும் வளர்க்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது.

நவ்ரீன் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த உருக்கமான பேட்டி வருமாறு:

"என்னை ஏன் கேள்விகள் கேட்டுத் துன்புறுத்துகிறீர்கள். அவரிடம் அல்லது சங்கீதா பிஜ்லானியிடம் கேட்க வேண்டியது தானே. நிருபர்களுக்கு நான் பேட்டி அளிப்பது இதுதான் கடைசித்தடவை.

எனக்கும் அசாருதீனுக்கும் திருமணம் நடந்தபோது அவர் புகழின் உச்சிக்குச் செல்லும் கிரிக்கெட் வீரராகத் திகழ்ந்தார். என் வாழ்வு ஆனந்தமாக இருக்கும் என்று நான் நினைத்தேன். என்னை விட அவர் மீது தான் எனக்கு நம்பிக்கை அதிகம். இந்த நம்பிக்கை தான் எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதற்கு வாய்ப்பாக அமைந்து விட்டது.

கடந்த ஆண்டு பத்திரிகைகளில் வெளியான 'கிசுகிசு'க்கள் மூலம் சங்கீதா-அசாருதீன் காதல் விவகாரம் குறித்து எனக்குத் தெரியவந்தது. இதில் உள்ள உண்மையைக் கண்டுபிடிக்கும்படி என்னிடம் என் தாயார் கூறினார். ஆனால் இதை நான் நம்பவில்லை. வெறும் கிசுகிசு என்று ஒதுக்கி விட்டேன். நான் அசாருதீனிடம் கேட்டபோதும் அவர் அதை மறுத்தார்.

இது போன்ற காதல் விவகாரத்தில் அசாருதீன் ஈடுபடுவார் என்று நான் கனவில்



கூட நினைக்கவில்லை. அவரை நன்கு அறிந்தவர்கள்கூட அவர் இப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடுவார் என்று நினைக்கவில்லை.

என்னிடம் அவர் எந்தக் குறையும் கண்டதில்லை. எங்கள் உறவு சுமுகமாகவே இருந்தது. எந்தப் பிரச்சனையும் இல்லை. எனவே எல்லாம் நல்லபடி தான் நடக்கும் என்று நான் எண்ணினேன். வெளிநாட்டு சுற்றுப்பயணம் செய்யும்போது கூட அவர் என்னை அழைத்துச் சென்றார்.

ஆனால் பின்னர் அவர் நடவடிக்கையில் மாற்றம் ஏற்பட்டது. என்னைத் துன்புறுத்தினார். குழந்தைகள் மற்றும் குடும்பத்தினர் மத்தியில் என்னை அவமானப்படுத்தித் துன்புறுத்தினார்.

அசாருதீன் என்னிடம் திரும்பி வருவார். எங்கள் திருமண வாழ்க்கை முன்பு போல சுமுகமாக இருக்கும் என்றுதான் நான் எண்ணினேன். எங்கள் திருமண வாழ்வு நீடிக்க அசாருதீன் பெற்றோர் பாடுபட்டனர். என்மீது மிகவும் அன்பு செலுத்தினார்கள்.

ஆனால் அவர் என்னை விவாகரத்து செய்து கொள்ளப் போகிறார் என்பதை நான் தெரிந்து கொண்டேன். இது நடந்து விடும் என்று ஒரு வருடமாகவே எண்ணினேன். இருப்பினும் சங்கீதாவுடனான உறவு குறித்து அவர் வெளிப்படையாகக் கூற வேண்டும் என்று விரும்பினேன்.

ஆனால் அவர் உண்மையை ஒப்புக் கொள்ளவில்லை. மறுத்தே வந்தார். ஒருநாள் திடீர் என்று என்னிடம் வந்து 'தலாக் தலாக் தலாக்' என்று சொல்லி விவாகரத்து செய்து விட்டுப் போய்விட்டார். விவாகரத்திற்கு எந்தக் காரணமும் சொல்லவில்லை.

விவாகரத்து என் தலையெழுத்தாக இருக்கலாம். இதை ஏற்றுக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. இதனால் நானும் அவரும் பிரிந்தது ஏன் என்பதைக் குழந்தைகள் தான் புரிந்துகொள்ளவில்லை."

இவ்வாறு நவ்ரீன் கூறினார்.

நவ்ரீன் தாயார் கவுஸியா கூறுகையில், "ஒரு நல்ல மனிதன் நடந்து கொள்ளும் முறை இதுவல்ல. வாழ்க்கையில் முதல் தடவையாகப் பணத்தைப் பார்த்ததும் அவருக்கு தலைகால் புரியவில்லை," என்று கூறினார்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AF

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:07-09-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான். | திருமதி. அருள்லெட்சுமி யோகேஸ்வரராஜா. பாடசாலை வீதி, கோவில் போரதீவு, பெரியபோரதீவு, மட்டக்களப்பு. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# அந்த நாள் ஞாபகம்





→ வளரும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்பார்கள். படத்தில் கிரிக்கெட் விளையாடும் குட்டிக் குழந்தை டெண்டுல்கர்.

↓ யார் இந்த நடிகர் என்று கூர்ந்து பாருங்கள். எங்கேயோ பார்த்த மாதிரியிருக்கிறதா? மக்கள் திலகம் எம்.ஜி.ஆரேதான். 'பைத்தியக்காரன்' படத்தில் டி.ஏ.மதுரத்துடன்.





← பொன்போன்ற உடலுடன் எம்.ஜி.ஆர். உடல் மட்டுமா. உள்ளமும் பொன் என்றுதான் 'பொன்மனச் செம்மல்' என்று அழைத்தார்கள்.

## சருகாய் சப்திக்கிறேன்....

முல்லை இதழ்களால் முத்தமிட்ட
கன்னங்களை மூடிவிட்டேன் முடிகளால்!
கடல் கொண்ட நிலம் போல
என் காதல் கொண்ட உன் வார்த்தைகளை
முள்ளாய் பரப்பி விட்டு முகம் பதிக்கின்றேன்,
புது முகமாக.....!
***
முழுசாய் என்னைத் தொலைத்து விட்டு
தேடுகின்றேன் என்னை நானே!
காற்றில் கரையும் கற்பூரமாய்
நினைவு நெருப்பில் பொசுங்கிப் போகின்றேன்!
***
உன் நினைவுப் பூக்களுக்குள்ளே
சருகாய் சப்திக்கிறேன்!
போடி....
பசை கொண்ட இடத்தில்
பாதம் கொடு!
***
ஒரு பாவலனை வதைத்த பாவத்தை
மறந்து விட்டே மணம் கொள்!
வார்த்தைக்குள் வாள் வைத்தாய்
என் வாழ்வையே தொலைத்தாய்!
***
கள்ளப் பார்வையால் என்
கனவுகளையே கள வெடுத்தாய்.
காவி உடை நான் தரிக்கவா,
தேவி என்று உனைத் துதித்தேன்?
தேகம் நொந்ததடி மனசும் வெந்ததடி
***
பாகமாய் உனை இருத்த எண்ணியே
பாவியாய் ஆகி விட்டேன்!
பாரில் காதலா வேரொடு கிளர்ந்தெடுப்பேன்
நீ யாரோடும் மணம் கொள்;
தேரோடு ஊர்வலம் போ!
***
காதல் என்ற ஏட்டை மட்டும்
என் கைகளில் கிழித்துப் போடு!
என் வாழ்க்கையைப் போல் அதுவும்
கிழிந்தே இருக்கட்டும்!
***
காலம்; என் கனவுகளைத் தின்னட்டும்;
கோலம் மாறி கேலிக்கு ஆளாகினும்
காதல் கொண்ட இந்த ஜீவன்
உன் காலடிச் சத்தங்களுக்காய்
சருகாகினும் சப்தித்திருக்கும்!
***

ஜெயந்தி ஜெயசங்கர், கொழும்பு-13.

## தேன் கிண்ணம்

## வாழப் பிடிக்கவில்லை

சில
நாட்களாய்..
காலன் என்னை
துரத்துவது போல்
உயிரை சிதறடிக்கும் கனாக்கள்.
எனக்குள் முளைக்கின்றன..
**
என்
உயிர்ப் பற்றையை
பிடிங்கி எறிய
யுத்தத்தின் கைகள்
என்னை நோக்கி
நீண்டு வருவதை
நான் மட்டும் உணர்வேன்!
**
யாரோ
இரத்த வெறிபிடித்தவன்
என்னைக் கொன்று
வீதியில் எறிவதற்குள்
நானே செத்து விடுவது
எனக்கு சுகம்!
**
வாளோடும்
துப்பாக்கியோடும்
என்னை முற்றுகை இடுவது போல்
கனாக் கண்டு
தூக்கம் கலைந்து
நடு நிசியில்
நடு நடுங்கி வியர்த்துக்
கொட்ட எத்தனை இரவு
எழும்பியிருப்பேன் தெரியுமா..?
**
சாகவும் விடாமல்
வாழவும் விடாமல்
வதைத்துக் கொண்டிருக்கும்
நரகமாகி விட்டது
இந்த உலகம்!
**
யுத்தத்தின்
கோரப் பற்கள்
சப்பித் துப்பிய
மனிதம் பற்றி
கருவிலிருக்கும் சிசு
அறிய நேர்ந்தால்–
இந்த–கேடு கெட்ட
உலகில் வந்து விழாமல்,
தாயின் வயிற்றுக்குள்ளேயே
தற்கொலை செய்து கொள்ளும்!
**
ஆயுத அரக்கனோடு
உறவாடி.. உறவாடி
இருதயத்தின் ஈரம்
வற்றிப் போன
மனித ஜடங்கள் ஜீவித்திருக்கும்
இந்த தேசத்தில்....
**
பூமியில்
ஊர்ந்து திரியும்
சிற்றெறும்பின் உயிரையும்
கௌரவிக்கும் என்னை–
**
யாரோ
இரத்த வெறி பிடித்தவன்
என்னைக் கொன்று
வீதியில் எறிவதற்குள்
நானே செத்து விடுவது
எனக்குச் சுகம்!
**

கே.எம்.மர்சூக், தோப்பூர்-05.

## நிகழ்வும் நிஜமும்

போரில் புலம்பெயர்ந்த
அகதி போல..
நீயெங்கு பரிதவிக்கிறாய்?
••
பால்யத்தின் பங்காளியே..!
பல காலங்களாக
உன் பார்வைபடாது
விழிக்க மறந்திருக்கிறேன்!
••
மூடிய பரிதிக்குள்ளும்
சூரியப் பிளம்பாய்
உன் பிரதி
பளிரிட்டுக் கொண்டேயிருக்கிறது!
••
தினமும் என்
மனக்'கம்பியூட்டரி'ல்
உன் நினைவுப்பதிவுகள்
புதுப்பிக்கப்பட்டு
பத்திரப்படுத்தப்படுகின்றன!
••
என் சர்வாங்கத்திலும்
உன் நேசம்
உறைந்து போனது–நான
ஸ்தம்பித்துப் போயிருக்கிறேன்!
••
வசந்தங்கள் என்னை
வருடிய போதும்,
சுகந்தங்கள் உணராது
இறுமாந்து போயிருக்கிறேன்!
••
பரம்பர அன்பின் நேசகியே..!
நம் இடைவெளி
இதயத்தை இறக்க வைத்த
மகா இழப்பாகி விட்டது!
••
தசையும் ஸூம்பும்
குருதியும் நரம்பும் கடந்த
நமது நேசம் இனி
திருச்சனங்களை ஜீரணிக்கவேண்டியுள்ளது!
••
அதற்காக மனதைக் கட்டி
மௌனமான ஒரு புனித
திடிஷ்டைக்கு தயாராகுவோம் இனி...
••

ஆத்மராஜா நூத்சந்திரிகா,
கோட்டைக்கல்லாறு.

## அமுதும் புலியும்

தமிழகத்தில்
தமிழுக்கு-
அமுதென்றுபெயர்?
இலங்கையில்
தமிழுக்கு(ப்)...
'புலி' என்று பெயர்!

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவை.

## ஊத்தரவு

அதிரடித் தாக்குதல்
தொடுத்து..
கடும் போராட்டத்தின்
பின்னர்..
கைப்பற்றப்பட்டது..
உன் இதயக் கோட்டை..!
**
திடீர் சுற்றி வளைப்பினால்
சின்னா பின்னமாகி..
சிவந்து கசங்கி கன்றியது..
உன் கன்னங்களுடன்
இதழ்கள்...
**
அவசர காலச் சட்ட
நீடிப்பினைப் போல..
பலவந்தத்துடன்..
கடந்து கழியட்டும்...!
நாளைகள்..
**
கைப்பற்றப்பட்ட
கோட்டையில்..
அன்பினால்
வேலிதரித்து..
பாசத்துடன் முகாம்
இடப்படும்..!
**
வாழ்க்கை படகினில்..
ஒரு துடுப்பில்..
நானிருப்பேன்..
துணையாக..
மறு துடுப்பில் காதலி..
நீ.. இருக்கனும்..

என்.சஹாப்தீன், ஒட்டமாவடி.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 01.09.96 தொடக்கம் 07.09.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன், புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மிதுனம் | - செவ்வாய், வெள்ளி. |

சுப நேரம் புதிய நேரப்படி கணிக்கப்படுகிறது.

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- மனக் கலக்கம், உயர்ச்சி தடை. | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் உதவி, பண வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- பொருள் வரவு, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனப் பயம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், உயர்ச்சி தடை. | பி.ப. 3 மணி |
| சனி- பொருள் பேறு, தேகசுக நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பொருள் வரவுதடை. | காலை 7 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, இனசன நன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| சனி- முயற்சி பலிதம், தொழில் விருத்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, கௌரவம் குறைவு. | பகல் 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 8 மணி |
| சனி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | பி.ப. 2 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், தொழில் பேறு. | பி.ப. 2 மணி |
| சனி- காரிய சித்தி, இனசன நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, மனப் பயம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய நட்பு, காரியசித்தி. | காலை 7 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், பொருள் சிறப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், கடன் சுமை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், முயற்சி தடை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | மு.ப. 9 மணி |
| புதன் - தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- கடன் சுமை, மனப் பயம், | பி.ப. 2 மணி |
| வெள்ளி- அந்நியர் பகை, வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக் கவலை. | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் மந்தம், வீண் தொல்லை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| புதன்- இனசன விரோதம், மனக் கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, கடன் பயம். | காலை 7 மணி |
| சனி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- துயர் நீங்கும், சுபகரும நன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், வருவாய் குன்றும். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. 2 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, அந்நியர் பகை. | மு.ப. 9 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பகல் 1 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, செல்வாக்கு மேன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, பொருள் பேறு. | பி.ப. 1 மணி |
| புதன்- மனப் பயம், வீண் தொல்லை நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| சனி- உயர்ந்த நிலை, பிரயாண பேறு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

www.padippakam.com





## வண்ண நிலா

வண்ண நிலா வானந்தன்னில்
எட்டி எட்டிப் பார்க்குது!
வானில் தவழும் மேகங்களும்
வந்து அதனை மறைக்குது!

சின்ன சின்னத் தாரகைகள்
சிதறி அழகைக் கூட்டுது!
வண்ண நிலவைத் தலைவனென்று
வாழ்த்தி இன்பங்காணுது!

திலகம் போன்ற வண்ண நிலா
திரையை விட்டு வருகுது!
பலரும் வாழும் பூமி நோக்கி
படர்ந்த ஒளியைத் தருகுது!

அன்புத் தம்பி ஆசைத்தங்கை
அனைவர் மனதைக் கவருது!
கிண்ணம் போன்ற வண்ண நிலா
மீண்டும் முகிலுள் மறையுது!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

வேதமுடையதிந்த நாடு-நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு!
சேதமில் லாத இந்துஸ்தானம்-இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா!

-சுப்பிரமணிய பாரதியார்.

## புதையுண்ட பேராசை

### பாப்பா முரசு சிறுகதை

சேனாபுரி நாட்டின் மன்னன் தேவசேனன். மன்னனாக இருந்தாலும் அவனுக்கு அறிவாற்றல் குறைவு. தேவசேனனின் மதியூக மந்திரியான செல்வநேசரின் ஆலோசனைப்படியே ஆட்சியதிகாரம் நடைபெற்று வந்தது.

அந்நாட்டில் பரமன் என்பவன், எப்படியாவது மந்திரியாகி பின்னர் அரியாசனத்தையும் பிடித்து விட வேண்டும் என்று திட்டமிட்டான்.

ஒரு நாள் ஒரு நாவிதனாக வேடமிட்டு அரண்மனைக்குள் புகுந்தான்.

அன்றிலிருந்து அவனே மன்னனுக்கு சவரம் செய்தான். மன்னனின் மந்தபுத்தியைப் பயன்படுத்தித் தனக்குச் சாதகமான காரியங்கள் சிலவற்றைச் செய்தான். சில சமயங்களில் சட்டவிரோதமான காரியங்களைக்கூட மன்னனின் ஒப்புதலோடு செய்வான்.

எப்படியாவது நாட்டின் மன்னனாகி விடுவதே அவனின் நோக்கம். இதற்கு மந்திரி செல்வநேசர் தடையாக இருப்பதை உணர்ந்தான். எப்படியாவது மந்திரியை இல்லாமல் செய்ய வேண்டும் என்று நினைத்து ஒரு திட்டமும் தீட்டினான்.

ஒரு நாள் மன்னனுக்குச் சவரம் செய்து கொண்டிருக்கும்போது பேச்சை ஆரம்பித்தான்.

"மகாராஜா! தங்களின் அப்பாவும், அம்மாவும் இறந்து மேல் உலகம் சென்று பல காலம் ஆகிவிட்டது. அவர்கள் அங்கு நலமாக உள்ளார்களா? இல்லையா? என்று நீங்கள் ஒரு நாளாவது கவலைப்பட்டதுண்டா? அப்பா, அம்மாவை இப்படி மறந்து போவது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்." என்றான்.

"பரமா! நல்ல வேளை நீ ஞாபகப்படுத்தினாய். உனக்கு என் பாராட்டுக்கள். நாளைக்கே அப்பா, அம்மாவைப் பார்க்க மேல் உலகத்திற்கு ஆள் அனுப்புகிறேன்." என்றான் மன்னன்.

"மகாபிரபு! மேல் உலகம் செல்வது சாதாரண காரியம் அல்ல. திறமையான நபரைத்தான் அனுப்ப வேண்டும். அதுவும் நமது மந்திரியார் செல்வநேசரை அனுப்புவதே சரியான முடிவாக இருக்கும்." என்றான்.

"சபாஷ், நல்ல யோசனை. அப்படியே செய்யலாம்." என்றான் மன்னன்.

தனது திட்டம் செயல் வடிவம் பெறுவதை அறிந்த பரமன் அகமகிழ்ந்தான்.

அடுத்த நாள் அவையில் மன்னனின் யோசனையை கேட்ட அமைச்சர் திடுக்கிட்டுப் போனார். தன்னை முடித்துக்கட்ட பரமன் செய்த ஏற்பாடே இது என்று ஒற்றர் மூலம் அறிந்து கொண்டார்.

அமைச்சர் செல்வநேசருக்கு வேறு வழியில்லை. அரசரின் ஆணைக்கு உட்பட வேண்டியதாகிவிட்டது. அடுத்த நாளே நகரின் பூங்கா அருகில் ஆறடி நீளமுள்ள குழி வெட்டப்பட்டது. ஆட்டம், பாட்டம், வாணவேடிக்கை, பூமழை பொழிய அமைச்சரைக் குழிக்குள் படுக்க வைத்து மூடினர்.

மந்திரி செல்வநேசர் அங்கு இல்லாததால் மன்னனை எப்படியோ ஏமாற்றி மூன்றே மாதத்தில் அரசவையில் மந்திரியாகிவிட்டான் பரமன். அடுத்து எப்படியாவது அரியணையில் ஏறிவிட வேண்டுமென்று எண்ணினான்.

ஆறுமாதம் கழித்து திடீரென அரசவைக்கு முனிவர் போன்ற ஒருவர் வந்தார். மன்னனின் முன் வந்து,

"மகாராஜா என்னைத் தெரிகிறதா? நான் தான் மந்திரி செல்வநேசர்," என்றார்.

மன்னன் அரியாசனத்தைவிட்டு இறங்கி ஓடிவந்து மந்திரி செல்வநேசரைக் கட்டித் தழுவி வரவேற்றார்.

"எனதருமை மந்திரியாரே! என் பெற்றோர் மேலுலகில் நலமாக இருக்கிறார்களா?" என்று ஆவலோடு கேட்டான்.

"மன்னா! உங்களது பெற்றோர் அனைத்து வசதிகளும் பெற்று வளமோடு உள்ளார்கள். ஒரே ஒரு குறைதான் உண்டு. உங்கள் அப்பாவுக்குச் சவரம் செய்ய அங்கே ஆளில்லை. என்னையே பாருங்கள் தலை முடியும், தாடியும் வளர்ந்து இந்தக் கோலத்தில் வந்திருக்கிறேன்." என்றார்.

"ஆகா! இதுதானா குறை. இதோ இந்தப் புதிய மந்திரியான பரமனை மேல் உலகம் அனுப்பலாம். அவரை விட முடிதிருத்துவதில் கைதேர்ந்தவர் இந்நாட்டில் வேறு யார் இருக்கிறார்கள்?" என்று கூறி பரமனை மறுநாள் மேல் உலகத்திற்கு அனுப்ப ஆணையிட்டார்.

மந்திரியின் இருக்கையில் அமர்ந்திருந்த பரமன் அதிர்ந்து போனான். எனினும் மன்னனின் வார்த்தைக்கு மறுவார்த்தை ஏது?

மறுநாள் நகரம் விழாக்கோலம் பூண்டது. பரமனை ஊர்வலமாக அழைத்துச் சென்று வெட்டிய குழிக்குள் இறக்கி மண் போட்டு மூடினார்கள்.

தன் புத்திக்கூர்மையால் தன்னைப் புதைத்த குழியின் அடியில் சுரங்கம் தோண்ட ஏற்பாடு செய்து உயிர்தப்பி ஆறுமாதம் பொறுத்திருந்து தலைமுடி, தாடியுடன், அரசவைக்கு வந்த மந்திரி மீண்டும் மந்திரியானார்.

பேராசை கொண்ட பரமன் தனது கெடுமதியால் மண்ணில் புதைக்கப்பட்டு இறந்தான்.



## வாரம் ஒரு நாடு

தலைநகர்-அஸன்சியோன்
பரப்பு-4,06,752 சதுரகிலோ மீட்டர்.
மக்கள் தொகை-50 இலட்சம்
மொழி-ஸ்பானிஷ், குவரானி
எழுத்தறிவு-90%
சமயம்-கிறிஸ்தவம்.
நாணயம்-குவரானி
தனிநபர் வருமானம்-1500 டொலர்.



### பராகுவே

**அமைவிடம்:**

தென்னாபிரிக்காவில் உள்ள சிறு நாடுகளில் பராகுவேயும் ஒன்று. இதனைச் சுற்றிலும் பொலிவியா, பிரேஸில் ஆர்ஜென்டினா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. பராகுவே ஆறு 3000 கிலோமீட்டர் தூரத்திற்கு நீர் பயணத்திற்கு உகந்ததாக இருக்கிறது.

**வரலாறு:**

ஸ்பெயின் 1811 ல் சுதந்திரம் வழங்கியது. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 1954முதல் 1989 வரை தொடர்ந்து ஆட்சி செய்த ஜெனரல் ஒஃப் ரெடோ ஸ்ட்ரோஸ்னர் ஒரு இராணுவப் புரட்சியில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

**பொருளாதாரம்:**

மக்கள் தொகையில் 75% பேர் விவசாயம் சார்ந்துள்ளனர். மக்காச்சோளம், பருத்தி, புகையிலை, எலுமிச்சை, திராட்சை முதலியவை முக்கிய விளை பொருட்கள். கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாகவுள்ளது. மாட்டிறைச்சி, தோல் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும்.

எண்ணெய் வளமும் உள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 07.09.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 156
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 154

பரிசுக்குரியவர்:
செல்வி எஸ். புஸ்பவதனி.
அப்புத்தளை த.ம.வி, அப்புத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம்.ஐ. ஜரீனா, துறையடி, ஓட்டமாவடி-03. | செல்வி எஸ். ஷாலினி, எந்தளை, வத்தளை. |
| ஏ.ஆர்.எம். நஸீர், 3ம் குறுக்குத் தெரு, புத்தளம். | கிருபராஜ் பத்மகலா, அன்புவழிபுரம், திருகோணமலை. |
| ஜெ. புஸ்பபாலினி, பிரதான வீதி, கொஸ்லாந்தை. | எஸ். விசாகன். றோயல் கல்லூரி, கொழும்பு-07. |
| செல்வி ஜெ. மஹேஷிகா, விவேகாநந்தா கல்லூரி, கொழும்பு-13. | எம்.வை.எம். ஹுஸைன், ஹிரும்புர குறுக்குத் தெரு, காலி. |
| எம்.எப்.எம். பைரூஸ், சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | செல்வி ஐதா இராஜகிளி, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15. |

## முதல் தபால் தலை

- **உலகின் முதல் தபால் தலை எப்போது வெளியானது?**
  1840ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி வெளியானது. இது 'பென்னி பிளக்' என்று அழைக்கப்பட்டது.
- **முதல் தபால் தலையான 'பென்னி பிளக்' எந்த நாட்டினரால் வெளியிடப்பட்டது?**
  இங்கிலாந்து நாட்டினரால் வெளியிடப்பட்டது.
- **முதலில் எவ்வளவு 'பென்னி பிளக்'குகள் அச்சிடப்பட்டன?**
  66 கோடி 'பென்னி பிளக்'குகள் அச்சிடப்பட்டன. பின் 1841ம் ஆண்டு சிவப்பு நிறத்தில் 'பென்னி ரெட்' தபால் தலைகள் அச்சிடப்பட்டன.
- **தபால் தலைகள் வருவதற்கு முன் தபால்களுக்கு பணம் எவ்வாறு வசூலிக்கப்பட்டது?**
  தபால்காரரிடம் எந்த இடத்தில் சேர்க்க வேண்டும் என்று கூறிவிட்டு தபாலுக்குப் பணமும் கொடுப்பார்கள். சில



இடங்களில் தபால்களை வாங்குபவர் பணம் கட்டி வாங்கிக்கொள்வார்.

- **தபால் தலைகளை அறிமுகப்படுத்திப் புழக்கத்திற்குக் கொண்டு வந்தவர் யார்?**
  சேர்.ரோலண்ட் ஹில் என்பவர். தபால்தலை சேகரிக்கும் பழக்கத்திற்கும் காரணமானவர் இவர்தான்.

## கிருமிகளுக்கு எதிரான போர்

காசநோய்க்குக் காரணமான பசிலஸ் என்ற கிருமியை ரொபேர்ட் குக் என்பவர் அடையாளம் கண்டுபிடித்தார். இதற்காக மருத்துவத்திற்கான நொபல்-பரிசு 1905ம் ஆண்டு அவருக்குக் கிடைத்தது.



கொலரா மற்றும் காசநோய்க்குக் காரணமான கிருமிகளை இவர் கண்டு பிடித்தது மருத்துவ உலகில் பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது.

நோய்க்குக் காரணமான பல கிருமிகளைக் கண்டு பிடிக்கவும், வளர்க்கவும் பல புதிய நுட்பங்களை இவர் கண்டு பிடித்தார். மருத்துவத்தில் 'கிருமியியல்' என்ற புதிய பிரிவை உருவாக்கினார். இவர் மரணமடையும் வரை காச நோய்க்கு மருந்து கண்டுபிடிப்பதிலும் சிகிச்சை அளிப்பதிலும் தனது நேரத்தைச் செலவு செய்தார்.



## எல்க் மான்

எல்க் மான், மான் குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் உடல் நீளம் பத்து அடி வரை இருக்கும். உயரம் ஏழு அடி. ஆண் மானிடம் காணப்படும் பரந்த தட்டுக்கள் போன்ற கொம்புகள் பெண் மானிடம் இல்லை. கனமான உடலும், உயர்ந்த தோள்களும் சாய்ந்த முதுகும் இதன் தனிச்சிறப்புக்கள். சதுப்பு நிலக்காடுகளில் வாழும் இவை கோடைகாலங்களில் பெரும் பகுதி நேரத்தை நீரிலேயே கழிக்கும்.

நீர் நிலைகளை யொட்டி வளரும் தாவரங்களும், அல்லித் தண்டுகளும் இவற்றிற்குப் பிடித்தமான உணவு. இவை இடம் பெயரும்போது மட்டும் தான் கூட்டமாகச் செல்லும். மற்ற சமயங்களில் தனித்தே இருக்கும்.

பெண் மான் ஒரு தடவையில் இரண்டு அல்லது மூன்று குட்டிகளைப் போடும். குட்டிகள் வளர்ந்து ஒன்றரை வயதான்தும் அவைகளும் குட்டிகளைப் போடும். கரடிகளும், ஓநாய்களும் தான் இவற்றின் எதிரி.

ரஷ்யாவில் எல்க் மான்களை பாலுக்காகவும், இறைச்சிக்காகவும், சுமைகளை ஏற்றிச் செல்லவும் வளர்க்கிறார்கள்.

## நாடுகளும் வானூர்தி நிறுவனங்களும்

| | |
|---|---|
| ஏரோபுளொட் | -ரஷ்யா |
| எயார் இந்தியா | -இந்தியா |
| எயார் லங்கா | -இலங்கை |
| எயார் ஃபிரான்ஸ் | -ஃபிரான்ஸ் |
| அலிதாலியா | -இத்தாலி |
| ஆப்கான் எயார்லைன்ஸ் | -ஆப்கானிஸ்தான் |
| பிரிட்டிஷ் எயார்வேஸ் | -இங்கிலாந்து |
| கத்தே பசிபிக் | -ஹொங்கொங். |
| ஃபின் எயார் | -ஃபின்லாந்து |
| கருடா எயார்லைன்ஸ் | -இந்தோனேஷியா |
| பான் அமெரிக்கா எயார்வேஸ் | -அமெரிக்கா |
| ஜப்பான் எயார்லைன்ஸ் லிமிட் | -ஜப்பான் |
| ஸ்கன்டிநேவியன் எயார்லைன்ஸ் | -அமெரிக்கா |
| க்வான்ஸ எம்பயர் எயார்வேஸ் | -நேபாளம் |
| சபீனா | -பெல்ஜியம் |
| கே.எல்.எம்.எயார்லைன்ஸ் | -நெதர்லாந்து |

தொகுப்பு- ஆர். நரேந்திரன்- வவுனியா.


படிப்பகம்

www.padippakam.com




# அசத்தல் 8

**மதன், கீதா இருவரும் காதலர்கள். கடற்கரையில் மாலை நேரத்தில் சந்திக்கின்றனர். இருட்டாகி விட்டதால் இருவரும் புறப்படுகின்றனர். மதனின் பர்ஸ் தொலைந்து விடுகிறது. கடற்கரையில் ஒரு பெண்ணின் உடல் கிடக்கிறது. அந்தப் பெண்ணின் பெயரும் கீதா. மரிய கீதா. பொலிசார் விசாரணைக்கு வருகின்றனர். மதனின் பர்ஸ் கிடைக்கிறது. மதனைத் தேடி வருகின்றனர். மதனின் காற்சட்டையில் இரத்தக் கறை இருக்கிறது. மதன் கைது செய்யப்படுகிறான். காற்சட்டையில் எப்படி இரத்தம் வந்தது என்பதை அவனால் விளங்க முடியவில்லை. மதனின் காதலி கீதாவுக்கு பொலிசார் போன் செய்கின்றனர். மதன் என்று யாரையும் தனக்குத் தெரியாது என்கிறாள் கீதா. கோர்ட்டில் விசாரணை தொடர்கிறது.**

“ஸ்ரீதர்! ஸ்ரீதர்! ஸ்ரீதர்!”

“நீங்க என்ன செயறிங்க மிஸ்டர் ஸ்ரீதர்?”

“ஃபாரென்சிக் சயன்ஸ் படிச்சிட்டு லேப் டெக்கினீஷியனா இருக்கேன்.”

“இந்த வழக்கு சம்மந்தப்பட்ட பொருள்களிலே ரேகை எடுத்ததெல்லாம் நீங்கதானா?”

“ஆமாம் சார்.”

“சப்-இன்ஸ்பெக்டர் சசிதரன், பேப்பர்ல பிரிண்ட் வாங்கி அனுப்பின கை ரேகையும் கத்தில கிடைச்ச கைரேகையும் ஒத்துப் போகுதுன்னு ரிப்போர்ட் தந்திருக்கிங்க. சரியா?”

“சரிதான் சார்.”

“இந்த ரிப்போட்ல உள்ளது உங்க கையெழுத்துதானா?”

“ஆமாம் சார்.”

“மரியகீதாவுக்கு கத்தி குத்து சரியா இதயத்திலே விழுந்திருக்கு. அதனாலதான் ஏராளமான ரத்தம் வெளியேறி, உடனே மரணம். இதான் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட். கத்தி பாய்ஞ்சிருக்கிற கோணம் மேலிருந்து கீழ். அப்படின்னா இந்த கொலையை மரியகீதாவுக்கு நேர் எதிரிலே நின்று செய்ய முடியுமா? இல்லை மரிய கீதாவோட முதுகு பக்கத்திலேர்ந்தும் குத்த முடியுமா?”

“அது கொஞ்சம் கஷ்டமான கோணம் சார். இந்த கேசிலே கொலையாளி நேரெதிராகத்தான் செயல்பட்டிருக்கணும்.”

“அதே மாதிரி... வெள்ளை பாண்ட்ல உள்ள ரத்தம், மரியகீதாவோட ரத்தம் தான்னு சொல்லிருக்கிங்க. உண்மைதானா அது?”

“உண்மைதான் சார்.”

“இனஃப் யுவர் ஆனர்.”

“டிஃபன்ஸ் லாயர், டேக் ஹிம்.”

“எத்தனை வருஷமா வேலை பார்க்கிறீங்க மிஸ்டர் ஸ்ரீதர்?”

“பத்து வருஷமா.”

“கத்தில ஒரே ஒரு கைரேகைதான் கிடைச்சதா?”

“இல்லை மொத்தம் ஆறு விதமான ரேகைகள் கிடைச்சது.”

“அதிலே எஸ்.ஐ. அனுப்பின கைரேகை ஒத்துப் போச்சி. அப்படித் தானே?”

“ஆமாம். மேலே படிஞ்சிருந்த ரேகை மதனுடையது.”

“யாரோ குத்திட்டு போட்ட கத்தி மேல நம்ம ரேகையை பதிச்சா, பழைய ரேகை கலைஞ்சிடும் இல்லையா?”

“ஆமாம்.”

“கத்தில இருக்கிற ரேகையை வச்சி மட்டும் குற்றத்தை நிரூபிக்க முடியாது இல்லையா?”

“மதன் கைரேகை கத்தில ரேகைகளிலே ஒண்ணோட ஒத்துப் போகுது. அவ்வளவுதான் சொல்லலாம் நான்.”

“பேண்ட்ல படிஞ்ச ரத்தக்கறை மரியகீதாவுடையதுன்னு சொல்லிருக்கிங்க? பாண்ட்டை தவிர வேற சட்டையோ, பனியனோ அனுப்பினாங்களா உங்க கிட்டே?”

“அப்ஜக்ஷன் யுவர் ஆனர். அப்படி எதுவும் அனுப்பியிருந்தால் அதை மெட்டீரியல் எவிடென்ஸ் பட்டியலில் சேர்த்து கோர்ட்டில் சமர்ப்பித்திருப்போம். இது தேவையற்ற கேள்வி.”

“தேவையுள்ள கேள்விதான். யுவர் ஆனர், அலோ மி.”

“ஐ ஓவர்ரூல் திஸ் அப்ஜக்ஷன்.”

“சொல்லுங்க மிஸ்டர் ஸ்ரீதர், வேற சட்டையோ, பனியனோ ரத்தக்கறைகளோட உங்ககிட்டே பரிசோதனைக்கு அனுப்பினாங்களா?”

“இல்லை.”

“ஃபாரன்சிக் சயன்ஸ் படிச்சிருக்கீங்க. உங்களுக்கு பலவிதமான குற்றங்களும், குற்றம் நிகழ்ந்த இடங்களோட அமைப்புகளும் தெரியும். இல்லையா?”

“தெரியும்.”

“தாங்க்யூ. மரியகீதா இதயத்திலே விழுந்திருக்கிற மொத்தக் குத்துக்கள் மூணு. இடைவிடாம குத்தியிருக்கான். முதல் குத்து குத்தினதும்மே, அந்த இதயம் என்ன ஆகும்?”

“பொத்துப் போய்டும்.”

“ஜோக்கடிக்கிறதா நினைப்பா? ரத்தம் பீய்ச்சி அடிக்குமா, அடிக்காதா?”

“அடிக்கும் சார்.”

“எதிரே நிக்கிற கொலையாளியோட சட்டையிலே ரத்தம் படுமா? படாதா?”

“ஐ அப்ஜெக் திஸ் கொசின். கொலை செஞ்சப்போ கொலையாளி சட்டை போட்டுக்கிட்டிருக்கணும்னு அவசியம் இல்ல. காதலர்கள் சந்திச்சி பேசறப்போ, அவர் முன்கூட்டியே எச்சரிக்கையாக தன் சட்டையைக் கழட்டி தனியா வச்சிட்டு, செயல் பட்டிருக்கலாம்.”

“ஒக்கே... ஒக்கே. பாண்ட்ல மட்டும் கறை எப்படி ஏற்பட்டுச்சி? அதுவும் பின் பக்கத்திலே?”

“ஐ ஹேவ் ஆன்சர் நண்பரே. கொலை செஞ்சி முடிச்சாச்சு. மரியகீதா பொணமா ஆயாச்சு. சுத்தியும் ரத்தம் தெறிச்சி தேங்கிக் கிடக்கு, மதன் அவசரமா சட்டையைப் போட்டுக்கிட்டு ஓட முயற்சி பண்றப்போ கால் தடுக்கி அப்படியே மணல்ல உட்கார்ந்திருக்கலாம். அப்போ தேங்கின ரத்தம் பட்டிருக்கணும்.”

“யுவர் ஆனர், கேஸ் ஜோடனைங்கிறது இது தானா? எல்லாம் இப்படி நடந்து இருக்கலாம். அப்படி நடந்திருக்கலாம்னே பிராசிகியூட்டர் சொல்றதை எப்படி அனுமதிக்கிறிங்க?.”

“ஜோடனைங்கிற வார்த்தை ரொம்ப ஸ்ட்ராங். முதல்ல அதை கோபால கிருஷ்ணனை வாபஸ் வாங்கச் சொல்லுங்க யுவர் ஆனர்.”

“டிஃபன்ஸ் கவுன்சில் ஷுட் நாட் யூஸ் திஸ் வர்ட். தெரியாதா உங்களுக்கு?”

“ஸாரி யுவர் ஆனர். ஐ க்ளோஸ் வித் திஸ்.”

“நவ், லெட் அஸ் ஹேவ் எ பிரேக் ஃபார் லன்ச்.”

❏ ❖ ✍

“ரெண்டு பாம்பே மீல்ஸ் கொண்டாப்பா.”

“சார், எனக்கு பயமா இருக்கு.”

“பயப்படாதிங்க ரவி. பார்க்கலாம்.”

“நல்லா தெரியுது. இவன் கொலை செய்யலைன்னு. போலீஸ் பிடிவாதமா அவன் பக்கமே திருப்பறாங்களே..”

“மதன் நாம சொல்லிக் கொடுத்தபடியே கரெக்டர் சொன்னான். ஆனாலும் நம்ம சைடு வீக்கு தான்ங்க ரவி. எதுவும் உறுதியா சொல்ல முடியாது. ச்சே!”

“என்ன சார்?”

“அந்த கீதா மட்டும் சைடுல சாட்சி சொன்னா போதும். எனக்கு ரொம்ப தெம்பு. ஜெயிச்சுடுவோம்னு கிட்டத்தட்ட கேரண்டியே கொடுப்பேன்.”

“அவதான் வரமுடியாது,? வலுக்கட்டாயமா வரவழைச்சாலும் எனக்கு இவரைத் தெரியாதுன்னு தான் சொல்வேன்னு உறுதியா சொல்லிட்டாளே சார்.”

“மதன்கிட்டே பேசிட்டிருந்தப்போ சொன்னேன். அப்படியா சொன்னா, அப்படியா சொன்னான்னு துடிச்சிப் போய்ட்டான். பைத்தியம் மாதிரி இவன்தான் அவளை தீவிரமா காதலிச்சிருக்கான்.”

“சார், இனிமே கூட நாம் சாட்சியா கீதாவை சேர்க்கலாமா?”

“சேர்க்கலாம். ஏன்?”

“இன்னொரு தடவை நான் போய் கீதாவைப் பார்த்து பேசட்டுமா?”

“நடக்காதுப்பா ரவி. அவளுக்கு பணத்திமிரு. எதைப் பத்தியும் கவலை இல்லை.”

“தன் உயிரைப் பத்தியாவது கவலைப் படுவா இல்லையா?”

“அட என்ன சொல்றே நீ?”

“கோர்ட்டுக்கு வந்த மதனுக்கு ஆதரவா சாட்சி சொல்லலைன்னா உன்னைக் கொலை பண்ணிடுவேன்னு மிரட்டினா?”

“நல்ல கிரிமினல் முளைப்பா உனக்கு. அவ இதுக்கெல்லாம் பயப்படற டைப்பா தெரியலை. சரி வர்றேன்னுட்டு, அங்கே இந்த மாதிரி கொலை செய்வேன்னு மிரட்டினாங்கன்னு அப்படியே சொல்வா. என்ன செய்வே நீ?”

“வேற என்னதான் சார் வழி?”

“ஆண்டவன் விட்டவழிதான். மிச்ச கேசையும் என்னால முடிஞ்ச வரைக்கும் சாட்சியங்களை உடைக்கப் பார்க்கிறேன். ஐ எவிடென்ஸ் இல்லைங்கிறது நம்ம ப்ளஸ் பாய்ண்ட், கொலை ஆயுதத்திலே ரேகை இருக்கிறது அவங்க ப்ளஸ் பாய்ண்ட். நடுவிலே ஆர்குமெண்ட்டைப் பார்த்து தன் டிஸ்கிரீஷன்ல முடிவு எடுக்கப்போற ஜட்ஜ் கைலதான் இருக்கு இப்போ இந்த கேஸ். சரியான பழமொழி சொல்லணும்னா மதில் மேல் பூனைதான். பில்லுக்கு காசைக் கொடுத்துட்டு வாங்க, வாசல்ல தம் ஒண்ணு அடிச்சிடறேன் நான்.”



✂ ✧ ✦

“உங்க பேர் என்ன?”

“சசிரேகா.”

“மரியகீதாவோட பாடியை நீங்கதான் போஸ்ட் மார்ட்டம் பண்ணினதா?”

“ஆமாம்.”

“இதயத்திலே மூணு குத்துன்னு குறிப்பிட்டிருக்கிங்க. கொலை ஆயுதம் ஒரு கத்தியாகத்தான் இருக்கணும்னு குறிப்பிட்டிருக்கிங்க. இந்த கையெழுத்து...”

“என்னோடது தான்.”

“மரியகீதா வயத்திலே எத்தனை நாள் கரு இருந்தது?”

“அம்பது நாள் வளர்ச்சியடைந்த கரு.”

“மரியகீதாவோட உடம்பிலே வேற ஏதாவது காயங்கள் இருந்திச்சா?”

“இல்லை.”

“டிஃபன்ஸ் லாயர் மே டேக் ஹிஸ் டர்ன் யுவர் ஆனர்.”

“என்ன, கோபாலகிருஷ்ணன்?”

**இனி தமிழக கிரைம் கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

“நோ கொஸ்டின்ஸ் யுவர் ஆனர்.”

“அப்போ, கோ ஃபார் த நெக்ஸ்ட்.”

“ரோஸ்லின் ராஜசேகர், உங்க தங்கை உங்ககூடதான் தங்கி இருக்காங்களா?”

“ஆமாம்.”

“மரியகீதா எப்படிப்பட்ட டைப்?”

“கலகலப்பான பொண்ணு. எல்லாரோடயும் இனிமையா பழகுவா.”

“உங்க ரெண்டு பேருக்கும் உறவு எப்படி இருந்திச்சி?”

“சுமுகமாதான் இருந்திச்சி. நாங்க அக்கா- தங்கச்சிங்க மாதிரியே பழகமாட்டோம். எந்த தயக்கமோ, கூச்சமோ இல்லாம எல்லா விஷயத்தையும் பேசுவோம்.”

“மரியகீதா தன்னோட அனுபவங்களை, விருப்பங்களை எல்லாம் எதையும் மறைக்காம உங்ககிட்டே சொல்வாங்களா?”

“ஆமாம்.”

“மரியகீதா மதனைக் காதலிச்ச விஷயம் உங்களுக்குத் தெரியுமா?”

“தெரியும்.”

“எப்படித் தெரியும்?”

“மரியகீதாவே சொன்னா.”

“வேற என்ன சொன்னா?”

“நாங்க ரெண்டுபேரும் ரொம்ப நெருக்கமா பழகுறோம். சீக்கிரம் கல்யாணம் செஞ்சுக்க முடிவு பண்ணிருக்கோம். நீங்க தான் நடத்தி வைக்கணும்னு சொன்னா.”

“நீங்க என்ன சொன்னீங்க?”

“அவ வளர்ந்த பொண்ணு. உலக விபரம் தெரிஞ்சவ. அதனால அவ விருப்பத்துக்கு எதிர்ப்பு சொல்ல விரும்பாம சம்மதம் சொன்னேன்.”

“அவங்க ரெண்டு பேரும் எங்கே சந்திச்சுக்குவாங்க?”

“அஷ்டலக்ஷ்மி கோயில்ல.”

“சம்பவம் நடந்தன்னைக்கு மரியகீதா உங்ககிட்டே என்ன சொல்லிட்டுப் போனா?”

“மத்தியானமே புறப்பட்டா. ஒரு டைரக்டரைப் பார்த்துட்டு, சாயங்காலம் அஷ்ட லக்ஷ்மி கோயில் போய் லவ்வரைப் பாத்துட்டு வர்றேன்னு சொன்னா.”

“அதுக்கப்புறம் உங்களுக்கு விபரம் எப்படி தெரியும்?”

“மறுநாள் காலையிலே சப்-இன்ஸ்பெக்டர் சசிதரன் வந்து சொன்னார்.”

“தட்ஸ் ஆல்.”

“என்ன மிஸ்டர் டிபென்ஸ், இவங்களை கிராஸ் எக்ஸாமின் பண்றிங்களா, இல்லை நோ கொசின்ஸா?”

“ஸோ மெனி கொஸ்டின்ஸ் யுவர் ஆனர்-வித்யுவர் பர்மிஷன்.”

“கேளுங்க.”

“குற்றம் சுமத்தப்பட்டிருக்கிற மதனை நீங்க எப்போ சந்திச்சிங்க மேடம்?”

“நான் எங்கே சந்திச்சேன்.”

“எப்போ முதன் முதலா பார்த்திங்கன்னு கேக்கறேன்.”

“கோர்ட்லதான்.”

“உங்க தங்கை காதலிச்சது மதனை தான்னு எப்படிச் சொல்றிங்க?”

“அவளேதான் சொன்னாளே...”

“என்ன சொன்னா? அப்படியே நினைச்சிப் பார்த்து சொல்லுங்க.”

“நான் ஒருத்தரை லவ் பண்றேன்க்கா. ரொம்ப நல்லவரு. அவர் ஹிண்டு. எங்க கல்யாணம் நடக்க நீதான் உதவி பண்ணனும்-அப்படின்னு சொன்னா.”

“நீங்க பேரென்ன, விபரம் என்னன்னு எதுவும் கேக்கலையா?”

“அதான் கேட்டேனே. வேலை தேடிக்கிட்டிருக்காருன்னா. திடீர்னு ஒரு நாள் அழைச்சுட்டு வந்த அறிமுகப்படுத்தறேன்னு சொன்னா.”

“மரியகீதா தன் காதலன் பேர் மதன்னு சொன்னாளா? நல்லா யோசிச்சு சொல்லுங்க.”

“இல்லை. பேர் கேட்டேன். எல்லாமே சஸ்பென்ஸா இருக்கட்டும்னு சொன்னா..”

“யுவர் ஆனர், ப்ளீஸ் நோட் திஸ் . ஸோ, உங்க தங்கை ஒரு ஹிண்டு பையனை காதலிச்சான்றத மட்டும் தான் தெரியும். அவன் பேர் உங்களுக்குத் தெரியாது. போலீஸ் மதனை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தினதாலே, மதன்தான் அவ காதலன்னு சொல்றிங்க. அப்படித் தானே?”

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: ஏ.சலாம்.
வயது: 27
முகவரி: P.O.BOX-4538, MEDINAH-21411, K.S.A.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: எஸ். விக்னேஸ்வரன்.
வயது: 24
முகவரி: ஈ/1/6, சாஞ்சி ஆராய்ச்சி தோட்டம், கொழும்பு-12.
பொழுதுபோக்கு: ரீ.வி., வானொலி.

பெயர்: எச். லாபிர்.
வயது: 21
முகவரி: ஆர்.சி.ரோட், ரீ.பி.3சந்தி, ஏறாவூர்-01.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: என். சாந்தன்.
வயது: 26
முகவரி: 05 WOODLAND ROAD, SOUTHALL MIDDLESEX UB,EQ,U.K.
பொழுதுபோக்கு: ரீ.வீ., நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். மனோகரன்.
வயது: 20
முகவரி: கோணக்கலை கீழ்ப்பிரிவு , பசறை.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: றில்வானா நிஜாப்தீன்.
வயது: 20
முகவரி: P.O.BOX.29147 SAFAT-13152 KUWAIT.
பொழுது போக்கு: தையல், வானொலி, பத்திரிகை.

பெயர்: எம். பாரீஸ்.
வயது: 27
முகவரி: P.O.BOX-177 SHAHAB-ASSAIB, SALALAH-211, OMAN.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஐ.அலி சப்ரி.
வயது: 25
முகவரி: 9, வெஸ்டன் சோல்டன், மஸ்ஜித் தாரிக் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: கே. யோகராஜ்.
வயது: 18
முகவரி: 213, ஒரேஞ்ச் பில்ட், இறக்குவானை.
பொழுது போக்கு: வானொலி, ரீவி.

பெயர்: கே. பாஸ்கரன்.
வயது: 17
முகவரி: பிரதான வீதி, களுதாவளை-4, களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல்.

பெயர்: பி. கரன்.
வயது: 22
முகவரி: VIA BAYNI-1, 6855 STABIO, SWITZERLAND.
பொழுது போக்கு: வீடியோ கேம்.


பெயர்: எம். மௌரூல்.
வயது: 18
முகவரி: 378, மார்க்கட் ரோட், சாய்ந்தமருது-01.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

மக்சீம் கார்க்கி



# 91 தாய்

அவள் மகன் அவளுக்குத் தெரியாத எதையும் சொல்லி விடவில்லை. அவனது சிந்தனைகளெல்லாம் அவளுக்கும் பரிச்சயமானவை தாம். என்றாலும் இங்கே, நீதிமன்றத்தின் முன்னிலையில், அவனது கொள்கையின் மீது அவளுக்கு ஓர் அதிசயக் கவர்ச்சி முதன் முதலாக ஏற்படுவதை அவள் உணர்ந்தாள். பாவெலுடைய அமைதியைக் கண்டு அவள் வியப்படைந்தாள். அவனது கொள்கையிலும் அதன் இறுதி வெற்றியிலும் முழு நம்பிக்கை கொள்ளும் ஒரு நட்சத்திர ஒளியைப் போலவே அவள் அவனது பேச்சைத் தன் இதயத்துக்குள் பத்திரப்படுத்தி வைத்தாள். இனிமேல் அந்த நீதிபதிகள் அனைவரும் அவனோடு காரசாரமான விவாதத்தில் இறங்கி, அவன் கூறுவதையெல்லாம் கோபாவேசமாக மறுத்துக் கூறி, தங்களது சொந்த சிந்தனைகளை வலியுறுத்துவார்கள் என்று தாய் எதிர்பார்த்தாள். ஆனால் அந்திரேய் ஆடியசைந்து கொண்டே எழுந்திருந்தான். தனது புருவங்களுக்குக் கீழாக அந்த நீதிபதிகளைக் கவனித்துப் பார்த்தான். பிறகு பேசத் தொடங்கினான்.

"பிரதிவாதிப் பெரியோர்களே...!"

"நீங்கள் நீதிபதிகளைப் பார்த்துத்தான் பேசவேண்டும். பிரதிவாதிகளை நோக்கியல்ல!" என்று அந்தச் சீக்காளி நீதிபதி கோபத்தோடு உரக்கக் கத்தினார். அந்திரேயின் முகத்தில் ஒரு குறும்புத்தனமான உணர்ச்சி பிரதிபலித்ததைத் தாய் கண்டு கொண்டாள். அவனது மீசைகள் அசைந்து துடித்தன; கண்களில் ஒரு பூனைக்கண் பிரகாசம் தோன்றியதைத் தாய் கண்டாள். அவன் தனது தலையை மெலிந்த நீண்ட கரத்தால் பரபரவென்று தேய்த்து விட்டுக் கொண்டான்; பெரு மூச்செறிந்தான்.

"அப்படியா?" என்றான் அவன். "நான் இதுவரை உங்களை நீதிபதிகளாகக் கருதவில்லை. பிரதிவாதிகளாகவே கருதிவிட்டேன்!"

"விஷயத்தைப் பற்றி மட்டுமே பேசுங்கள்!" என்று அந்த கிழ நீதிபதி

> "எந்த மக்களைச் சிறையிலேதள்ளி
> நாசப்படுத்துகிறீர்களோ, வைத்தியம் பிடிக்கச் செய்கிறீர்களோ
> அந்த மக்களின் நாகரிகத்தை நாங்கள் மதிக்கிறோம்
> ஆதரிக்கின்றோம் கௌரவிக்கிறோம்...!"
>
> —சமோய்லவ்.

வறண்ட குரலில் எச்சரித்தார்.

"விஷயத்தையா? ரொம்ப சரி. உங்களை நேர்மையும் கௌரவமும் சுதந்திரமும் கொண்ட உண்மையான நீதிபதிகளாகக் கருதிக் கொள்வதென்று நான் என் மனத்தைப் பலவந்தப்படுத்தி ஒப்புக்கொள்ளச் செய்து விட்டேன்...."

"நீதிமன்றத்துக்கு உங்கள் விமர்சனம் எதுவும் தேவையில்லை!"

"ஓஹோ, அப்படியா? ரொம்ப சரி. நான் எப்படியாவது பேசுகிறேன். நீங்கள் எல்லாம் 'உன்னது', 'என்னது' என்ற வித்தியாசம் பாராத, பாரபட்சமற்ற, விருப்பு வெறுப்பற்ற நடுநிலைமையாளர்கள் என்றே வைத்துக் கொள்வோம். சரி, உங்கள் முன்னால் இரண்டு பேரை இழுத்துக்கொண்டு வருகிறார்கள். ஒருவன் சொல்கிறான்: 'அவன் என்னைக் கொள்ளையடித்ததுமில்லாமல் என்னைக் கூழாய் அடித்து நொறுக்கி விட்டான்' என்கிறான். இன்னொருவன் 'எனக்கு ஜனங்களைக் கொள்ளையடிக்க உரிமை உண்டு; என்னிடம் சொந்தமாக ஒரு துப்பாக்கி இருப்பதால் அவனைக் கூழாக அடித்து நொறுக்கவும் செய்வேன்' என்கிறான்...."

"வழக்கைப் பற்றி ஏதும் பேசத் தெரியாதா?" என்று குரலை உயர்த்திக் கொண்டு கேட்டார் அந்தக் கிழ நீதிபதி. அவரது கரம் நடுங்கியது. அவர் கோபப்படுவதைக் கண்டு, தாய்க்குச் சந்தோஷமாயிருந்தது. ஆனால் அந்திரேய் நடந்து கொள்ளும் விதம்தான் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவனது பேச்சு தன் மகனுடைய பேச்சோடு இணைந்து செல்வதாகத் தோன்றவில்லை. அவர்களது விவாதமெல்லாம் கண்ணியமும் கண்டிப்பும் நிறைந்ததாக இருக்க வேண்டுமென அவள் விரும்பினாள்.

அந்த ஹஹோல் தான் பேசத் தொடங்குவதற்கு முன்னால் அந்தக் கிழவரை வாய் பேசாது பார்த்தான்.

"விஷயத்தை மட்டுமா?" என்று நெற்றியைத் தடவிக் கொண்டே சொன்னான். "நான் ஏன் அதைப் பற்றி உங்களிடம் பேச வேண்டும்? உங்களுக்கு இப்போது என்னென்ன தெரிய வேண்டுமோ, அதையெல்லாம் தான் என் தோழன் எடுத்துக் கூறி விட்டானே. மற்ற விஷயங்களை முறை வரும்போது மற்றவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்..."

அந்தக் கிழ நீதிபதி நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு சத்தமிட்டார்.

"நீங்கள் பேசியது போதும்!" அடுத்து-கிரிகோரிய் சமோய்லவ்!"

ஹஹோல் கப்பென்று உதடுகளை மூடிக்கொண்டு பெஞ்சின் மீது சாவதானமாக உட்கார்ந்தான். சமோய்லவ் தனது சுருட்டைத் தலையைச் சிலுப்பிவிட்டுக் கொண்டு எழுந்திருந்தான்.

"அரசாங்க வக்கீல் என்னுடைய தோழர்களைக் காட்டுமிராண்டிகள் என்றும், நாகரிகத்தின் எதிரிகள் என்றும் கூறினார்..."

"உங்கள் விசாரணையைப் பொறுத்த விஷயத்தை மட்டும் பேசுங்கள்."

"இதுவும் அதைப் பொறுத்த விஷயம் தான். யோக்கியப் பொறுப்புள்ளவர்களைப் பொறுத்த விஷயங்கள் தான் எல்லாம். அவர்கள் சம்பந்தப்படாத எந்த விஷயமும் இல்லை. தயவுசெய்து நான் பேசுவதில் குறுக்கிட வேண்டாம். உங்கள் நாகரிகம் எது? அதைத்தான் நானும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்."

"உங்கவோடு விவாதம் பண்ணுவதற்காக இங்கு நாங்கள் வரவில்லை. உங்கள் வேலையைப் பாருங்கள்!" என்று பல்லைக் காட்டிக் கொண்டே சொன்னார் அந்தக் கிழவர்.

அந்திரேயின் நடத்தை அந்த நீதிபதிகளிடத்தில் ஒரு மாறுதலை உண்டுபண்ணியிருந்தது. அவனது வார்த்தைகள் அவர்களிடமிருந்து எதையோ உரித்தெடுத்துவிட்டது போல் தோன்றியது. அவர்களது சாம்பல் நிற முகங்கள் கறுத்துக்கறைபடிந்தன. கண்களில் உணர்ச்சியற்ற பசிய ஒளி மினுமினுத்தது. பாவெலின் பேச்சினால் அவர்களுக்கு எரிச்சல் தான் உண்டாயிற்று. எனினும் அவர்கள் அவனை மதிக்கும்படியான நிர்ப்பந்தத்தை உண்டாக்கிவிட்டது அவனது பேச்சு. அதனால் அவர்கள் தங்களது எரிச்சலைக்கூட வெளிக்காட்டாமல் உள்ளடக்கிக் கொண்டு தவித்தார்கள். அந்த ஹஹோலோ அவர்களது இந்தப் பாசாங்குத் திரையைக் கிழித்தெறிந்து, அவர்களது அந்தரங்க உணர்ச்சியை வெளிக்கிளப்பி விட்டு விட்டான். அவர்கள் ஒருவருக்கொருவர் குசுகுசுத்துப் பேசினார்கள்; முகத்தை விகாரமாகக் கோணிக்கொண்டார்கள்; நிலை கொள்ளாமல் துறுதுறுத்தார்கள்.

"நீங்கள் மக்களை உளவாளிகளாகப் பழக்கி விடுகிறீர்கள்; இளம் யுவதிகளையும் பெண்களையும் கெடுக்கிறீர்கள்; மனிதர்களைத் திருடர்களாகவும் கொலைகாரர்களாகவும் மாற்றி விடுகிறீர்கள்; மதுபானத்தால் மக்களை விஷமூட்டிக் கொல்கிறீர்கள். சர்வதேச யுத்தங்கள், பொய் பித்தலாட்டங்கள், விபசாரம், காட்டுமிராண்டித்தனம்- இதுதான் உங்கள் நாகரிகம். இந்த மாதிரியான நாகரிகத்துக்கு நாங்கள் எதிரிகள்!"

"நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்..." என்று சத்தமிட்டார் அந்தக் கிழவர். ஆனால் சமோய்லவோ முகம் சிவக்க, கண்கள் பிரகாசிக்க எதிர்த்துச் சத்தமிட்டான்:

"நீங்கள் எந்த மக்களைச் சிறையிலே தள்ளி நாசப்படுத்துகிறீர்களோ, வைத்தியம் பிடிக்கச் செய்கிறீர்களோ அந்த மக்கள் குலத்தின் நாகரிகத்தைத்தான் நாங்கள் மதிக்கிறோம்; ஆதரிக்கின்றோம்; கௌரவிக்கின்றோம்!...."

"பேசியது போதும்; சரி. அடுத்தது-பியோதர் மாசின்!"

பியோதர் முள்குத்தியது போலத் துள்ளியெழுந்து நிமிர்ந்து நின்றான்.

"நான்-நான் சத்தியம் செய்கிறேன். நீங்கள் எங்கள் மீது ஏற்கெனவே தீர்ப்புச் செய்து விட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்," என்று அவன் மூச்சுத் திணறிக் கொண்டே சொன்னான். அவனது கண்களைத் தவிர முகம் முழுவதும் வெளிறிட்டுப் போனதாகத் தோன்றியது. அவன் தன் கையை நீட்டி உயர்த்திக் கொண்டே கத்தினான்: "நான் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். நீங்கள் என்னை எங்கெங்கு அனுப்பினாலும் சரி, அங்கிருந்து நான் எப்படியாவது தப்பிவந்து என் சேவையை என்றென்றும், என் வாழ்நாள் பூராவும் தொடர்ந்து நடத்துவேன். இது சத்தியம்!"

சிஸோவ் உரத்து முனகிக் கொண்டே, தன் இருப்பிடத்தை விட்டு அசைந்து உட்கார்ந்தான். ஜனக் கூட்டத்திடையே ஒரு விசித்திரமான முணுமுணுப்பு எதிரொலித்து, அது திக்பிரமை யுணர்ச்சியில் கலந்து அமிழ்ந்தது. ஒரு பெண் பொருமிக் குமுறியழுதாள்; யாரோ திடீரென இருமலுக்கு ஆளாகிப் புகைந்தார்கள். போலிஸ்காரர்கள் கைதிகளை மங்கிய வியப்புணர்ச்சியோடு பார்த்தார்கள்; ஜனங்களைக் கோபத்தோடு பார்த்தார்கள். நீதிபதிகள் முன்னும் பின்னும் அசைந்தாடினார்கள். அந்தக் கிழட்டு நீதிபதி வாய்விட்டுக் கத்தினார்:

"அடுத்தது-இவான் கூஸெவ்!"

"நான் சொல்வதற்கு எதுவும் இல்லை!"

"அடுத்தது-வசீலி கூஸெவ்!"

"எனக்கும் ஒன்றும் இல்லை!"

"பியோதர் புகின்!"

வெளுத்து நிறமிழந்து போயிருந்த புகின் சிரமத்தோடு எழுந்திருந்து, தன்தலையை உலுக்கி விட்டுக்கொண்டு பேசினான்:

"நீங்கள் உங்களைப் பார்த்தே நாணித் தலைகுனிய வேண்டும். எனக்குக் கல்வியறிவு இல்லை தான். என்றாலும் எது நியாயம் என்பது எனக்குத் தெரியும்." அவன் தன் கையைத் தலைக்கு மேலாக உயர்த்தி, மௌனமானான்; கண்களைப் பாதி மூடியவாறு தூரந்தொலைவிலுள்ள எதையோ கூர்ந்து கவனிப்பது போலப் பார்த்தான்.

"இதென்ன இது?" என்று எரிச்சல் கலந்த வியப்போடு கூறிக் கொண்டே அந்தக் கிழ நீதிபதி நாற்காலியில் சாய்ந்தார்.

"ப்பூ! நீங்கள் நாசமாய்ப்போக!..."

புகின் வெறுப்போடு கீழே உட்கார்ந்தான். அவனது இருண்ட வார்த்தைகளில் ஏதோ ஒரு புதுமையும் ஏதோ ஒரு பெரிய முக்கியத்துவமும், எதையோ பழித்துக் கூறும் துக்க உணர்ச்சியும், அப்பாவித்தனமும் பொதிந்திருந்தன. எல்லோருமே இதை உணர்ந்து கொண்டார்கள். நீதிபதிகள் கூட, அவன் கூறியதை விடத் தெளிவானதான ஓர் எதிரொலியை எதிர்பார்ப்பது போலத் தம் செவிகளைக் கூர்ந்து சாய்த்தார்கள். அசைவற்ற அமைதி அங்கு நிலவியது. இடையிடையே அழுகைக்குரல் கேட்பதைத் தவிர அந்த மௌனத்துக்கு வேறு இடைஞ்சல் எதுவும் ஏற்படவேயில்லை. கடைசியாக, அரசாங்க வக்கீல் தமது தோள்களைக் குலுக்கிக் கொண்டு லேசாகச் சிரித்தார்; பிரபுவம்சத் தலைவர் இருமினார்; மீண்டும் அந்த நீதிமன்றத்தில் இரகசியப் பேச்சுக்களின் கசமுசப்புக்குரல் முணுமுணுக்கத் தொடங்கியது.

"நீதிபதிகள் பேசப்போகிறார்களா?" என சிஸோவைப் பார்த்து மெதுவாகக் கேட்டாள் தாய்.

"எல்லாம் முடிந்து விட்டது-இனி மேல் தீர்ப்பு மட்டும் தான் பாக்கி..."

"இவ்வளவுதானா? வேறொன்றும் இல்லையா?"

"இல்லை."

அவளால் அதை நம்ப முடியவில்லை.

சமோய்லவின் தாய் தனது இடத்தில் நிலை கொள்ளாமல் தவித்துப் புழுங்கினாள். பெலகேயாவை முழங்கையாலும் தோளாலும் இடித்துத் தள்ளினாள்.

"இதென்ன இது? இப்படியா நடக்கும்?" என்று தன் கணவனை நோக்கிக் கேட்டாள் அவள்.

"நீ தான் பார்த்தாயே. இப்படித்தான் நடக்கும்."

"கிரிகோரியுக்கு என்ன தண்டனை கொடுப்பார்கள்?"

"சும்மா இரு."

ஒவ்வொருவரும் ஏதோ ஒரு பிளவை, ஏதோ ஒரு முறிவை, ஏதோ ஒரு குழப்பத்தை உணர்ந்திருந்தார்கள். அடி முடி காண முடியாத எதோ ஒரு சொக்கப்பனையின் ஒளியை, அதனுடைய இனம் தெரியாத அர்த்த பாவத்தை, அதனது தடுத்து நிறுத்த முடியாத அசுர சக்தியைக் கவனித்துக் கொண்டிருப்பது போல் ஜனங்கள் அனைவரும் ஒன்றுமே புரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள். திடீரெனத் தங்கள் முன் தோன்றிய மகத்தான விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியாமல், தங்களுக்குப் புரிந்த சின்னஞ்சிறு விஷயங்களைப் பற்றி மட்டும் ஏதேதோ உணர்ச்சிகளை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இதைக்கேளு. அவர்கள் ஏன் இவர்களைப் பேசவிடுவதில்லை?" என்று புகினின் மூத்த சகோதரன் சிறிது உரக்கக் கேட்டான். "அரசாங்க வக்கீலை மட்டும் எதை வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் பேச விடுகிறார்களே..."

பெஞ்சுகளுக்குப் பக்கத்தில் நின்ற ஓர் அதிகாரி ஜனக் கூட்டத்தை நோக்கித் தன் கையை நீட்டி அவர்களைக் கையமர்த்தினான்.

"அமைதி, அமைதி" என்றான் அவன்.

சமோய்லவின் தந்தை பின்னால் சாய்ந்து கொண்டு மனைவியின் முதுகிற்குப்பின் உடைந்த வார்த்தைகளில் ஏதேதோ முணுமுணுக்கத் தொடங்கினான்:

"ரொம்ப சரி-அவர்கள் குற்றவாளிகளென்றே வைத்துக்கொள்வோம். இருந்தாலும் தங்கள் கட்சியை எடுத்துரைப்பதற்கும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டாமா? அவர்கள் யாருக்கு எதிராகக் கிளம்புகிறார்கள்? நான் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும். எனக்கும் என் இதயத்தில் சில சொந்த அபிப்பிராயங்கள் உண்டு..."

(தொடர்ந்து வரும்)

# மனிதக் குண்டு

திருகோணமலையில் இருந்து கொழும்புக்குப் போகும் ரயில் தனது பயணத்தை இப்பொழுது ஆரம்பித்தால் தான் நாளைக் காலை ஐந்து மணிக்கோ அல்லது அதற்குப்பின்போ கொழும்பக் கோட்டையை வந்தடைய ஏதுவாகும். செக்கிங் கடுமைக்குப் பயந்து அலைக்கழிவில்லாத பயணத்திற்கு இந்த ரயில் பெரிதும் உதவுவதால் அனேகமானவர்கள் இதனைத் தான் விரும்புவர்.

உறங்கலிருக்கைப் பெட்டிதான் அவசர அவசரமாய் நிறையும். சாமான்கள் சகிதம் குடும்பத்தோடு வருவதற்கு இது வசதி. ஊர்த் துளவாரங்கள், சாப்பாடு குடிப்புகளுக்கெல்லாம் அதோடு வசதியான ஒரு தூக்கம்- இவையெல்லாம் மனம் போல பாவிக்க இந்தப் பெட்டிகளை எங்கடை ஆக்கள் பிடித்துக் கொள்வினம்.

ஹோர்ன் ஒரு முறை அடித்தது. இரண்டாம் முறையும் அடித்தது. மூன்றாம் முறையும்....இனியென்ன ரயில் புறப்பட வேண்டியதுதான்.

முதலாம் பெட்டியின் உறங்கு ஆசனத்தில் ஒரு பெண் தன்னைச்- சீர் செய்து கொண்டு உட்கார்ந்தாள். வசதியாகப் படவில்லை. சாய்வு ஸ்பிரிங்கைத் தட்டி இன்னும் இருக்கையை வசதிப் படுத்தினாள். அடிக்கடி தன்னை தன் உடம்பை அசைத்து அலட்டிக் கொள்ளும் பெண்ணை பக்கதில் இருந்த ஒருவர் கொஞ்சம் சந்தேகத்தோடு பார்த்ததுதான் தாமதம். "ஐயோ! மனிதக் குண்டு.... மனிதக் குண்டு....!" கத்தினார். அன்னிய மொழி புரியாத பெண்மணியும் அதிர்ந்து போனார். போதாதற்கு பெண்ணின் காலுக்குக் கீழே ஒரு கடதாசிப் பொட்டலமும்.

யாரோ அபாயச் சங்கிலியையும் இழுத்து விட்டான். ரயில் நகரவேயில்லை."

"நல்ல காலம் எங்கடை தெய்வம் காப்பாற்றினார்!"

"எங்களை எல்லாம் கொல்லப்பாக் கிறான்கள்!"

ஆளுக்கு ஆள் விமர்சனம். ஏச்சுக்கள். செய்தி இறக்கை கட்டிக் கொண்டு பதின் மூன்று பெட்டிக்குள்ளாலும் நுழைந்த போது, எடுத்த சாமான் பாதி எடாத சாமான் பாதி. பிள்ளையை விட்டு விட்டு பெற்றோர்; பெற்றோரை இழந்த பிள்ளைகள்; கணவனை விட்டு விட்டு மனைவி என்றெல்லாம் தலை தெறிக்க சிதறியோடினர். எல்லா இடமும் பரபரப்பு ரெயில்வே ஸ்டேஷனே அழு குரலால் நிரம்பியது.

எல்லோரோடும் சேர்ந்து பாக்கியமும் ரெயில் பெட்டியை விட்டு இறங்கி ஓடப்பார்த்தாள். கையில் தனது கடதாசிப் பொட்டலத்தையும் தூக்கிக் கொண்டு பெட்டியை விட்டு இறங்கினாள். செய்தி தெரிந்து குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவு அவசரமாய் வாகனத்தோடும் ஆயுதாதிகளோடும் வந்து சேர்ந்தது. மக்களை அவசர அவசரமாய் வெளியேற்றினார்கள்.

எல்லோரும் அவளைச் சுட்டிக் காட்டினார்கள், சுட்டு விரலால் எதிரியைக் காட்டும் மற்றைய மூன்று விரல்களும் தம்மையே அடையாளங்காட்டுவதாய் மறந்த மனிதர்கள்! எதிரியாய் அன்னியப்பட்டுப் போன அவலம். பாக்கியம் மலக்க மலக்க பிளாட் பாரத்தில் நின்று கொண்டிருந்தாள்.

இன்ஸ்பெக்டர் பாக்கியத்தை நோக்கி வந்தார். இப்போது இன்னும் கொஞ்சம் அண்மித்தார்.

"உன்னுடைய பேரென்ன.." கேட்டார்

"பாக்கியமய்யா.."

"உன்னாலை தான் இத்தனை மக்களும் பயந்து போய் ஓடியது உனக்குத் தெரியுமா?"

விழிகளை விரித்தாள் பாக்கியம். மரண பயம் மாறி அதிர்ச்சி தலைநீட்டியது.

"ஏனய்யா!"

"நீ குண்டு கட்டி வந்திருக்கிறியாம்.. உன்னுடைய பார்சலில் என்ன இருக்கு?"

"ஐயா உதுக்குள்ளே என்ரை பழஞ்சீலையள்தான் கிடக்குது." வாய் பிளந்த கடதாசிப் பொட்டலம் இன்ஸ்பெக்டரையும் மற்றும் வீரர்?களையும் பார்த்து ஏளனித்தது. "ஆமா.. உன்னுடைய உடம்புக்கு எதுக்கு இவ்வளவு பெரிய ஜேக்கின்!"

குளிர் தாங்க முடியாமல் காலையில்



மானுடபுத்ரன்

வெளிக்கிட்டு வரும்போது ஜெக்கினை மாட்டிக் கொண்டு வந்த பாக்கியத்தைக் கண்டுதான் இவ்வளவு அல்லோல கல்லோலமும் என்று அவள் அறிந்திருக்கவில்லை.

"திற பார்ப்போம்!"

எல்லோரும் ஆவல் பட்டார்கள். பாக்கியம் தானாகவே ஸிப்பைத் திறந்து காட்டினாள். ஈர்க்கிள் உடம்புக்கு அந்த ஸ்பன்ச் வைத்த ஜேக்கின் எடுப்பாய்த்தான் இருந்தது. பொம்பிப் போனதுதான் சந்தேகமா?

இன்ஸ்பெக்டர் கரிசனையோடும் அன்போடும் பாக்கியத்தை பார்த்தார்.

"அம்மா.. கோவிக்காதையுங்கோ.. உங்களிண்டை உடுப்பைப் பாத்து விட்டு எங்கடை ஆட்கள் நல்லாவே பயந்து விட்டினம். உங்களை சிரமப்படுத்தினதுக்கு மன்னியுங்கோ. நீங்கள் ஏறி உங்களின் சீட்டிலை உட்காருங்கோ.." அன்பாய்ச் சொன்னார்.

ஆரம்பக் குழப்பக்காரனை அழைத்து வரச் சொன்னார்.

"உன்னைப் போல மடத்தனமான ஆக்களை நாட்டிலை நடமாட விடுறதே பெரிய பாவம்." சொன்னவர் தனது பெரிய கண்ணைச் சிவப்பாக்கினார். கையில் இருந்த கருங்காலிப் பொல்லு அவனோடு கோபப்பட்டது. ஜீப்பில் ஏற்றி ஸ்டேஷன் கூட்டிப்போனார்.

ரெயில் மீண்டும் கொண்டு வரப் பட்டது. பாக்கியம் எந்தச் சலனமுமில்லாமல் தனதிருக்கையில் அமர்ந்தாள். அவளுக்கு எல்லாம் விளங்கிவிட்டது.

"அம்மா... அம்மா..." அவள் வயதை ஒத்த சிங்களப் பொண்ணொருத்தி அருகில் வந்தாள்.

"அம்மா நானும் இந்தப் பெட்டியில் தான் இருந்தேன். உங்களில் சந்தேகமெண்டா எனக்கு வரவேஇல்லை." ஆதர வோடு பேசினாள். தன்னிடமிருந்த சுடுதண்ணிப் போத்தல் திறந்து சூடான கோப்பியும் வைத்திருந்த பணிஸும் கொடுத்தாள்.

"குடியுங்கோ! நல்லாப் பயந்து போயிருப்பீங்க" பாக்கியம் சிரித்தாள். தனது துவாயால் முகத்தை அழுத்தித் துடைத்தாள்.

ரயில் ஒன்றரை மணி நேர தாமதத்தின் பின் தனது பயணத்தை ஆரம்பித்தது.



படிப்பகம்

www.padippakam.com

**அன்று மனைவியிடம் புன்னகையுடன் பேசினான். புதிதாகப் பேசினான்.**

கரீமா றாஹில்

# இன்னுமொரு சுவாசம்

இதயம்-
இதமானது
இறுக்கமானது
மென்மையானது
வன்மையானது
புதுமையானது
புனிதமானது
நெகிழ்வானது என்பதெல்லாம் அனுபவம் அவனுக்கு கற்றுக் கொடுத்த பாடங்கள். அவனின் இரண்டு வாழ்க்கை இருண்டு போனது.

அப்துல் ரகுமான்- ராசிதா.

குழந்தைகள் இரண்டும் மரித்துப்போனதனால் அவனின் இதயம் எரிந்துதான் கிடந்தது. அந்த சோகத்தில் விழுந்த அவன் எழுந்திருக்க நீண்ட காலம் தேவைப்பட்டது.

"இன்னுமொரு குழந்த வேணும்!"

"......."

"புள்ளகளக்காணும் போது..."

"......."

மனைவியின் விண்ணப்பம்.

அவனால் நிராகரிக்கவும் முடியவில்லை.

நிறைவேற்றவும் முடியவில்லை. "நீ... கஸ்டப்படுறத என்னால தாங்க முடியல்ல!" இரண்டு குழந்தைகளுக்காக அவள் மரணத்தின் மடிவரை சென்று வந்தவள். மீண்டும் அந்த விஷப்பரீட்சைக்கு அவன் தயாரில்லை.

"நானென்ன மலடியா? இல்ல நீங்கதான் மலடா? இல்லயே!"

"இன்னும் ஒருதரம் நான் செத்துப் புறக்க விரும்பல்ல."

"கஸ்டம் எல்லாம் எனக்குத்தானே?"

"சுமக்கிறவளும் பெத்தெடுக்கிறவளும் நீதான். ஆனா... நான் இதயமில்லாதவனில்லையே!"

மனைவியின் மீதுள்ள அன்பைக் கொட்டிக்காட்டினான்.

"கண்ணீர் வாழ்க்க எனக்கு வேணாம்"

இந்த வார்த்தையைக் கேட்டுத்தான் அவன் பயந்தான். தற்கொலை செய்து விடுவாளோ என்ற அச்சம் அவனின் உள்ளத்தில் முதன் முதலாக எழுந்தது.

"எனக்கு மட்டும் ஆசயில்லையா...?"

"......"

"என்ர இதயம் இறந்து போச்சி ஆனா.. நான் வாழ்றது உனக்காகத்தானே!"

"........"

அவள் பிடிவாதமாக இருந்தாள். ஒரு முடிவாகவே மாறியிருந்தாள்.

இதயம் இறுக்கமானது அதுவன்மையானது. இதுபோல இன்னுமொரு சோகம் இனிவேண்டாம் என்ற முடிவில் அவன் குடி கொண்டிருந்தான். பெண்மை என்றும் மென்மைதான்.

அதனால்தான் அவனின் மனைவி மீண்டும் ஒரு குழந்தைக்கு ஆசைப்பட்டாள்.

அவளின் அந்த ஆசை அவனின் இதயத்தில் ஒலித்தபோதுதான் அவன் விழித்துக் கொண்டான்.

அவள் இறந்து வாழ்வதும், அவன் குழந்தை ஆசையைத் துறந்து வாழ்வதும் மீள் பரிசீலனைக்கு வந்தது.

"இதுபோல ரண்டும் தவறி மூண்டாவது சரி வந்திருக்கு..."

"........."

அவன் பேசவில்லை.

அவள் சொல்வதும் சரிதான். அவனுக்கு மிகவும் நெருக்கமான மனோகரன் சேருக்கு இது போல நடந்து மூன்றாவது சரி வந்தது உண்மைதான் ஒன்று, நிம்மதி வேண்டும். அந்த நிம்மதிக்குத் தேவையானது வேண்டும் ஏற்கனவே அவர்கள் அவனிடம் சொன்னவைகள் ஞாபகத்திற்கு வந்தன. அவர்கள் குறிப்பிட்ட வைத்தியரை நாடினான். இதற்கு முன் நடந்த அனைத்து வைத்தியக்குறிப்புக்களையும் வைத்தியரிடம் சமர்ப்பித்தான்.

மீண்டும்
கருத்தரிப்பு
ஆலோசனை.
கவனிப்பும் பாதுகாப்பும்.

அவனுக்கு இதயம் மிக வேகமாக வலித்தது.

இறைவன் மீது பாரத்தைச் சுமத்தினான். குழந்தை கிடைக்கும் வரை அவன் அவனாக இல்லை. அவனின் இதயம் அவனுக்கே அந்நியதாகத் தோன்றியது.

ஆனால்;

மனைவி எதிர்மாறாக இருந்தாள்.

சிரித்தாள் அழகாகப் பேசினாள், குர் ஆன் ஓதினாள், இறைவனை மிகுதியாக நேசித்தாள்.

வணங்கினாள்.

✣ ♣ ✣

அவள் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இன்றோடு ஐந்து நாட்கள்.

அன்று வியாழக்கிழமை பகல் 12 மணி.

அவன் பிரசவ வாட்டுக்குச் சென்றான்.

அந்தக் கட்டிலில் மனைவி இல்லை. அவனின் இதயம் கொஞ்சம் நின்று இயங்கியது. பக்கத்துக்கட்டில் அவனிடம் ஒரு காகிதத்தை நீட்டியது. லேப றூமில் இருப்பதாகவும், குழந்தைகிடைத்திருந்தால் பெயர்ப் பலகையில் பெயர் எழுதப்பட்டிருக்குமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பெயர்ப்பலகையை நோக்கி ஓடினான்.

அதில் பெயர் எழுதப்பட்டிருந்தது.

தாயையும் குழந்தையினையும் பார்க்கும் ஆவல். ஆனால் இருவரையும் பார்க்க முடியவில்லை.

ஆணா? பெண்ணா? இதுவல்ல அவனுக்கு முக்கியம்.

ஆரோக்கியமான குழந்தை.

அது கிடைத்தால் உடைந்து சிதறிக் கிடக்கும் அவனின் எதிர்காலம் ஒன்றாகி ஒளியாகிவீசும். அப்போது ஸ்ட்ரெச்சரில் இரு வரையும் வைத்துத் தள்ளிக்கொண்டுவந்தார்கள்.

15 நிமிடங்கள் சென்றிருக்கும்.

கட்டிலை நோக்கி ஓடினான்.

"என்ன புள்ள சொல்லுங்க...?"

"பொம்புளப் புள்ள..."

அவன் சொன்னது சரியாக இருந்தது. அதேபோல மனைவி சொன்னதும் சரியாக இருந்தது. மூன்றாவது சரி வரும் என்பது! ஏற்கனவே இறந்துபோன அவனின் இரண்டு குழந்தைகளும் கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு பின்னர் இறந்தன.

"பேரு செலக் பண்ணி வெச்சிருக்கீங்களா?"

"இல்ல... இனித்தான்..."

அவனுக்கு இனி இருள் இல்லை.

இதயம் இறுக்கமில்லை. வன்மை இல்லை. உள்ளத்தில் உள்ள அன்பை எல்லாம் சேர்த்து வைத்துக் கொட்டினால் மழையும் ஈடு கொடுக்காது.

அன்று மனைவியிடம் புதிதாகப் பேசினான். புதியவனாகப் பேசினான். புன்னகை கலந்து பேசினான்.

"நாளைக்கே ரிக்கட் வெட்டுவாங்க.. நல்ல பேராப் பாத்து..."

அவன் சென்றுவிட்டான்.

இதயம் நிரம்பிக்கிடக்கும் உணர்வு சாப்பிட முடியவில்லை. தூங்க முடியவில்லை. குழந்தையைப் பற்றிய நினைவு. மனைவியின் சந்தோசத்தைப் பற்றிய நினைவு. எழுந்தான். இதயத்தைத் திறந்தான். அப்படியே அவனின் இதயம் காகிதத்தில் வடிந்து கொண்டிருந்தது.

***'வெண் மேகம்***
***பஞ்சு மேனியில் கலந்து***
***தாமரை இதழ்களால் செய்த மழலையே***
***உன்***
***தரிசனத் தென்றல்பட்டு***
***நான்***
***தலைநிமிர்ந்து நிற்கிறேன்'.***



# மரியா

களுவாஞ்சிக்குடி யோகன் சுவிஸ்

சுவிசில் மிகப்பழமையான தேவாலயம்; உள்ளே பூஜை தொடங்கியிருந்தது. அத்தனை வெள்ளைத் தலைகளுக்கிடையிலும் ஒன்றிரண்டு கறுப்புத்தலைகள். அதிலொருவன் வின்சென். ஆண்டவரை ஆழமாக வேண்டிக் கொண்டிருந்தான்.

இடையில் 'ஃபாதர்' அறிவித்தார்.

"இறந்துபோன மரியாவின் ஆத்ம சாந்திக்காக நாமெல்லாம் இரண்டு நிமிடம் இறைவனை இறைஞ்சுவோம்."

'என்ன? மரியா இறந்துவிட்டாளா?' வின்சென் தடுமாறிப்போனான். அவனால் நம்ப முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. 'ஆண்டவரே அப்படியெதுவும் நடந்திருக்கக்கூடாது' என அவன் மனதிற்குள் ஒரு பிரார்த்தனை.

***மரியாவைத் தேடிப்போனான். இரண்டாவது மாடியில் ஒரு வீடு பார்த்து வைத்திருந்தாள். சிறீலங்கனுக்கு வீடுகொடுக்க வீட்டுச் சொந்தக்காரன் விரும்பவில்லை.***



சுவிஸ் மக்களிடமிருந்து மரியா சற்று வித்தியாசமானவள். பெரும்பாலும் நிறத்துவேஷம், இனத்துவேஷம் பார்ப்பவர் மத்தியில் இவள் மனிதனை மனிதனாக மதிப்பவள் அல்லவா? அந்த மரியாவா மரித்துப் போனாள்? அவனைப் பொறுத்தவரை ஆதரவற்ற அன்னிய நாட்டில் அவனைத் தனது மகனைப் போல பார்த்த மனித தெய்வம் அவள்.

அந்த மரியாவை அவன் முதன் முதலில் சந்தித்ததே ஒரு விபத்தில்தான்! அது ஒரு கிராமப்புறச் சந்தி. அந்த நெரிசலான சந்தியைக் கடப்பதற்காக தெரு ஓரத்தில் நின்றான் வின்சென். அடுத்த பக்கத்தால் ஒரு கிழவி வந்துகொண்டிருந்தாள்.

அவள் அவசரமாக அந்தச் சாலையைக் கடக்க தேவை ஏற்பட்டிருக்க வேண்டும். அவள் கடக்கும் போது மறைமுகப் பக்கத்திலிருந்து திடீரென நுழைந்தது ஒரு கார். நிமிடத்திற்குள் அவளை மோத எத்தனித்தது. அவளால் ஊன்றுகோலுடன் நிச்சயமாகத் தப்ப முடியாது. ஏதோ வெறியுடன் பாய்ந்துவிட்டான் வின்சென்.

கணப்பொழுதில் அவளைத் தள்ளி அடுத்த பக்கத்தில் விழுத்தினான். தடுமாறி எழுந்த கிழவி உச்சக் கட்ட உணர்ச்சிகளுடன் "நன்றி மகனே" என்றாள்.

தனது கைப்பையிலிருந்து ஒரு நோட்டை எடுத்துக் கொடுத்தாள். அவன் மறுத்துவிட்டான்.

"எனது உயிரைக் காப்பாற்றியிருக்கிறாய். கட்டாயம் வாங்கிக்கொள்!" என்று வற்புறுத்தினாள். "இப்படியான உதவிகளுக்கு நாங்கள் பணம் வாங்குவதில்லை." வின்சன் பெருமையடித்தான். "உனக்கு ஏதாவது செய்யாவிட்டால் என் ஆத்மா திருப்திப்படாது! எது வேண்டுமானாலும் கேள் மகனே!" என்றாள் அவள்.

தேவையொன்று இருந்தும் வின்சென் யோசித்தான். அவனுக்குக் கேட்கத் தயக்கம். இருந்தும் கேட்டுத்தான் பார்ப்போமே! என்ற ரீதியில் "எனக்கு ஒரு வீடு வாடகைக்கு வேணும். அதுவும் இந்தமாதமே வேணும்.. உங்களால் முடியுமா?" பணிவாகக் கேட்டான்.

மெதுவாகப் புன்னகைத்தாள் அந்த ஐம்பத்தைந்து வயதுக் கிழவி. "விசிற்றிங் காட்டை" எடுத்துக் கொடுத்து "என்னை வந்து பார்." சொல்லி விட்டுப் போனாள். விலாசத்தைப் பார்த்தான். மரியா என்ற பெயருடன், அவனது ஊருக்கு அடுத்த நகர் அச்சிடப்பட்டிருந்தது.

சொன்னபடி மரியாவைத்தேடி வின்சென் போனான். தான் குடியிருக்கும் வீட்டின் இரண்டாவது மாடியில் அவள் ஒரு வீடு பார்த்து வைத்திருந்தாள். வீட்டுச் சொந்தக்காரி ஸ்ரீலங்கனுக்கு வாடகைக்கு விட விரும்பவில்லை. மரியா பலமாகச் சிபார்சு செய்தாள். வீட்டுக்காரி மனம் இளகியது. வின்சென் சந்தோஷமாகி மரியாவிற்கு நன்றி சொன்னான். அடுத்த மாதமே புது வீட்டிற்கு குடிபோய் விட்டான் அவன்.

அந்தச் சனிக்கிழமை. அவனுடைய சினேகிதனுக்குப் பிறந்தநாள். அவனுடைய புது வீட்டிலேயே கொண்டாட்டம் நிகழ்ந்தது. மிக எளிமையாகப் பத்து சினேகிதர்கள் வரை கூடியிருந்தனர். 'றிங்ஸ்' கொஞ்சம் ஓவராகிப் போக கதைகளும், பாடல்களும் சத்தமாக எழத்தொடங்கியது. கீழ் வீட்டுக்காரர் வீட்டுச் சொந்தக்காரிக்கு அறிவித்திருக்க வேண்டும். அவள் மரியாவிற்கு முறையிட்டிருக்கிறாள்.

கணீர் என்ற ஒலியுடன் வின்செனின் அழைப்பு மணி. கதவைத் திறந்தான். வீட்டுச் சொந்தக்காரி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க மரியாவுடன் நின்றிருந்தாள்.

அப்போது சினேகிதர்கள் "ஹப்பி பேர்த்டே" பாடத் தொடங்கியிருந்தனர். றூமை எட்டிப்பார்த்த மரியா "பிறந்தநாள் கொண்டாடுகிறீர்களா?" சாந்தமாகக் கேட்டாள். ஆம் என்றான் வின்சென் அப்பாவியாக. எதுவுமே கதைக்கவில்லை. இருவரும் திரும்பிப் போய்விட்டார்கள்.

பத்து நிமிடம் கழித்து மரியா பூச்செண்டுடன் அவனின் றூமிற்கு வந்தாள். பிறந்தநாள் நாயகனுக்கு பூச்செண்டு கொடுத்து வாழ்த்தினாள். வின்சென் அவளுக்கு தேநீர் கொடுத்து உபசரித்தான். அவனின் நண்பர்கள் ஒவ்வொருவரையும் பேட்டி காண்பது போல் அக்கறையாக விசாரித்தாள் மரியா.

"உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இத்தனை சோகங்களா? அந்தச் சிறிய நாட்டில் இந்தளவு பிரச்சனையா?" என்று ஆச்சரியமாகக் கேட்டு உண்மையாக மனம் வருந்தினாள் அவள்.

அவர்கள் சொன்ன நாட்டு நடப்புக்கள் அவளின் மனதைப் பாதித்திருந்தது. அதன் பிறகு மரியா வின்செனின் றூமிற்கு வரத் தொடங்கினாள். அவளது தோட்டத்தில் விளையும் அப்பிள், தக்காளி, கோதுமை எல்லாம் அவனுக்குக் கொடுப்பாள். ஒரு முறை வின்செனுக்குப் 'பார்சல்' வந்த போது தேயிலையும் 'பற்றிக்' துணியும் அவளுக்கு அன்பளிப்புச் செய்தான். இப்படியாக இருவருக்குள்ளும் ஒரு நெருக்கம், பாசம் உருவாகத் தொடங்கியது.

மரியா வின்செனை தான் பெற்ற மகனைப் போல கருதுவாள். சில சமயத்தில் அவன் வேலை முடிந்து அலுப்புடன் வந்தால் சமைக்காமல் படுத்துவிடுவான். மரியா வந்தால் "சாப்பிட்டாயா?" என்று சமையலறையைப் பார்ப்பாள். "இரு வருகிறேன்" என்றுபோய் 'சான்வீச்சும், சலட்டும்' கொண்டுவந்து சாப்பிடப் பண்ணுவாள்.

அவனுக்கு மட்டுமல்ல அவனுடைய சினேகிதர்களுக்கும் உதவிகள் செய்ய அவள் தவறுவதில்லை. ஒரு தடவை தாஸ் 'லைசென்ஸ்' இல்லாமல் கார் ஓடியபோது பொலிசிடம் அகப்பட்டுவிட்டான். பொலிசில் அவனை ஒரு நாள் பூராவும் வைத்திருந்தார்கள். வேறு வழியில்லாமல் வின்சென் மரியாவிடம் தெரியப்படுத்தினான். பொலிசுக்குப் போய் தான் பிணைநின்று தாஸைக் கூட்டி வந்தாள் அந்தத்தாய். அந்த அன்புச் சுரங்கம் இன்று உயிருடன் இல்லையென்றால்...? போனமாதமெல்லாம் அவனுக்கு துக்ககரமான மாதமாக அமைந்திருந்தது.

நாட்டில் தந்தை தவறிய செய்தி வந்திருந்தது. மூன்று நாட்களாக அழுதவாறு றூமிற்குள்ளேயே கிடந்தான். அறிந்துவிட்டாள் மரியா. ஓடிவந்து அவனுக்கு ஆறுதல் சொன்னாள். சிறிலங்கா சாப்பாடு சமைத்து அவனுக்கு ஊட்டினாள். அவன் சாப்பிடாமல் அடம்பிடித்தான்.

"மகனே! நாமெல்லாம் ஆண்டவனின் பிள்ளைகள். அவன் விரும்பியபோது எங்களை அழைப்பதற்கு அவனுக்குச் சகல உரிமையும் உண்டு. உனது அப்பாவைக் கொஞ்சம் முதலில் அழைத்துவிட்டான். அவ்வளவே! நீ சாப்பிடாமல் இருப்பதால் எதுவும் நடக்காது. போ, போய் ஆண்டவரிடம் என் அப்பாவை உன் காலடியில் எடுத்துக் கொள்ளும் என்று பிரார்த்தனை பண்ணு" என்று வின்செனை சாந்தப்படுத்தினாள் மரியா.

மறுநாள் அவனை ஆலயத்திற்கு அழைத்துப்போய், ஃபாதரிடம் சொல்லி அவனுக்கு சமாதானம் உண்டாக பிரார்த்தனை பண்ண வைத்தாள்.

மூன்று நாட்களுக்குள் அந்த உயிர் பிரிந்து, அடக்கம் செய்து சகலதும் முடிந்ததென்றால்? அடுக்குமா இது?

ஒரே தெருவில்- ஏன் ஒரே வீட்டில் அவனுக்கு மேல் மாடியில் இருந்த ஜீவனொன்று இறந்தது தெரியவில்லையென்றால்? என்ன வாழ்க்கை இது? ஒட்டில்லாத ஒரு மட்டமான வாழ்க்கை?

வின்செனின் நெஞ்சினில் தீ மூண்ட வேதனை, அவனுக்கு கண்கள் குளமாகி கண்ணீர் பெருக்கெடுத்தது.

பூஜை முடிந்து சனங்கள் வெளியேறும் போதுதான் அவன் நிகழ்வுக்கு வந்தான். மெதுவாக எழுந்து ஆலயத்தைவிட்டு வெளியேறிக் கடைக்குப் போனான். கைநிறைய மெழுகுவர்த்திகளுடன் மரியாவின் கல்லறைக்கு நடந்து கொண்டிருந்தான் அவன்.

ஷர்மிளா இஸ்மாயில்
- கண்டி -

# என்றால்?

"என்னடா வாழ்க்கையிது? சீ.. உப்பு சப்பில்லாம வெறும் வெறுமனே போகுது வாழ்க்கை!" ரகு அலுத்துக் கொண்டான்.

"ஏன்டா ரகு, என்னடாப்பா என்ன திடீர்னு விரக்தியின் விளிம்பிலே போய் நின்னுட்டே? என்னாச்சு?" நண்பன் விஜய் சிரிப்புடன் கேட்டான்.

"பின்னே? இங்க பாரு விஜய்! நம்ப வாழ்க்கைய எடுத்து ஒரு மேலோட்டமா பார்வையை ஓடவிடு. என்ன இருக்கு? சாப்பிட்றது.. தூங்குறது, வேலைக்குப் போறது.. இத்யாதி.. இப்படின்னே சும்மா ஒரு இயந்திரத் தன்மைப்பா ஒரு த்ரில்லிங்... இல்ல. ஏதாவது ஒரு சுவை தேவை தானே? இல்லியா? வீடும் ஒபீஸும், ஒபீஸும் வீடுமா எனக்கு அலுத்துப் போச்சுடா. எங்கேயாச்சும் போய் கொஞ்ச காலம் வித்தியாசமா வாழ்ந்துட்டு வந்தா என்னான்னு படுது."

விஜய் ஓஹோ என்று சிரித்தான் "என்ன மோப்பா... எங்கேயாவது தலை அடிபட்டிருச்சா உனக்கு? நேற்றுவரை நல்லாத்தானே இருந்த? உனக்கு இப்படி இருக்கிறது அலுப்புன்னா ஒண்ணு செய்..." விஜய் ஆரம்பிக்க ரகு ஆர்வமாய்க் கேட்டான். "சொல். சொல்லுடா.."

விஜய் தொண்டையைக் கனைத்து சரிப்படுத்தினான். ஏதோ பெரிய உபதேசம் பண்ணப் போகிறவன் போல பாவனை. கண்களில் கேலிச் சிரிப்பு இழையோடியது.

"ஒண்ணு.. ஹ்ம்.. ஏதாவது ஒரு விமானத்துல ஏறி பாரசூட் கட்டிக்கிட்டு குதிச்சுப் பாரு. வாழ்க்கை ரொம்ப த்ரில்லிங்கா இருக்கும் இல்ல.. இரண்டு.. யா..யாரையாச்சும்.. கா..கா..காதலிச்சுப் பா..பாரு.. காதல் இல்லாமலே ஒரு வாழ்க்கை யாகுமா? கண்கள் இல்லாமலே ஒரு காட்சி தோன்றுமா? மா..மா.. ஆமா.." விஜய் தன்னிஷ்டத்துக்கு தாராளமாய்ப் பாட ஆரம்பித்தான்.

கைக்கருகிலிருந்த பத்திரிகையை மடித்து விஜயின் தலையில் 'பட்'டென போட்டான் ரகு. "காதலும் கத்தரிக்காயும். போடா. அவனவன் காதலிச்சு கையைச் சுட்டுக்கிட்டு அலையிறதப் பார்த்தா.. நமக்கெதுக்கப்பா இந்த வம்பு? போயும் போயும் உன்கிட்ட போய் புத்திமதி கேட்டேனா? என்னை என் செருப்பாலேயே அடிச்சுக்கிறேன். போ."

"ம்.. சொல்லுவே... ஏன் சொல்ல மாட்டே? நான் யாருமாதிரி தெரியுமா? ஹிந்தி நடிகன் அக்ஷய் குமார் உடல்கட்டு, அனில் கபூர் முக வெட்டு, அமீர்கானின் கண்வெட்டு... சல்மான் கானின் பல்செட்டு, சஞ்சய் தத்தின் முடிவெட்டு... கமலஹாசனின்..."

"அடேய்.. உடனே நிப்பாட்டு.." விஜய் முடிக்க முன் ரகு வெட்டினான். "இன்னும் சொன்னே நிச்சயமா இங்கே ஒரு கொலை விழும். அறுவை தாங்காம நானே கொன்னுட்டு சரணடைஞ்சிடுவேன். பேசாம இருப்பியா? நான் என்னவோ வாழ்க்கை பிடிக்கலைன்னு ஏதோ யோசிச்சிட்டிருந்தேன்னா நீ என்னடான்னா..." ரகு முடிக்க முன்னரே வாசலில் குரல் கேட்டது.

விஜய் பின்தொடர ரகு போய்ப் பார்த்தான். "தொரே.. ஏதாச்சும் இருந்தா குடுங்க.." காலொன்று ஊனம். கைக்கடியிலிருந்த கட்டை ஆதாரமாக-ஒரு கண்ணில் வெள்ளை பூத்து.. உடலெங்கும் தழும்புகளுடன் ஒரு மனிதம். பார்த்தவுடன் மனதுக்குள் சொல்ல முடியாததோர் உணர்வை எழும்பும் தோற்றம். பக்கத்தில்



அவன் மனைவியாயிருக்க வேண்டும். கந்தல் துணியும் சிக்கலான கூந்தலும், கையில் குழந்தையும். ரகுவின் மனது என்னவோ போலாயிற்று. கண்டிருக்கிறான். எத்தனையோ வறுமை பீடித்த மனிதர்களை.. ஆனாலும் இவர்களைப் பார்த்த மாத்திரத்தில் மனதுள் 'ஓ' வென்ற அனுதாப அலை. கதை கேட்டான். சொன்னார்கள்.

எல்லாரையும் போல் நல்லாயிருந்த குடும்பம். யுத்தம் செய்த நாசம். கண்ணிவெடி காலைப் பறித்து கண்ணைப் பறித்து.. பரிதாபமே.. குடும்பத் தலைவனின் ஊனம்.. ஆதரவற்ற குடும்பமே தெருவுக்கு வந்து பின் ஊரைவிட்டு... அகதியாகி.. அனாதைகளாகி...

அவர்களது வார்த்தைகளிலும் கண்களிலும் உண்மையான சோகத்தழும்புகள்- பொய்யில்லை. "ம்ஹ்ம். இப்படியும் இருக்கிறது வாழ்க்கை.. இவர்கள் ஜீவிக்கிறார்கள். ஆண்டவன் என் வாழ்க்கையை எவ்வளவோ இனியதாக்கி தந்திருக்க.. நானோ சும்மா வீணாய் கவலைப் பட்டிருக்கிறேனே.." ரகு யோசித்து விஜயிடம் சொல்ல, அவன் ஆமோதித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## மைவிழி மயக்கம்

திருவது ரசிகன்



செலவுக்கு மிஞ்சிய வரவு.
திரைகடலோடி திரட்டிய செல்வம்.
செல்வம் வந்தவுடன் சிலருக்கு
உள்ளம் பழுதாகிவிடுகிறது.

செல்வம் சிறப்பையும் கொடுக்கும்.
சிலருக்கு செருக்கையும் விதைக்கும்.
வணிகன் அவனுக்கோ
திரண்ட செல்வம் புத்தியை கெடுத்தது.

வீட்டில் கிளியாக இல்லாள் இருப்பினும்;
வெளியேயும் களிப்புக்கு ஒருத்தி தேடினான்.

வாடிக்கையாளருக்கு வாடாத புன்னகை
கைமிருப்புக்கு ஏற்ப களிப்பு தரப்படும்.
பொய்மிருப்பு வாயில் வலம்வரும்.
மைவிழியில் மயக்கம் வெளிப்படும்.

நவரசமும் உண்டு அவளிடம்:
அதில் ஒன்றுகூட இலவசமில்லை!
சிரிப்புக்கு ஒரு விலை, செவ்வாயின்
சுழிப்புக்கு ஒரு விலை!

இலவசம் என்ற பேச்சுக்கு இடமேயில்லை.
பழகும் சரசப் பேச்சுக்கு குறைவேயில்லை.
வணிகன் வழுக்கினான்.
தேன்மலர் என்று தேளில் விழுந்தான்!

தேள் அவன் தோளில் தொற்றியது.
வாள் விழி வீச்சில் அவனை வீழ்த்தியது!

வணிகன் இல்லாளை மறந்தான்.
வாய் சொல்லில் பொய்யாளின்
வணிக உடல் மயக்கத்தில் பறந்தான்!

விளக்கொளியாய் புன்னகை வீசினாள்.
"மாசில்லா நகையாள், மருவில்லா நிலவாள்!"
விட்டில் பூச்சி கட்டில் மயக்கத்தில்
அவள் புன்னகைக்குப் புகழாரம் பூசியது.

"மைவிழி மயக்கம் யாருக்காக?"
தன்வசம் இழந்தவன் வினா தொடுத்தான்.
"மன்மதா உன் மார்புக்காக!"
பொய்யுக்கா பஞ்சம்? பொழிந்தாள்!

மெய் மயங்கினால் பொய்யும் சுகம்.
நெய் ஊற்றினாள்; தீப்பிடித்தான்!

"காய்த்திருக்கும் கனிகள் யாருக்காக?"
"கனிந்திருப்பதெல்லாம் உம் வரவுக்காக!"
காமத் தணல் அள்ளி வீசினாள்.
அனலிடை இட்ட மெழுகுபோலானான்.

"இரு வாழைத் தண்டுகளில்-இந்த
நடமாடும் சொர்க்கம் யாருக்காக?"
"ஒரு வண்டாக வந்து
பெண்டாளும் உந்தன் தேவைக்காக!"

ஒவ்வொரு கேள்விக்கும்
இன்ப ஒத்தடமாய் பதில் சொன்னாள்.

இடை நடுவே ஒரு கேள்வி
இடக்காகக் கேட்டு வைத்தாள்!
"உங்கள் இல்லாள்
எங்கள் கூடலை அறிந்தாள் கூவுவாளோ?"

"பெட்டைக் கோழி கூவி
பொழுதா விடியும்?
நெட்டை மரம் நான்- என்
நிழலில் இருப்பவள் நிமிரவா முடியும்?"

"இல்லாள்மீது ஏனிந்த வெறுப்பு?
நல்லாள்தானே அவள் உமக்கு?"
வேண்டுமென்றே சீண்டினாள்.

சலித்துக்கொண்டான்;
"கரும்பைச் சுவைக்கும் இந்த நேரத்தில்
எறும்புக்கடியாக
எதற்கடி அவள் நினைப்பு?"

"வரும்படி அவள் வந்து
அழைப்பு விடுத்தால் என் செய்வீர்?"
"பிரம்படிதான் பரிசு!" மேலும் பேசவிடாமல்
உதட்டால் உதட்டை உடும்புப்பிடி போட்டான்.
அவளோ உடலைக் கொடுத்தபடி
உள்ளத்தால் வரும்படிக் கணக்குப் பார்த்தாள்

நாட்கள் தேய, செல்வமும் தேய்ந்தது.
வரும்படி குறையத் தொடங்க
தரும்படி கேட்டபோதெல்லாம்
சுகம் கொடுப்பதும் குறைந்தது!

"மைவிழி மோகினி
பாரா முகம் ஏனடி?" என்றான்.
"பையிலே கனம் இல்லையே
வாயிலே மட்டும் அழைப்பெதற்கு?"
அகத்தில் உள்ளதை முதன் முதலாக
உதட்டால் அள்ளிப் போட்டாள்!

முதன் முதலாக அவள்
உண்மை பேசியதும் அப்போதுதான்!

வணிகன் கலங்கினான்.
"கல்லுக்குள் கூட ஈரம் இருக்குமே
உனக்குள் அது துளியும் இல்லையே?"

முல்லை மலர் கொத்தாக பல்வரிசை
முகம் எதிரே காட்டி நகைத்தாள்!
"தொண்டு செய்வது என்
தொழிலல்ல.
உண்டு பணம் என்றால்- எப்போதும்
கண்டும் கலந்தும் கொள்ளலாம்!
மொண்டு குடிக்கும் கள்ளுக்கும்
உண்டுதானே ஒரு விலை!"

அனலிடை இட்ட புழுவானான்.
அவள் ஒரு ஆறுதல் சொன்னாள்:
"இன்று போய் நாளை வாரும்.
மடியிலே கனமிருந்தால் மட்டும்!"

"இன்று போய் நாளை வர- இதென்ன
இராம-இராவண யுத்தமா?"

உள்ளே எழுந்தது சினம்
ஒடிந்து விழுந்தது மனம்.
கல்லாய்ப் போ என்று சபிக்க
மோகினி அகலிகையுமல்ல;
வணிகன் முனிவனுமல்ல!

இப்போதுதான் இல்லாள் ஞாபகம்
எழுகதிர்போல விரிந்து கிளர்ந்தது.
விறு விறுவென்று வீடு சென்றான்.

"வாரும் அத்தான்!
கண்ட சுகம் நலமா?
நானும் இங்கே இருக்கும்
ஞாபகம் வந்ததும் மாயமா?"

இனிய பேச்சா அல்லது
இடக்கான வாய் வீச்சா?
புரியாமல் தவித்தான்.

எட்டி நகர்ந்து நெருங்கினான்.

"நில் அங்கே! நெருங்காதே!"
பாவை துள்ளிப் பாம்பாகச் சீறினாள்.

"மன்னித்துவிடு, மறந்துவிடு
இனி நடப்பதெல்லாம் நலமே!"

"மறக்கலாம்! மன்னிப்பில்லை!
தேள் தாவிய உம் தேகமெல்லாம்
விஷமிருப்பதால்-உம்மை
துறக்கலாம்! தூர விலக்கலாம்!"

"நீக்கிவிடமுன்னர்
நீளமாய் யோசி!"

"நான் என்ன யோசிப்பது?
திருமகளே உம்மை
நீக்கிவைத்துவிட்டாள் தெரியாதோ?"

"தெய்வத்தை அழைத்து
நியாயம் சொல்கிறாய்.
திருமகளுக்கு என்னில்
ஏன் விரோதம்?"

"கள், சூது,
கள்ளமனப் பெண் உறவு
மூன்றும் திருமகளால்
நீக்கப்பட்டவரின் உறவு!
புரியாவிட்டால் திருக்குறள் புரட்டும்!"
கதவை மூடினாள்.
உறவுக்கு முற்றுப்புள்ளி!

குல மகளை வெறுத்தான்
விலை மகளும் வெறுத்தாள்
திருமகளும் விலக்கினாள்.

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திரு நீக்கப்பட்டார் தொடர்பு."
குறள்-920. அதிகாரம்-92.

# சிந்தியா பதில்கள்

* மரபுக்கவிதை- புதுக்கவிதை வித்தியாசம் என்ன?

மீனா சுப்பிரமணியம், உனுகலை எஸ்டேட்.

முன்னது கூண்டுக்கிளி; பின்னது சுதந்திரப் பறவை.

○ ○

* பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் என்று எங்குமே விளம்பரங்களின் ஆக்கிரமிப்பாக இருக்கிறதே. விளம்பரங்களை நம்பலாமா?

இ.புவனேஷ், வவுனியா.

நாம் கொஞ்சம் விழிப்பாயிருப்பதும் நல்லது. ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன்:- பத்திரிகை ஒன்றில் இப்படி ஒரு விளம்பரம் வந்தது:

"20ம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு! பேனாவும், மையும் செலவில்லாமல் எழுத முடியும். எப்படி என்று தெரியவேண்டுமா? எங்கள் கம்பனிக்கு உடனடியாக 5 ரூபா மணியோடருடன் உங்கள் முகவரியை எழுதுங்கள்." அதுதான் விளம்பரம்.

அதனைப் பார்த்துவிட்டு பலபேர் பணம் அனுப்பினார்கள். அந்தக் கம்பனிக்காரர்களுக்கும் நல்ல வருமானம். யாரையும் ஏமாற்றவில்லை. ஒழுங்காகப் பதில் போட்டார்கள். பதில் இதுதான்:

"பென்சிலை உபயோகப்படுத்தவும்."

○ ○

* காதலியுடன் உரிமையுடன் பழகுவது. உண்மையுடன் பழகுவது. இதில் எது சிறந்தது?

எம்.எம்.எம்.ஸாமித், கிண்ணியா-03.

உண்மையுடன் பழகினால் உரிமை தானாக வரும். உரிமையை ஒரு வரையறையோடு உபயோகிப்பது நல்லது.

○ ○

* சச்சின் டெண்டுல்கரின் தலைமைப் பதவி பற்றி சில வரிகள்?

சுப்பையா அந்தனி, பூண்டுலோயா.

சின்னத்தோளில் பெரிய சுமை. தாங்கும் வலிமை உண்டு என்றுதான் நினைக்கிறேன்.



## கங்குலி இரகசிய திருமணம்



இலங்கையில் நடைபெற்றுவரும் சிங்கர் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணிக்காக ஆடி வருகிறார் சவ்ரவ் கங்குலி. கல்கத்தாவைச் சேர்ந்த இவர் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின்போது அடுத்தடுத்து இரண்டு சதங்களை அடித்துச் சாதனை படைத்தவர்.

23 வயதான இந்த இளம் வீரர் தனது பெற்றோர் விருப்பத்தை மீறி நடனமாடும் பெண் ஒருவரைக் கடந்த 11ம் திகதி இரகசியத் திருமணம் செய்துள்ளார். அவர் மணம் முடித்துள்ள பெண்ணின் பெயர் டோனா. இவர் பல்வேறு நாடுகளில் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

## "சோதனையான பந்தயம்"

தற்போது நடைபெற்று வரும் சிங்கர் கோப்பை கிரிக்கெட் மற்றும் கனடா பந்தயம் ஆகியவை கப்டன் டெண்டுல்கர், முன்னாள் கப்டன் அசாருதீன் ஆகியோருக்கு சோதனைகள் மிகுந்த பந்தயமாக இருக்கும் என்று முன்னாள் வீரர் மனோஜ் பிரபாகர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

"டெண்டுல்கர் சர்வதேச கிரிக்கெட்டில் நல்ல அனுபவம் பெற்றவர். அவர் ஏற்கனவே உதவி கப்டனாக நன்கு பணியாற்றி உள்ளார். அவர் நல்ல அணித் தலைவராகத் தன்னை நிலைநாட்டவேண்டி இருக்கிறது. அதே போன்று அசாருதீன் தனது பேட்டிங் திறனை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். இந்திய அணியில் அதிக இளம் வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப் பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளர் டேவிட் ஜோன்சன் சரியான நேரத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்." இவ்வாறு மனோஜ் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

* டியர் சிந்தியா! காலிப்பகுதியில் மாணவர்களுக்கு போதை மருந்து பாவிக்க கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

சி.நாகேந்திரன், கொழும்பு-5.

வேலியே பயிரை மேய்வது நம்நாட்டில் விசித்திரமும் அல்ல; வியப்பும் அல்ல. நான் பொதுவாகத்தான் கூறுகிறேன்.

○ ○

* ஒரு மனிதனின் ஆசை எப்போது பூர்த்தியாகின்றது?

ஏ.எம்.எம்.நியாஸ், மருதமுனை-01.

மரணத்தில்!

○ ○

* டியர் சிந்தியா! இந்திய கிரிக்கெட் வீரர் மனோஜ் பிரபாகர் நிலை என்னவாயிற்று?

க. உதயகுமாரன், மகிழுர்-01.

தற்போதைய இந்திய அணி நல்ல தெரிவு என்று பாராட்டியிருக்கிறார். டெண்டுல்கரைக் கப்டனாக்கியதால் அவரது துடுப்பாட்டத்திறன் பாதிக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார். மனோஜ் பிரபாகர் இப்போதெல்லாம் விமர்சன விளாசலில் ஈடுபட்டிருக்கிறார்.

○ ○

* டியர் சிந்தியா! இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் அமெரிக்கா தலையிட்டால் விளைவு எப்படியிருக்கும்?

ரவிசங்கர், பலகடுவ.

இப்போது மட்டும் என்னவாம்? தலையை விடாமல், வாலைமட்டும் விட்டிருக்கிறது என்று நினைக்கிறீர்களாக்கும்!

* பெண்களுக்கு சார்பான பதில்களையே எப்போதும் சொல்கிறீர்களே! ஆண்களை அடிமைப்படுத்தும் பெண்களும் இருக்கிறார்கள் என்பது உமக்கு தெரியாதா? பெண்களை ஒடுக்கும் ஆண்களை கண்டிக்கிறீர். ஆண்களை ஒடுக்கும் பெண்களைப் பற்றி சொல்ல மாட்டீரோ?

வி. சிறிகாந்தன், மட்டக்களப்பு.

சிறிகாந்தன்! ரொம்பவும் கோபப்படாதீர்கள். உங்கள் ஆசைக்காக ஒரு கதை சொல்கிறேன்: குடும்பஸ்தர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டம் போட்டார்களாம்.

அந்தக்கூட்டத்தின் தலைவர்: "இந்தக் கூட்டத்தில் மனைவிக்குப் பயந்தவர்கள் எத்தனைபேர்? அவர்கள் எல்லாம் கையை தூக்குங்க பார்க்கலாம்," என்றாராம்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எல்லோரும் கையைத் தூக்கிவிட்டார்கள். தலைவருக்கு பெரும் சங்கடமாகப்போய் விட்டது. மனைவிக்குப் பயப்படாத ஒரு ஆள்கூட இல்லையா என்று தேடிப்பார்த்தார் தலைவர். ஒரு ஓரத்தில் ஒருத்தர் மட்டும் கையைத் தூக்காமல் இருந்தார். தலைவருக்கு ஒரே ஆச்சரியம்.

"ஏன், உங்களுக்குப் பயமே இல்லையா?" என்றார் தலைவர். அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

"ஹி.ஹி. என் மனைவியிடம் கேட்காமல் நான் எப்படிக் கையைத் தூக்க முடியும்?"

○ ○

* பொருட்களின் விலை ஏற்றத்தினால் அதிக இலாபம் அடைபவர்கள் யார்?

எஸ்.ஏ.ஜோதி, கொழும்பு-12.

ஐக்கிய தேசியக் கட்சியினர்.

○ ○

* டியர் சிந்தியா! கூட்டுப்படை தளபதி நியமிக்கப்பட்டு யுத்தத்தை அணுகினால் சமாதானம் மலருமா?

வி.குகதாசன், ஜெயந்திபுரம்.

மலரும்; முப்படைகளுக்குள் சமாதானம்! முப்படைகளுக்குள் உள்ள பனிப்போரை நிறுத்துவதும் கூட்டுப்படைத் தளபதியின் பொறுப்புக்களில் ஒன்றுதானே!

○ ○

* நம்நாட்டு ஜனாதிபதி பிறநாடுகளுக்குச் சென்று கடனுதவி பெறுவது பற்றி?

வே. பன்னீர் செல்வம், பலாங்கொடை.

வேறுவழி? ஆனால் வெட்கம்தான்! அரச கட்டுப்பாட்டு செய்தித்துறையினர் அதற்கு வேறு ஒரு பெயர் வைத்துள்ளனர். 'வெற்றிகரமான பயணம்.'

○ ○

* டியர் சிந்தியா! இப்போது கதையெல்லாம் எடுத்து விடுகிறீர்களே? உங்கள் கற்பனையா? எல்லோரையும் குழப்புவது மாதிரி ஒரு கதை சொல்லுங்க பார்க்கலாம்!

செல்வி எம்.மஞ்சுளா, திருக்கோணமலை.

கற்பனையெல்லாம் நமக்கு வராதம்மா. அப்பப்போ அங்கே இங்கே படிச்சும், கேட்டும் மனதில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த சரக்குகள்தான். அதைத்தான் அப்பப்போ எடுத்துவிடுறதுங்க. என்ன கேட்டீங்க? குழப்பமான கதையா?

பல்பொருள் அங்காடிக்குள் போனார் ஒருத்தர். தேவையானதை எடுத்துக் கொண்டு வந்து 'பில்' போடக் கொடுக்கவேண்டும். நம்மாள் என்ன பண்ணினார் தெரியுமோ? ஏதோ ஒரு பொருளை எடுத்து நைசாகப் பாக்கெட்டுக்குள் போட்டுக்கொண்டார்.

அவரைக் கூப்பிட்டு காவலாளி விசாரித்தார். காவலாளியைப் பார்த்து மூன்று கேள்விகளை எடுத்துவிட்டார் நம்மாள்.

"நான் உங்கள் கடைக்குள் புகுந்ததை நீங்கள் பார்த்தீர்களா?" என்றார் நம்மாள்.

"ஆம், பார்த்தேன்!" என்றார் காவலாளி.

"சரி, இதற்கு முன்னர் என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்றார் நம்மாள்.

"இல்லையே!" என்றார் காவலாளி.

"அப்படியென்றால், கடைக்குள் நுழைஞ்சது நான்தான் என்று எப்படித் தெரியும்?" என்றார் நம்மாள்.

காவலாளி தலைமுடியைப் பிய்த்துக் கொண்டார். நம்மாள் மெல்ல நழுவிவிட்டார்.

○ ○



முல்லைத்தீவு முகாம் தாக்குதலின்போது புலிகள் இயக்க அணி ஒன்று மோதலில் ஈடுபட்டுள்ள காட்சி இது. இப்புகைப்படம் புலிகள் இயக்க தகவல் பிரிவினரால் கடந்தவாரம் வெளியிடப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 46

## வாலி-சுக்கிரீவன் வரலாறு

இராமபிரானும் இளைய பெருமாளாகிய இலக்குமணனும் ஒன்றாக இணைந்து சபரி நாச்சியாருக்கு இறுதிக்கிரியைகளைச் செய்து முடித்தனர்.

கம்பநாட்டாழ்வார் அருளிய இராம காதையில் சபரி மோட்சத்துடன் ஆரணிய காண்டம் முற்றுப் பெறுகிறது. ஆனால் வால்மீகி முனிவர் அருளிய காவியத்தில் இராமரும் இலக்குவனும் உருசிய முகம் என்றழைக்கப்படும் இரலை மலையில் அனுமனைக்கண்டு அவர் மூலமாக சுக்கிரீவனையும் அறிமுகம் செய்யும்வரை ஆரணிய காண்டம் நீள்கிறது.

நாம் தமிழ் தந்த பெரும் புலவரான கம்பநாட்டாழ்வாரை இவ்விடத்தில் பின்பற்றுவது பொருந்தும் என எண்ணுகிறோம்.

ஏற்கனவே கபந்தனுடைய சாபவிமோசனத்துக்கு அருள்புரிந்த இராம இலக்குவனை, உருசிய முகம் எனும் மலை சென்று வானர மன்னன் சுக்கிரீவனின் துணையுடன் சீதையைக்காணலாம் என்கிறான், அத்தெய்வலோக வாசி. சபரி நாச்சியாரும் இருவருக்கும் சுக்கிரீவனிடம் செல்லுமாறு அறிவுரை கூறுகிறார். இதனால் இருவரும் தெம்படைகின்றனர். சீதையை விரைவில் கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையில் இருவரும் விரைவாக தமது பயணத்தைத் தொடங்குகின்றனர்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்கைக் காட்சிகளை வர்ணிப்பதில் ஈடிணையற்றவராகத் திகழ்கிறார். இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள ஆறு காண்டங்களிலும் பல்வேறு படலங்கள் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றிலும் இயற்கைக் காட்சிகள் அனேக இடங்களில் தென்படுகின்றன. இத்தகைய இயற்கைக் காட்சிகளை சுவைபட வர்ணிக்கிறார் கம்பர். அவருடைய வார்த்தைக் கோர்வைகள் வர்ண ஜாலங்களாக ஜொலிக்கின்றன.

### கிட்கிந்தா காண்டம்

சபரி மலையைத் தொட்டு சலசலத்தோடும் பம்பை ஆற்றின் எழிலை கிட்கிந்தா காண்டத்தின் தொடக்கத்தில் கம்பநாட்டாழ்வார் வர்ணிக்கும் சிறப்பு தனித்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகிறது. பம்பைப் படலத்தில் மொத்தம் 42 பாடல்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் இயற்கை எழில்தான் படிப்போரைக் கவர்ந்திழுக்கின்றன. பம்பை நதியின் சூழலைக் கண்டு அங்கெல்லாம் தென்படும் அம்சங்கள் அனைத்திலும் சீதையையே இராமர் கண்டு கலக்கமடைகிறார்.

மேற்குறிப்பிட்ட 42 பாடல்களில் 21 பாடல்கள் பம்பை நதியையும் சுற்றுச்சூழலையும் வர்ணிக்க, எஞ்சிய 21 பாடல்களும் இராமர் அங்கே தென்படுவனவற்றுடன் சீதையை ஒப்பிட்டு நோக்குவனவாக அமைந்துள்ளன.

✻ ☆ ★

பம்பையை ஒட்டிய நீர்நிலை ஒன்றில் குவளை மலர்கள் பூத்துக்கிடக்கின்றன. செவ்வாம்பல் மலர்கள், தாமரை மலர்கள் போன்றவையும் நிறைந்து கிடக்கின்றன. வள்ளைக் கொடியுடன் இணைந்த இலைகள், நீர் அலைகள், துள்ளி விளையாடும் கெண்டை மீன்கள், வரால் மீன்கள், ஆமைகள் ஆகியனவும் காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் இராமருக்கு சீதையின் அவயவங்களை நினைவூட்டுகின்றன. அரக்கர்க்கரசனான இராவணன் சீதையை வான் வழியே எடுத்துச் செல்லும் போது அவளை அங்கம் அங்கமாகப் பெயர்த்து அவன் உண்ணும் வேளை, அவளுடைய கண், வாய், முகம், செவி, வயிறு, கால்களின் பகுதிகள் ஆகியவை கீழே விழுந்து கிடக்கின்றனவா என்று இராமர் அந்நீர் நிலையிடம் வினவுவதாக கீழ்வரும் பாடல் அமைந்திருக்கிறது.

**விரிந்த குவளை சேதாம்பல்**
**விரை மென் கமலம் கொடி வள்ளை**
**தரங்கம் கெண்டை வரால் ஆமை**
**என்றித்தகைய தமை நோக்கி**
**மருந்தின் அனையாள் அவயவங்கள்**
**அவை நிற்கண்டேன் வல்லரக்கன்**
**அருந்தி யகல்வான் சிந்தினவோ**
**ஆவி உரைத்தியாம் அன்றே.**

(கிட்கிந்தா காண்டம்-25) -3732-

✪ ★ ☆ ✪

சீதையை நினைந்து மீண்டும் சோகமே உருவாகிவிட்ட இராமரை அணுகிய இலக்குவன் ஆறுதல் சொல்லத் தொடங்கினான்.

### தம்பியின் அறிவுரை

"அண்ணா! அரக்கர் தலைவனான இராவணன் அண்ணியை அதல பாதாளத்திலோ அன்றி தேவலோக வாசியான-தேவர்களின் தாயாகிய- அதிதியின் கர்ப்பத்திலோ அடைத்து வைத்திருந்தாலும் அங்கு சென்று அன்னாரை நாம் மீட்டே தீருவோம். இது உறுதி. நாம் இத்தருணத்தில் மனம் தளரலாகாது. நாம் இழந்துவிட்ட அரும் பொருளை நாம் நிச்சயம் மீண்டும் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வீரர்களாகிய நாம் அதைர்யப்படலாகாது. கவலையை விடுத்து காரியத்தில் ஈடுபட வேண்டும். அண்ணியைத் தேடுவதே நமது முக்கிய கடமை. எழுந்திருங்கள் அண்ணா!" இவ்வாறு இலக்குவன் கூறியதும் இராமர் மனதைத் திடப்படுத்திக்கொண்டார். இருவரும் புறப்பட்டனர்.

உருசியமுக மலைப் பிரதேசத்தில் வில்லேந்திய வீரர்கள் இருவர் நடமாடுவதை, அப்பிரதேசத்தின் அடர்ந்த காடுகளில் வளர்ந்தோங்கிய மரங்களின் கிளைகளிலும் புதர்களிலும் மறைந்திருந்து பல கண்கள் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருந்தன. அவ்வாறு கண்காணித்தவர்கள் வானரர்கள். அவர்களில் பலருக்கு பெரும் பயம் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் ஓடோடிச் சென்று, ஒரு பெரும் மலைக் குகையினுள் அமர்ந்திருந்த அவர்களின் தலைவரிடம், அங்கு புதிதாக நடமாடும் மாநிடர்கள் இருவரைப்பற்றியும் முறையிட்டனர்.



### அச்சம் கொண்ட சுக்கிரீவன்

குகையினுள் இருந்தவர் வானரர்களின் அரசரான சுக்கிரீவன். கண்காணிப்புக் காவலர்கள் கூறிய செய்தியால் மனமுடைந்துபோனார். தன்னையும் தன் குடிகளையும் அடியோடு முடிவுகட்டுவதற்காகவே அந்த இரு வீரர்களும் வந்துவிட்டனர் என்று சுக்கிரீவன் அச்சமுற்றார். உடனடியாக தனக்கு நெருக்கமான வானரர்கள் அனைவரையும் அவசரமாக அழைத்து மந்திராலோசனையிலீடுபட்டார்.

✻✻✻

வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவரும் சகோதரர்கள். அண்ணன் வாலி மிகவும் தைரியசாலி. வீரம் மிக்கவன். சிவபிரானிடத்தில் பக்தி பூண்டவன். பல அரிய வரங்களையும் பெற்றிருந்தான்.

கிட்கிந்தை இராச்சியத்தை வாலி ஆண்டு வந்தபோதிலும் தம்பி சுக்கிரீவனுக்கு இளவரசுக்குரிய அந்தஸ்தினை அளித்திருந்தான். இருவரும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வந்தனர். இவர்கள் மீது பொறாமை கொண்ட மாயாவி எனும் அரக்கன் கிட்கிந்தை வந்து வாலியை வலுச்சண்டைக்கிழுத்தான். ஆனால் வாலியின் போராற்றலுக்கு முன்னால் மாயாவியால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பின்வாங்கி ஓடி ஒரு மலைக்குகைக்குள் ஒளிந்துக்கொண்டான்.

மாயாவியை அழித்தேயாக வேண்டும் என்ற நோக்குடன் வாலி அக்குகைக்குள் நுழைந்தான். சுக்கிரீவனை குகையின் வாயிலில் நிறுத்தி, மாயாவி தப்பிவிடாமல் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு வாலி அக்குகையினுள் சென்றான். நாட்கள் பல கடந்தும் வாலி திரும்பவில்லை. இருவரும் குகைக்குள்ளேயே போரிட்டு மாண்டு விட்டனரோ என்று வானரர்கள் கருதினர். அரசனில்லாது ஒரு நாடு இருப்பது ஆபத்து என்று கருதிய வானரக்குடியானவர்கள் சுக்கிரீவனை அரசனாக முடிசூடும்படி வற்புறுத்தினர். ஆனால் சுக்கிரீவன் உடனடியாக ஒப்புக்கொள்ளவில்லை. குடியானவர்கள் தொடர்ந்து நச்சரித்தமையினால் நாடு திரும்பி அரியணையில் ஏறினான் சுக்கிரீவன்.

### இராஜகாரன்

### வாலியின் கோபம்

மேலும் சில நாட்கள் சென்றதும் வாலி உயிருடன் திரும்பி வந்தான். தனது தம்பி ஆட்சிபாரம் ஏற்றிருப்பதை அறிந்ததும் அடங்காத ஆத்திரமடைந்தான். சுக்கிரீவன் ஓடோடி வந்து அண்ணன் தாள் பணிந்து உண்மையினை எடுத்துரைத்து மன்னிப்புக் கோரியும் வாலியின் கோபம் அடங்கவில்லை. சுக்கிரீவனை அடித்து உதைத்து இம்சைப் படுத்தினான். தன் உயிரைக் காத்துக் கொள்ள சுக்கிரீவன் ஓடி ஒளிய வேண்டியதாயிற்று. இறுதியாக உருசிய முகம் எனும் மலையினை அடைந்தான். வாலிக்கு ஏற்கனவே உள்ள ஒரு சாபத்தின் படி அவன் உருசிய முகம் மலை எல்லைக்குள் வர முடியாது. ஆகவே சுக்கிரீவன் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான குடிகளுடன் பாதுகாப்பாக அம்மலையில் இருந்தான்.

வாலி, சுக்கிரீவனின் மனைவியான உருமை என்பவளையும் தனது தாரமாக்கிக் கொண்டான்.

வில்லேந்திய வீரர்கள் இருவர் உருசிய முகப் பிரதேசத்தில் நடமாடுவதை அறிந்து, தானாக இம்மலைக்கு வர முடியாதிருப்பதனால், தன்னைக் கொல்வதற்கு அண்ணன் வாலி தன்னுடைய சத்திரிய நண்பர்கள் இருவரை ஏவிவிட்டிருக்கலாம் என்று தான் அஞ்சினான் சுக்கிரீவன்.

சுக்கிரீவனின் முதல் மந்திரியான வாயுபுத்திரன் அனுமன் இக்கட்டத்தில்தான் சுக்கிரீவனிடம் வருகிறார். அனுமனைக் கண்டதும் சுக்கிரீவன் ஓடி வந்து ஆரத் தழுவி தனது இக்கட்டான நிலையினைக் கூறி அழுது புரண்டான். எதற்குமே கலங்காத-களங்கமற்ற இதயம் படைத்த அஞ்சா நெஞ்சன் ஆஞ்சனேயர் சுக்கிரீவனைத் தேற்றி, எத்தகைய துயர்வரினும் அதனைத் தடுக்கும் பொறுப்புத் தன்னுடையதென வாக்குறுதி அளித்தார்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 44**

**சரியானவிடை:- அயோமுகி**

1. செல்வன். க. திபாரதன்.
60/12, பாரதி ஒழுங்கை, மட்டக்களப்பு.
2. பொ. தங்கேஸ்வரி.
மாருகொன, உக்குவலை.
3. கே. சிவா.
09, புதிய பஸ் நிலையம், வவுனியா.
4. ஆர். கிருஷ்ணன்.
53, ரஜமல்வத்த வீதி, கொழும்பு-15.
5. எம். மொஹிதீன் பாத்திமா முரிலிதா. 14/1 ஹிஜ்ரா கொலனி,வரக்காமுற, உக்குவல.

**போட்டி இல. 46** கேள்வி:- வாலி ஆட்சிபுரிந்த நாட்டின் பெயர் என்ன?

செப்டம்பர்.07 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.46, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# காதில பூ கந்தசாமி

## எம்.ஜி.ஆர் ஆவி திடீர் விஜயம்

மேசையில் ஒரு வெள்ளி டம்ளர். உள்ளே சூடாக தேநீர். ஆவி பறக்கிறது. காதிலை பூ கந்தசாமியார் ஏதோ ஒரு நாவல் படித்துக்கொண்டிருக்கிறார். அப்போது... தேநீர் கோப்பை தானாக ஆடத் தொடங்குகிறது. காதிலை பூ கந்தசாமியர் வெல வெலத்துப் போகிறார். தேநீர் கோப்பையில் இருந்து புறப்பட்ட ஆவி மெல்ல, மெல்ல பெரிதாகி, மிகப் பெரிதாகி.. அது... அது... காதிலை பூ கந்தசாமியார் ஓடிவிடலாமா என்று யோசிப்பதற்கு இடையில், ஆவி உசாராகிவிடுகிறது.

ஆவிபாடத்தொடங்குகிறது.

மூன்றெழுத்தில்-என்
– மூச்சிருக்கும்! அது
முடிந்தபின்னாலும்
– பேச்சிருக்கும்!
உள்ளம் என்றொரு
– ஊரிருக்கும்! அந்த
ஊருக்குள் எனக்கொரு
– பேரிருக்கும்!

காதிலை பூ கந்தசாமியார் புல்லரித்துப் போகிறார். வந்திருப்பது எம்.ஜி.ஆரின் ஆவியல்லவா. விடுவாரா, பேப்பர் தேடி எடுத்து, பேனாவை உருவிக்கொண்டு பேட்டிக்கு தயாராகிவிட்டார்.

எம்.ஜி.ஆர்:- இரத்தத்தின் இரத்தமே! இனம் கண்டு கொண்டாயா?

கா.பூ.க:- புரட்சித்தலைவரே! திரையில் உங்கள் முகம் கண்டால் முன்வரிசையில் இருந்து விசில் அடித்து விசில் அடித்தே விழிதிறந்து ரசித்த பரம ரசிகன் நான். நேரில் நீங்கள் வந்ததும், எனக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இந்த ஏழையின் முன் பொன்மனச் செம்மல் தோன்றினார் என்றால் எவர்தான் நம்புவர்?

எம்.ஜி.ஆர்:- ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் அண்ணா. என் ரசிகன் என்கிறாய். உனக்கா தெரியாது.

கா.பூ.க:- பணக்காரன் சிரிப்பில் பல கோடிகளை காண்கிறார்களே சிலர். அவர்களும் உங்கள் பெயரைத்தான் சொல்கிறார்கள்.

எம்.ஜி.ஆர்:- நீ யாரைச் சொல்கிறாய் என்று தெரிகிறது தம்பி. என் முன்னாள் கொள்கை பரப்புச் செயலாளரைத்தானே சொல்கிறாய்?

கா.பூ.க:- நீங்கள் இருந்தவரைதான் கொள்கை பரப்புச் செயலாளர். பின்னர் அவர் கொள்ளை பரப்பு செயலாளராக மாறிவிட்டார்.

எம்.ஜி.ஆர்:- முன்பு ஏசு வந்தார். பின்பு காந்தி வந்தார். இந்த மானிடர் திருந்திடப் பிறந்தார். ஜெயா திருந்தவில்லை. மனம் வருந்தவில்லை. சசியின் மயக்கத்தில் கிடந்தார். பதவி சுகத்திலே மிதந்தார். பணம் திரட்டிக் கொண்டார். பவுண் குவித்துக் கொண்டார். ஊழல் கடலிலே விழுந்தார்.

கா.பூ.க:- உங்கள் கட்சிதானே தோற்றும் போனது.

எம்.ஜி.ஆர்:- தோற்றது நானல்ல தம்பி. நான் சொன்னதை இரத்தத்தின் இரத்தங்கள் மறக்கவில்லை. அதுதான் தண்டனை கொடுத்துவிட்டார்கள்.

கா.பூ.க:- எதை மறக்கவில்லை என்கிறீர்கள் தலைவரே?

எம்.ஜி.ஆர்:- ஒரு தவறு செய்தால், அதை தெரிந்து செய்தால்-அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன். ஜெயா தெரிந்தே செய்தார். அதையும் தெரியவே செய்தார். தண்டிக்கப்பட்டார்.

கா.பூ.க:- பதவி கொடுத்தவர் நீங்கள் தானே.

எம்.ஜி.ஆர்:-
கொடுத்ததெல்லாம் கொடுத்தேன்
யாருக்காக கொடுத்தேன்.
ஒருத்தருக்கா கொடுத்தேன்-இல்லை
கட்சிக்காக கொடுத்தேன்.
ஜெயாவுக்குப் பாதி-சசிக்குப் பாதி
ஒரு போதும் நான் கொடுத்ததில்லை.

கா.பூ.க:- புரட்சித் தலைவரே! வளர்ப்பு மகன் திருமணம் நடத்தினாரே ஜெயா. நீங்களும் ஆவியாகச் சென்று வாழ்த்தினீர்களா?

எம்.ஜி.ஆர்:- வாழ்த்தவில்லை. வசைபாடினேன்.

கா.பூ.க:- என்ன பாட்டுத் தலைவா.

எம்.ஜி.ஆர்:-
பொய்யான சிலபேர்க்குப் புதுநாகரீகம்.
'புரியாத பல பேர்க்கு
இது நாகரீகம்.
முறையாக வாழ்வோர்க்கு
எது நாகரீகம்?
முன்னோர்கள் சொன்னார்கள்
அது நாகரீகம்!

கா.பூ.க:- யார் சொல்லியும் கேட்கவில்லை. தேர்தலில் தோற்றபின்பும் திருந்தவில்லை. ஜெயா-சசி கூட்டணி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எம்.ஜி.ஆர்:-
திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்?
வருந்தாத உள்ளங்கள்
பிறந்தென்ன லாபம்?

கா.பூ.க:- உங்களோடு பத்மினி நடிச்சார், பானுமதி நடிச்சார். சரோஜாதேவி நடிச்சார். சௌகார் ஜானகியும் நாடிச்சார். ஜெயா மட்டும்தானே உங்கள் மனதில் இடம்பிடித்தார். "முத்துச் சிரிப்பால், முல்லை விரிப்பால் மொழி இனிப்பால் என்னை இழந்தேன்" என்று பாடினீர்கள் தலைவா? இப்போது எப்படிப் பாடுவீர்கள்?

எம்.ஜி.ஆர்:-
நீ பார்த்த பார்வைகள் கனவோடு போகும்
நீ சொன்ன வார்த்தைகள்
காற்றோடு போகும்.
ஊர்பார்த்த உண்மைகள்
உனக்காக வாழும்.

கா.பூ.க:- தனிமையில் கிடந்து, சசியையும் பிரிந்து, பதவியும் இழந்து வாடுகிறாரே ஜெயா. பரிதாபமாக இல்லையா?

எம்.ஜி.ஆர்:- (மூக்கை ஒரு உறிஞ்சு உறிஞ்சிவிட்டு)
தவறு என்பது தவறிச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது
தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும்,
தப்பைச் செய்தவர் வருந்தியாகணும்!

கா.பூ.க:- பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம் என்கிறீர்கள். அவர்கள் ஊரை வாங்கி உங்கள் பெயரைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர்:-மக்கள் என்ன சொல்லுறாங்க தெரியுமா?
பொய்யும் புரட்டும் துணையாய்க் கொண்டு பிழைத்தவரெல்லாம் போனாங்க.
மூலைக்கு மூலை தூக்கியெறிஞ்சோம்
தலைகுனிவாக ஆனாங்க' என்று என் படப் பாடலை மறக்காமல் பாடுறாங்க.

கா.பூ.க:- அம்மாவின் காலில் விழுந்த அமைச்சர்கள் எல்லாம் இப்போது கட்சி மாறிவிட்டு, எச்சில் வார்த்தைகளை துப்புகிறார்களே.

எம்.ஜி.ஆர்:-
சிலர், ஆசைக்கும், தேவைக்கும்
வாழ்வுக்கும், வசதிக்கும்
ஊரார் கால் பிடிப்பார்.
ஒரு-
மானமில்லை-அதில்
ஈனமில்லை-அவர்
எப்போதும் வால் பிடிப்பார்."

கா.பூ.க:- உங்கள் நாப்பதாண்டுகால நண்பர் கலைஞர் பதவிக்கு வந்துவிட்டாரே. அவருக்கு உங்கள் ஆலோசனை என்ன தலைவா?

எம்.ஜி.ஆர்:-
பதவி வரும்போது பணிவு வரவேண்டும்;
துணிவும் வரவேண்டும் தோழா?
பாதை தவறாமல்
பண்பு குறையாமல்
பழகிவரவேண்டும் தோழா!



கா.பூ.க:- இலங்கையில் உள்ள உங்கள் இரத்தத்தின் இரத்தங்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

எம்.ஜி.ஆர்:- நல்வர்களாக மட்டும் இருந்தால் போதாது. வல்லவர்களாகவும் இருக்கவேண்டும்.
சேவல் கூடத் தூங்கும் உலகைக்
கூவியெழுப்பும் குரலாலே!
ஏவல் செய்யும், காவல் காக்கும்
நாய்களும் தங்கள் குணத்தாலே.
இரை கிடைத்தாலும், இல்லையென்றாலும்
உறவை வளர்க்கும் காக்கைகளே!
இனத்தை இனமே வெறுப்பதெல்லாம்
மனிதன் வகுத்த வாழ்க்கையிலே!"

ஆவி காணாமல் போய்விட்டது. ஜில்லென்று ஆறிப்போன தேநீரை களைப்புத் தீர அருந்துகிறார் காதிலை பூ கந்தசாமி.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(OD/24/NEWS/96)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசிய அதை எங்களது வண்ண நகை மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


# பாய்ந்தால் பதக்கம்





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11


ஒலிம்பிக் போட்டிகளில் பார்வையாளர்களைக் கவரும் விளையாட்டுகளில் ஒன்று தடை தாண்டும் குதிரைச் சவாரி.

சாதாரணமாக குதிரைமீது சவாரி செய்வதை விட கஷ்டமானது இது.

குறுக்கே இரும்புத் தடைகள் வைக்கப்பட்டிருக்கும். குதிரையின் கால் குளம்புகள் இரும்புத் தடைகள்மீது மோதுப்பட்டால், சவாரி செய்பவர் தூக்கிவீசப்படுவார்.

இம்முறை ஒலிம்பிக்கிலும் குதிரை ஒன்று இரும்புக்குழாயில் மோதியது. வெற்றியைத் தழுவி பதக்கம் பெறும் ஆர்வத்தோடு சவாரி செய்தவர் தடுமாறிப்போனார். ஆனாலும் பிடியை விடவில்லை.

குதிரையைச் சமாளிக்கப் பயிற்சி மட்டும் இருந்தால் போதாது. சமயோசிதப்புத்தியும் வேண்டும். எந்த விளையாட்டுக்கும் அது பொருந்தும்.

# அழகால் இலாபம்

கஷ்மிதா சென்- இந்த முன்னாள் உலக அழகி இப்போது சர்ச்சைகளில் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறார்.

அமிதாப்பச்சனின் படம் ஒன்றிலாவது அவரது ஜோடியாக நடித்துவிட்டால், பின்னர் மளமளவென்று புகழேணியில் ஏறிவிடலாம். அதற்காக எந்தத் தியாகம் செய்யவும் கஷ்மிதா சென் தயார்தான். அமிதாப்பச்சன் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை.

இதற்கிடையே வெளிநாட்டுக் கோடீஸ்வரர்கள் சிலர் தங்கள் விருந்துபசார நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்க கஷ்மிதாவை அழைக்கிறார்கள். கஷ்மிதாவும் மிக இரகசியமாக சென்று திரும்புகிறார்.

முன்னாள் உலக அழகி என்ற பெயரில் தூக படிவதற்கு முன்னர் பிழைத்துக் கொண்டால்தான் புத்திசாலித்தனம் என்று நினைக்கிறார்.

தன்னை நோக்கிய கவன ஈர்ப்புக்கு கஷ்மிதா சென் கையாளும் மற்றொரு தந்திரம், பத்திரிகைப் பேட்டிகள். பேட்டிகளில் 'செக்ஸ்' பற்றியெல்லாம் விலாவாரியாகப் பேசுகிறார் கஷ்.



# பாதணிச் சொத்து



பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபரும், சர்வாதிகாரியுமான மார்க்கோஸின் மனைவி இமெல்டா இவர்தான். பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜெயலலிதா என்றும் சொல்லலாம். அந்தளவுக்கு இவர்மீது ஏராளமான ஊழல் குற்றச்சாட்டுக்கள். மார்க்கோஸ் இறந்துபோனார். மனைவி மாட்டிக்கொண்டு முழிக்கிறார்.

சர்வாதிகாரி மாக்கோசும், மனைவி இமெல்டாவும் 1986 வரை பிலிப்பைன்ஸ் நாட்டையே தூக்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். 1986 இல் மக்கள் சக்தி இயக்கம் வெடித்தெழ, இருவரும் பதவியைவிட்டு தப்பி ஓடினார்கள்.

இருவரும் அமெரிக்காவுக்கு ஓடிய பின்னர் அவர்களது மாளிகைக்குள் புகுந்து சோதனை நடத்தப்பட்டது. சோதனை நடத்தியவர்களுக்கு அதிர்ச்சி.

மாளிகையின் ஒரு பெரும் பகுதியை இமெல்டாவின் பாதணிகள் (செருப்புக்கள்) நிறைத்திருந்தன.

பொறுமையாக எண்ணிமுடிக்க பல நாட்களாகிவிட்டன. மொத்தம் மூவாயிரம் சோடி பாதணிகள்! (மயக்கம் போட்டு விழுந்துவிடாதீர்கள்)

மார்கோஸ் செத்தபின்னர் 1991ல் பிலிப்பைன்சுக்கு திரும்பிய இமெல்டாவிடம் இத்தனை பாதணிகள் எப்படி சேர்த்தீர்கள்? என்று விசாரணை நடந்தது. அதற்கு இமெல்டா சொன்ன பதில் என்ன தெரியுமா? "நான் என்ன செய்வது. மக்கள் என்மீது கொண்ட அனுதாபத்தால் அழகான பாதணிகளை கொண்டுவந்து பரிசாக தந்தார்கள். மறுக்க முடியுமா? வாங்கி அடுக்கி வைத்தேன்." என்றுவிட்டார். சுத்தமான பொய் அது.

கணவனும் மனைவியும் கையாடிய சொத்து மதிப்பு 10 பில்லியன் டொலர் என்று மதிப்பிடப்படுகிறது. நாட்டை சுரண்டி சுவிஸ் வங்கியில் போட்டிருந்த 47 1/2 கோடி டொலர் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டு வழக்கு நடந்தாலும் தனது ஆடம்பர மாளிகையில் வசிக்க இமெல்டா அனுமதிக்கப்பட்டுள்ளார். 100 ஏக்கர் காணியில் உள்ள அந்த மாளிகையில் 21 படுக்கை அறைகள் இருக்கின்றன.

இமெல்டாவுக்கு 67 வயது. இப்போதும் ஆடம்பர பிரியையாகவே இருக்கிறார்.



# ஆழ்கடல் அதிசயம்

படத்தில் காணப்படுவது அபூர்வமான ராட்சத மீன். கடலுக்குள் 3 ஆயிரம் அடி ஆழத்தில்தான் இந்தமாதிரியான ராட்சத மீன்கள் வாழ்க்கின்றன. கடலுக்கு மேற்பரப்பில் வந்தால் இது உயிரை விட்டுவிடும். அமெரிக்க கலிஃபோர்னியா கடற் பரப்பில் மேலே வந்த இந்த இராட்சத மீனும் செத்துவிட்டது. அதனை கரைக்கு கொண்டுசெல்ல கடும் போராட்டம் நடத்துகிறார் ஒருவர். இந்த மீனின் நீளம் 18 அடி. வெள்ளி நிற உடம்பு. 4 அடி சுற்றளவு. ஸ்கொட்லாந்து கடலில்தான் இது போன்ற ஆபூர்வ மீன்கள் இருக்கின்றன. அமெரிக்கக் கடலில் இந்த மீன் வந்தது எப்படி என்று இப்போது ஆராய்ச்சி நடக்கிறது.


படிப்பகம்